சிவமயம்.

தேவாலயத் திருவிழாத் தத்துவத்தெளிவு,
எசுர்வேத சிவலிங்கப்ரதிட்டை, இலிங்காட்டகம்,
என்பவைகளுடன் கூடிய

# திருவொற்றியூர்த் தலபுராண சாரம்.

இஃது,

வேத மொழிபெயர்ப்பாசிரியர்
காசிவாசி. சிவானந்த யதீந்திர சுவாமிகளால்
இயற்றப்பெற்று,

சென்னை
திருவொற்றியூரான் அடிமை யென்னும்
த. ப. இராமசாமிப் பிள்ளை யவர்களால்
தமது
வேத மொழிபெயர்ப்புக் காரியாலத்தில்
வெளியிட்டு

தாம்செய்த
திருவொற்றியூர் மகா கும்பாபிஷேகத்தில்
நன்கொடையாக
அளிக்கப்பெற்றது.

1936.

எவரெடி பிரஸ்,
சூளை, மதராஸ்

உ

திருச்சிற்றம்பலம்.

தஞ்சை எஸ். பீ. ஜி. உயர்தரக் கல்லூரித் தமிழாசிரியரும்,

தஞ்சைச் சைவ சித்தாந்தசபை விரிவுரையாளரும்,

தஞ்சைச் சைவ சித்தாந்த இளைஞர் சங்கம்

நிறுவிய, துங்கருமாகிய

திரு. வித்வக்களஞ்சியம், பா. சிவகுருநாத பிள்ளை

அவர்களியற்றிய

சிறப்புப் பாயிரம்

## அகவற்பா.

உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
இலகிய வாதி புரிமுத லாகப்
பலதிருப் பெயராற் பரவுதற் கியைந்த
திருவொற்றி யூரின் சிறந்தமான் மியத்தை
மஞ்சிவர் இஞ்சித் தஞ்சைமா நகரைச்
சார்கருந் திட்டைக் குடியெனச் சாற்றும்
நன்னகர் செய்த நலமிகு தவமெனத்
தாளாண்மை மிக்க வேளாண் மரபிற்
பன்னருங் குணமார் பஞ்ச நதப்பேர்த்
தோன்றல் தனக்குச் சுந்தரப் பேர்கொள்
அருந்ததி யேபோன் மம்மைதன் வயிற்றில்
வலம்புரிப் பிறந்த நலம்புரி முத்தென
வந்தவ தரித்த வரமிகு முரவோன்

தானந் தவம்பொறை சற்குண மடக்கம்
ஞான முதலா நலமெலா முற்றோன்
மன்னிய சென்னை மாநகர் வாழ்வோன்
இருநிதிக் கோனென எழிற்றிரு வேய்ந்தோன்
அதா அன்று
திருவொற்றி யூரன் றிருவடி நாளும்
மருவிய மனத்து மறவா திருப்போன்
வேத முதலா வியன்கலை யாவும்
ஓதி யுணர்ந்திங் குரைக்கு நாவோன்
நான்மறை தன்னை நலமிகு தமிழில்
மேன்மையின் மொழிபெயர்ப் பித்தநல் வித்தகன்
ஆரியத் தொடுசெந் தமிழ்க்கலை யாவையும்
ஓதி யுணர உயர்கல் லூரி
வைத்து நடாத்தி வருமா ணவர்க்கெலாம்
உண்டி யுறையுள் உடைமுத லெவையும்
தந்து வளர்க்குந் தரும சீலன்
தேசார் தருசிவ பூசா துரந்தரன்
தன்னே ரிராம சாமி வள்ளல்
தானே,
ஒற்றித் திருத்தளி நற்றிருப் பணியை
கற்பணி பொற்பணி கவினிய செய்து
மன்னிய தாது வருடவை சாசிப்
பன்னிய தெய்தி பதினெட் டாதி
வாரநன் னளில் மகாகும் பாபி
டேகஞ் சிறப்பாச் செய்துறு போழ்தில்
சொற்பணி யுஞ்செயத் தாய்மனங் கொண்டனன்
அதனல் ;
யாவரும் ஓதி மேவரும் பேறுறத்
தண்டமிழ் மொழியிற் சுருக்கித் தருகென

முன்னிய வன்பின் மொழிந்தன னாகப்,
பன்னூ லாய்ந்து பகர்தல மான்மியத்
தோடுபல் பொருளு முலகின ரறியத்
தெள்ளிய நடையில் திறம்பட வெழுதி
அச்சிட் டெவர்க்கும் அன்பொடவ் வள்ளல்
உதவநன் கொடையா உளுற்றுதல் செய்தான்

அவனே,

பல்வள மெல்லாம் பாரினில் ஓங்கச்
செல்வதி மாடத் திருமறைக் காட்டைச்
சேர்தரு மாயக் காரன் புலமெனச்
செப்புறு சீரூர்த் திப்பிய அகமுடை
யார்தம் மரபிற் பேர்மிகு சாமித்
தேவர்தந் தவத்தால் திருத்தகு மனைவி
மதுரம் மாள்திரு வயிற்றவ தரித்தே
எல்லாக் கலையு மெல்லா மதமும்
எல்லா நாளும் இயைபுறக் கற்று
பொல்லாங் ககன்ற புரைதபு முளத்தோன்
நல்லார் துதிபயில் நலமுறு நயத்தோன்
சங்கர திக்கு விசயநூல் கண்டோன்

அதாஅன்று,

வேதந் தன்னை விளங்குசெந் தமிழில்
பெயர்த்தளித் தருளிய பேருப காரி
மாற்கரு மருகனும் வேற்கரத் தெம்மான்
அடியிணை மறவா முடிபுனை மேலோன்
அருந்தவ மிக்க பெருந்திற லாளன்
மாசிலாப் புகழிற் காசி வாசி
எனுஞ்சிவா னந்த யதீந்த்ர
நற்றிரு நாமம் நயந்த மாதவனே.

முற்றிற்று.

ஓம்

# கிருஷ்ண எசுர் வேதப்

## தைத்திரீய ஆரண்யகம்.

### பத்தாவது பிரபாடகத்தில்,

### பதினாறுவது அநுவாகம்.

### சாயணபாடிய அவதாரிகை.

இனி, புதிதாக ஆலயங்கட்டி அதில் இலிங்கப்பிரதிட்டை செய்யும்போதும், நாடோறும் மண் இலிங்கத்தைப் பிரதிட்டை செய்யும்போதும் விநியோகப்படுகின்றவைகளும், பாவ நிவிர்த்தியின் பொருட்டும் பார்வதி கொழுநனது வணக்கத்தின் பொருட்டும், சொல்லப்படுகின்றவைகளுமான மந்திரங்கள்:—

निधनपतये नमः । निधनपतान्तिकाय नमः । ऊर्ध्वाय नमः । ऊर्ध्वलिङ्गाय नमः । हिरण्याय नमः । हिरण्यलिङ्गाय नमः । सुवर्णाय नमः । सुवर्णलिङ्गाय नमः । दिव्याय नमः । दिव्यलिङ्गाय नमः । भवाय नमः । भवलिङ्गाय नमः । सर्वाय नमः । सर्वलिङ्गाय नमः । शिवाय नमः । शिवलिङ्गाय नमः । ज्वलाय नमः । ज्वललिङ्गाय नमः । आत्माय नमः । आत्मलिङ्गाय नमः । परमाय नमः । परमलिङ्गाय नमः । एतत् सोमस्य सूर्यस्य सर्वलिङ्गꣳ स्थापयति पाणि मन्त्रं पवित्रम् । इति ॥

பதவுரை.

**निधनपतये नमः** - இயற்கையில் அளவற்ற தனங்களையுடைய குபேரனாகிய மலைமகள் கொழுநனுக்கு வணக்கம்.

**निधनपतान्तिकाय नमः** - அன்பர்கட்கு அருகிலிருந்து தனங்களைப் பாதுகாக்கின்ற மலைமகட் கிறைவனுக்கு வணக்கம்.

**ऊर्ध्वाय नमः** - மேலுலகங்களில் தேவதைகளாக இருக்கின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.

**ऊर्ध्वलिङ्गाय नमः** - மேலுலகங்களில் தேவர்களால் இலிங்க வடிவாய்த் தாபித்துப் பூசிக்கப் பெறுகின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.

**हिरण्याय नमः** - (எல்லாமாயிருத்தலின்) பொன் வடிவனாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**हिरण्यलिङ्गाय नमः** - பொன்னாற் செய்யப்பெற்ற இலிங்கமயனாகிய பார்வதி கொழுநனுக்கு வணக்கம்.

**सुवर्णाय नमः** - அழகிய காந்தியையுடைய வெள்ளி வடிவனாகிய பார்வதி கொழுநனுக்கு வணக்கம்.

**सुवर्णलिङ्गाय नमः** - வெள்ளியாற் செய்யப்பெற்ற இலிங்க மயனாகிய பார்வதி கொழுநனுக்கு வணக்கம்.

ஈண்டுப் பொன்னானது மேலே சொல்லப்பட்டதால் 'சுவர்ணம்' என்பது வெள்ளியைக் குறித்து நிற்கின்றதென்றுணர்க.

**दिव्याय नमः** - சுவர்க்க இன்ப வடிவனாகிய பார்வதி கொழுநனுக்கு வணக்கம்.

**दिव्यलिङ्गाय नमः** - இந்திரன் முதலானோர்களால் சுவர்க்கலோகத்தில் தாபிக்கப்பட்ட இலிங்க வடிவனாகிய பார்வதி கொழுநனுக்கு வணக்கம்.

**भवाय नमः** - சம்சார வடிவனாகிய பார்வதி கொழுநனுக்கு வணக்கம். அல்லது, பிரமாண்டத்தைத் தோற்றுவிக்கின்றவனுக்கு வணக்கம்.

**भवलिङ्गाय नमः** - மக்களால் மண்ணுலகில் தாபித்துப் பூசிக்கப் பெறும், கல் முதலான இலிங்கவடிவனாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**सर्वाय नमः** - பிரளயகாலத்தில் பிரமாண்டத்தை இலயப்படுத்துகின்ற பரமேசுரனுக்கு வணக்கம். அல்லது, பேரானந்தத்தை யடைகின்றவனுக்கு வணக்கம்.

**सर्वलिङ्गाय नमः** - ஆனந்த மயமென்னும் இலிங்கவடிவனாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**ज्वलाय नमः**—சோதி மயனாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**ज्वललिङ्गाय नमः** - மண்ணுலகிலுள்ள பன்னிரண்டு சோதிலிங்க வடிவனாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**आत्माय नमः** - எல்லா உலக வடிவனாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**आत्मलिङ्गाय नमः** - உள்ளக் குகையிலொளிரும் மெய்ப்பொருளை யுணர்த்துகின்ற எல்லாவுயிர் வடிவனாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**परमाय नमः** - அனைத்தினுஞ் சிறந்தோனாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**परमलिङ्गाय नमः** - உலகைக் காக்கின்றவனும், முத்தியின்பனும், முழுதும் உணர்கின்றவனுமாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**एतत्सोमस्य सूर्यस्य सर्वलिङ्गं स्थापयति पाणिमन्त्रं पवित्रम् ॥** இம்மந்திரங்களால், எல்லாத் தேவதைகளுக்குங் காரணமெனப் படும், ரசம், பொன் முதலானவைகளாற் செய்யப்பெற்ற, இலிங்கங்க ளனைத்தும் தாபிக்கப் படுகின்றன.

கிருஷ்ண எசுர் வேதத்தின்
தைத்திரீய ஆரண்யகத்திலுள்ள
பத்தாம் பிரபாடகம் நாராயண வுபநிடத்தில்
பதினாறும் அநுவாகம் முற்றிற்று.

---

## பதினேழாம் அநுவாகம்.

ஞானம் உதித்தற்பொருட்டு மகா தேவருடைய ஐம் முகங்களுள் மேற்கு முகத்தைக் கூறும் மந்திரம்:—

सद्योजातं प्रपद्यामि सद्योजाताय वै नमो नमः ।
भवे भवे नाति भवे भवस्व माम् । भवोद्भवाय नमः ॥

### பதவுரை.

**सद्योजातं** - மேற்குத் திருமுகமாகிய சத்யோசாதமென்னும் பரமேசுரனை,

**प्रपद्यामि** - இனிது சரண் அடைகின்றேன்.

**सद्योजाताय** - அத்தகைய சத்யோசாத பரமேசுரன் பொருட்டு,

**नमो नमः** - வணக்கம் உரியதாகுக.

**भवे भवे** - (பரமேசுர!) அவ் வப்பிறப்பில்,

**(मां) न भवस्व** - என்னைச் செலுத்தா தருள்வை. மற்றோ,

**अतिभवे** - பிறப்பறுக்கும் வகையில்,

**भवस्व** - என்னைச் செலுத்துவாயாக.

**भव उद्भवाय** - பவத்தினின்று கரையேற்றும் சத்தியோசாத பரமேசுர! உனக்கு

**नमः** - (எனது) வணக்கம் உரியதாகுக.

சாயணபாடியக் கருத்து.

பஞ்சமுகங்களுள் அநுக்கிரகத்திற்கு மிக உரிய சத்தியோசாத முகமாகிய பரமேசுரனைச் சரணடைந்து வணங்குகின்றேன். சத்யோசாதனே! நீ, என்னைப்பிறப்பிற்கு ஆளாக்காதே, மற்ருே, பிறப்பொழிந்து உய்யும் வழியிற் செலுத்தியருள்வாயாக என்பதாம்.

பதினேழாம் அநுவாகம் முற்றிற்று.

---

## பதினெட்டாம் அநுவாகம்.

பரசிவனது வடக்குத் திருமுகத்தைக் கூறுகின்ற மந்திரம்:—

वामदेवाय नमो ज्येष्ठाय नमः श्रेष्ठाय नमो रुद्राय नमः कालाय नमः कलविकरणाय नमो बलविकरणाय नमो बलाय नमो बलप्रमथनाय नमः । सर्वभूतदमनाय नमो मनोन्मनाय नमः ॥

பதவுரை.

**वामदेवाय** - அழகுடையதும், ஒளியுடையதுமாகிய வடக்குமுகமென்னும் வாமதேவ முகத்தையுடைய பரமேசுரனுக்கு,

**नमः** - (எனது வணக்கம்) உரியதாகுக.

**ज्येष्ठाय नमः** - உலகனைத்தும் உதிப்பதற்குமுன் உள்ள பரமேசுரனுக்கு வணக்கம்.

**श्रेष्ठाय नमः** - மிகச்சிறப்புற்ற பரமேசுரனுக்கு வணக்கம்.

**रुद्राय नमः** - பிரளயத்தில் அனைத்துயிர்களையும் அழச்செய்கின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.

**कालाय नमः** - உயிர்களின் ஆயுள்களைக் குறைக்கின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.

**कलविकरणाय नमः** - விளையாட்டால் பல்வகை உலகை உண்டாக்குகின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.

**बलविकरणाय नमः** - துட்டர்களின் வலியை யழிக்கின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.

**बलाय नमः** - வன்மை யனைத்திற்குங் காரணமாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

**बलप्रमथनाय नमः** - எல்லா வல்லமைகளையும் ஒடுக்குகின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.

**सर्वभूतदमनाय नमः** - எல்லாப் பூதங்களையும் அடக்கியாளுகின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.

**मनोन्मनाय नमः** - அனைத்தையும், பொது வகையானும், சிறப்பு வகையானும் அறிகின்ற பரமேசுரனுக்கு வணக்கம் உரியதாகுக.

சாயண பாடியக் கருத்து.

அழகியதும், பிரகாசமுடையதுமாகிய வாமதேவம் என்னும் வடக்குத் திருமுகத்தை யுடையவரும், மிகப்பழையவரும், மிகச்சிறந்தவரும், உயிர்களைச் சம்மரிக்கின்றவரும், உயிர்களுக்குக் காலனுயிருப்பவரும், பல்வகையாய் உலகைத் தோற்றுவிப்பவரும் தீயோர்களின் வன்மையைச் சிதைப்பவரும், எல்லாம் வல்லவரும், எல்லா வலிகளைக் கெடுப்பவரும், எல்லாவற்றையும் அடக்கியாளுபவரும், சருவக்ஞரும், சருவ

வித்தகருமாகிய வாமதேவத் திருமுகமுடைய பரமேசுரரை யான் பன்முறை வணங்குகின்றேன் என்பதாம்.

பதினெட்டாம் அநுவாகம் முற்றிற்று.

---

## பத்தொன்பதாம் அநுவாகம்.

தெற்குத் திருமுகத்தைக் கூறுகின்ற மந்திரம்:—

अघोरेभ्योऽथ घोरेभ्यो घोरघोरतरेभ्यः ।
सर्वेभ्यः सर्वसर्वेभ्यो नमस्ते अस्तु रुद्ररूपेभ्यः ॥

பதவுரை.

**अघोरेभ्यः** - 'அகோரம்' என்னும் தக்ஷிண முகத்தையுடைய பரமேசுரனது சத்துவகுண விக்கிரகங்களென்பதனுள் எவை சாந்தமானவைகளோ,

**अथ घोरेभ्यः** - இரசோ குண வடிவங்களான எந்த, கோர விக்கிர கங்களோ,

**घोर घोरतरेभ्यः** - தமோ குண விக்கிரங்களான மிகுந்த கோர வடிவங்கள் எவைகளோ,

**ते सर्वेभ्यः**- (பிரளயத்தில் சம்மாரஞ்செய்கின்ற) அந்த எல்லா வடிவங்களாகய் விளங்குகின்ற

**रुद्रेभ्यः** - உருத்திரர்களுக்கு

**सर्वेभ्यः** - யாண்டும் எக்காலத்தும்.

**नमः अस्तु ॥** - வணக்கம் உரியதாகுக.

சாயணபாடியக் கருத்து,

சாந்தமானவைகளும், கோரமானவைகளும், மிகக்கோர மானவைகளுமான உருத்திர வடிவங்களை வணங்குகின்றேன் என்பதாம்.

பத்தோன்பதாம் அநுவாகம் முற்றிற்று.

---

## இருபதாம் அநுவாகம்.

பரசிவனது கிழக்குத் திருமுகத்தைக் கூறும் மந்திரம் :—

तत्पुरुषाय विद्महे महादेवाय धीमहि ।
तन्नो रुद्रः प्रचोदयात् ॥

பதவுரை.

**तत्पुरुषाय** - கிழக்கு முகமுடைய தத்புருடனென்னும் பரமேசுரனை

**विद्महे** - உணர்கின்றோம்.

**महादेवाय** - (உணர்ந்து) அத்தகைய மகா தேவனை,

**धीमहि** - சிந்திக்கின்றோம்.

**तत्** - ஆகையால்.

**रुद्रः** - உருத்திர தேவன்,

**नः** - எங்களை.

**प्रचोदयात् ॥** - தியானஞ் செய்யவும் ஞானத்தை யடையவும், இனிது செலுத்துவானாக.

சாயணபாடியக் கருத்து.

யாம், தத்புருட முகத்தையுடை உருத்திர பரமேசுரனை யறிந்து தியானஞ் செய்கின்றோம். ஆதலின் எம்மை, அவ்

வுருத்திர பரமேசுரன் தியானிக்கவும், ஞானத்தைப் பெறுதற்கும் ஏவுவானுக என்பதாம்.

இருபதாம் அநுவாகம் முற்றிற்று.

---

## இருபத்தோராம் அநுவாகம்.

பரமேசுரனது மேற்குத் திருமுகத்தைக் கூறுகின்ற மந்திரம்.

ईशानः सर्वविद्यानामीश्वरः सर्वभूतानां ब्रह्माधिपतिर्ब्रह्मणोधिपतिर्ब्रह्मा शिवो अस्तु सदाशिवोम् ॥

பதவுரை.

**ईशानः** - மேற்குத் திருமுகத்தையுடைய பரமேசுரன்.

**सर्वविद्यानां** - எல்லா வித்தைகளையும்,

**ईश्वरः** - நியமஞ் செய்கின்றவன்.

**सर्वभूतानां** - (அவ்வாறே) எல்லாவுயிர்களையும்.

**(ईश्वरः)** - (நியமஞ் செய்கின்றவன்.)

**ब्रह्म** - வேதத்தை.

**अधिपतिः** - இனிது காக்கின்றவன்.

**ब्रह्मणः** - இரணிய கருப்பனையும்.

**अधिपति** - நன்கு பரிபாலிக்கின்றவன்.

**ब्रह्मा** - அத்தகைய பெரும்பொருள் (பரமான்மா.)

**मे** - எனக்கு.

**शिवः** - அநுக்கிரகித்தற் பொருட்டு சாந்தவடிவராக,

**अस्तु** - இருப்பாராக.

**सदाशिवोम्** - அத்தன்மையாகிய சதாசிவம் நான் ஆகின்றேன்.

சாயணபாடியக் கருத்து.

எல்லாவித்தைகட்குக் காரணனும், அனைத்தையும் அடக்கியாளுகின்றவனும், வேதம், இரணிய கருப்பன் என்பவற்றைப் பரிபாலிக்கின்றவனுமாகிய ஈசான பரமேசுரனாகிய பரமான்மா, எனக்கு அருள் புரிதற்பொருட்டுச்சாந்த மூர்த்தியாகுக என்பதாம்.

இருபத்தோராம் அநுவாகம் முற்றிற்று.

---

## இருபத்திரண்டாம் அநுவாகம்.

மீண்டும் உருத்திர பரமேசுரனைக் கூறுகின்ற மந்திரம்.

**नमो हिरण्यबाहवे हिरण्यवर्णाय हिरण्यरूपाय हिरण्यपतये-ऽम्बिकापतय उमापतये पशुपतये नमो नमः ॥**

பதவுரை.

**उमापतये** - உமா தேவியின் கொழுநனும்,

**अम्बिकापतये** - அம்பிகையின் மணவாளனும்,

**हिरण्यपतये** - பொன் முதலான நவநிதிகளையும் பரிபாலிப்பவனும்.

**हिरण्यरूपाय** - சோதி வடிவனும்.

**हिरण्यवर्णाय** - பொன் போன்ற திருமுகத்திலிருந்து வேத எழுத்துக்களை யுண்டாக்கியவனும்.

**हिरण्यबाहवे** - பொன் போன்ற திருக்கர முதலான அவயவங்களை யுடையவனும்.

**पशुपतये** - பிரமன் முதல் தம்பம் ஈறான பசுக்களுக்கு பதியு (இறைவனு) மாகிய (பரமசிவனுக்கு)

**नमः** - வணக்கம்.

சாயண பாடியக் கருத்து.

உமாகொழுநனும், அம்பிகா மணவாளனும், நவநிதிக்குப் பாதுகாப்பாளனும், ஒளி வடிவனும், பொன்போன்ற மறைமொழிகளைத் தோற்றுவித்தவனும், பொன்போன்ற திருக் கை முதலான அவயவங்களை யுடையவனும் பிரமன் முதலான பசுக் கட்கு இறைவனுமாகிய பரசிவனை வணங்குகின்றேன் என்பதாம்.

இருபத்திரண்டாம் அநுவாகம் முற்றிற்று.

---

## இருபத்து மூன்றும் அநுவாகம்.

முன்னர்க் கூறியபடி உபாசிகனது வணக்கத்தின் பொருட்டும், ஒரு மந்திரங் கூறப்படுகின்றது.

ऋतꣳसत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिङ्गलम् ।
ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वै नमो नमः ॥

பதவுரை.

परं ब्रह्म - பரப்பிரமமானது

ऋतं सत्यं - முழுதுஞ் சத்தியமாம்.

पुरुषं - பரசிவ வடிவானது

कृष्णपिङ्गलं - வலது பாகத்தில் (சிவபாகத்தில்) கறுப்பும், இடப் பாகத்தில் (உமாபாகத்தில்) பிங்கல நிறமாகவும் இருக்கும்.

ऊर्ध्वरेतं - அவ்வடிவம், தனது சுக்லத்தை பிரமரந்தரத்தில் நிறுத்தியதாகும்.

विरूपाक्षं - முக்கண் ஆனதால் அழகிலாத கண்களையுடையதுமாம்.

**विश्वरूपाय** - அத்தகைய பரமேசுர வடிவால் உலகாகிய பரமேசுரனுக்கு

**वै नमः नमः** - பன்முறை வணக்கங்கள் உரியனவாகுக.

சாயணபாடியக் கருத்து.

அத்யந்த உண்மைப் பொருளானது பரப்பிரமம், மற்றும், அருட்டிரு மேனிகொண்ட பரசிவன், கருமை மஞ்சள் வடிவனும், சுக்கிலத்தைப் பிரமரந்திரத்தில் ஏற்றியவனும், முக்கண்களை யுடையவனுமாவன். அத்தகைய உலகவடிவ பரமேசுரனுக்கு பன்முறை வணக்கம் என்பதாம்.

இருபத்து மூன்றும் அநுவாகம் முற்றிற்று.

---

## இருபத்து நான்காம் அநுவாகம்.

மற்றும் உருத்திர பரமேசுரனைக் கூறுகின்ற மந்திரம்.

सर्वो वै रुद्रस्तस्मै रुद्राय नमो अस्तु ।
पुरुषो वै रुद्रः सन्महो नमो नमः ।
विश्वं भूतं भुवनं चित्रं बहुधा जातं जायमानंच यत् ।
सर्वो ह्येष रुद्रस्तस्मै रुद्राय नमो अस्तु ॥

பதவுரை.

**रुद्रः वै** - பார்வதி கொழுநனாகிய உருத்திர பரமேசுரனே,

**सर्वः** - எல்லா வுயிர்களா யிருக்கின்றான்.

**तस्मै रुद्राय** - எல்லாமாகிய அவ்வுருத்திர பரமேசுரனுக்கு,

**नमो नमः** - வணக்கம் உரியதாகுக.

**पुरुषः वै** - பிரகிருதி யொழித்த, சைதன்யமயனாகிய புருடனே

**रुद्रः** - அருள் செய்தற்குரிய உருத்திரனுகின்றுன்.

**सन्महः** - ஆதலின், உண்மைப்பொருள் பரம்பொருள்,

**नमो नमः** - அத்தகைய உருத்திர பரமேசுரனுக்கு பன்முறை வணக்கம்.

**विश्वं** - சட வடிவாயுள்ளவைகளும்.

**भूतं** - சேதன வடிவாயுள்ளவைகளும்

**बहुधा** - பலவகையாக

**जातं** - உண்டானவைகளும்

**जायमानं च** - உண்டாகின்றவைகளுமான

**चित्रं विश्वं** - வைசித்திரிய சடவடிவ உலகங்களும்,

**भूतं** - சைதன்ய வடிவ உலகங்களும்

**भुवनं यत्** - சித்துச்சட வடிவமுமான, எவ்வுலகங்கள் உண்டோ,

**सर्वः** - அவைகளெல்லாம்

**एष रुद्रः** - இவ்வுருத்திரவடிவங்களேயாம்.

**तस्मै रुद्राय** - அத்தகைய வுருத்திரனுக்கு

**नमः अस्तु** - வணக்கம் உரியதாகுக.

சாயணபாடியக் கருத்து.

எல்லாமாயுள்ள உருத்திர பரமேசுரனுக்கு வணக்கம் என்பதாம்.

கிருஷ்ண எசுர் வேதம், தைத்திரீயாரண்யகம், பத்தாம் பிரபாடகம், நாராயணீய பரமாகிய யாக்ஞீய உபநிடதத்தில் இருபத்து நான்காம் அநுவாகம்

இருபத்து நான்காம் அநுவாகம் முற்றிற்று.

## இருபத்தைந்தாம் அநுவாகம்.

कद्रुद्रायप्रचेतसे मीढुष्टमाय तव्यसे ।
वोचेम सन्तमं हृदे ॥ १ ॥

பதவுரை.

प्रचेतसे - முற்றுணர்வுடையவனும்.

मीढुष्टमाय - நலங்களனைத்தையும் அளிக்கின்றவனும்.

तव्यसे - மிகப்பெரியோனும்.

हृदे - உள்ளத்திலிருக்கின்றவனுமாகிய,

रुद्राय - உருத்திரபரமேசுரனுக்கு,

शंतमं - விருப்பம் மிகுந்த துதியை,

कत् - எப்போது "

वोचेम - சொல்லுவோம்?

('கத்' என்பது போற்றுதல் என்பதன் மேற்று.)

சாயணபாடியக் கருத்து.

முற்றுமறிகின்றவனும், வேண்டிய வெலாம் அளிக்கின்றவனும், நெஞ்சில் நீங்காதிருக்கின்றவனுமாகிய உருத்திர பரமேசுரனை, இனியதுதியால் எப்போது துதிப்போமோ? என்பதாம்.

இருபத்தைந்தாம் அநுவாகம் முற்றிற்று.

## ॥ लिङ्गाष्टकम् ॥

ब्रह्ममुरारि सुरार्चितलिङ्गं निर्मलभाषित शोभितलिङ्गम् ।
जन्मजदुःख विनाशकलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥ १ ॥
देवमुनि प्रवरार्चितलिङ्गं कामदहं करुणाकरलिङ्गम् ।
रावणदर्प विनाशनलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥ २ ॥
सर्वसुगन्धि सुलेपितलिङ्गं बुद्धिविवर्धन कारणलिङ्गम् ।
सिद्धसुरासुर वन्दितलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥ ३ ॥
कनकमहामणि भूषितलिङ्गं फणिपतिवेष्टित शोभितलिङ्गम् ।
दक्षसुयज्ञ विनाशनलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥ ४ ॥
कुंकुमचन्दन लेपितलिङ्गं पङ्कजहार सुशोभितलिङ्गम् ।
सञ्चितपाप विनाशनलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥ ५ ॥
देवगणार्चित सेवितलिङ्गं भावैर्भक्तिभिरेवच लिङ्गम् ।
दिनकरकोटि प्रभाकरलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥ ६ ॥
अष्टदलोपरि वेष्टितलिङ्गं सर्वसमुद्भव कारणलिङ्गम् ।
अष्टदरिद्र विनाशितलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥ ७ ॥
सुरगुरुसुरवर पूजितलिङ्गं सुरवनपुष्प सदार्चितलिङ्गम् ।
परात्परं परमात्मकलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥ ८ ॥
लिङ्गाष्टकमिदं पुण्यं यः पठेच्छिवसन्निधौ ।
शिवलोकमवाप्नोति शिवेन सह मोदते ॥ ९ ॥

इति श्रीलिङ्गाष्टकस्तोत्रं सम्पूर्णम् ॥

## 8. தமிழ் லிங்காஷ்டகம்.

1. பிரஹ்ம முராரி சுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜதுக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமி சதாசிவ லிங்கம்

2. தேவ முநிப்ர வரார்ச்சித லிங்கம்
காம தஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசித லிங்கம்
தத் ப்ரணமி சதாசிவ லிங்கம்

3. சர்வ சுகந்தி சுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
சித்த சுராசுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமி சதாசிவ லிங்கம்

4. கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ சுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமி சதாசிவ லிங்கம்

5. குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார சுசோபித லிங்கம்
சஞ்சித பாவ விநாசன லிங்கம்
தத் ப்ரணமி சதாசிவ லிங்கம்

6. தேவக ணார்ச்சித சேவித லிங்கம்
பாவைః பக்திபி ரேவச லிங்கம்
தினகர கோடி பிரபாகர லிங்கம்
தத் ப்ரணமி சதாசிவ லிங்கம்

7. *அஷ்ட தளோபரி வேஷ்டித* லிங்கம்
*சர்வ சமுத்பவ காரண* லிங்கம்
*அஷ்ட தரித்ர விநாசித* லிங்கம்
*தத் ப்ரணமாமி சதாசிவ* லிங்கம்

8. *சுர குரு சுரவர பூஜித* லிங்கம்
*சுரவன புட்ப சதார்ச்சித* லிங்கம்
*பராத் பரம் பர மாத்மக* லிங்கம்
*தத் ப்ரணமாமி சதாசிவ* லிங்கம்

இலிங்காஷ்டகம் முற்றிற்று.

---

## ॥ द्वादशज्योतिर्लिङ्गानि ॥

सौराष्ट्रे सोमनाथं च श्रीशैले मल्लिकार्जुनम् ।
उज्जयिन्यां महाकाल मोंकार ममलेश्वरम् ॥ १ ॥

परल्यां वैजनाथं च डाकिन्यां भीमशंकरम् ।
सेतुबन्धे तु रामेशं नागेशं दारुकावने ॥ २ ॥

वाराणस्यां तु विश्वेशं त्रयम्बकं गौतमीतटे ।
हिमालये तु केदारं घुसृणेशं शिवालये ॥ ३ ॥

तानि ज्योतिर्लिङ्गानि सायं प्रातः पठेन्नरः ।
सप्तजन्मकृतं पापं स्मरणेन विनश्यति ॥ ४ ॥

इति द्वादशज्योतिर्लिङ्गानि ॥

## பன்னிரண்டு சோதி லிங்கங்கள்.

1. சோமநாத லிங்கம்—இது சௌராஷ்டிர தேசத்தில் உள்ளது.

2. மல்லிகார்ச்சுன லிங்கம்—இது தெலுங்கு தேசத்தி லுள்ளது, அதாவது ஸ்ரீ சைலத்திலுள்ளது.

3. மகாகாள லிங்கம்—இது அவந்தியில், அதாவது உச்சைங் என்னும் தலத்தில் இருப்பது.

4. அமலேசுர லிங்கம்—இது, காவேரி நர்மதை என்னும் நதிகளின் சங்கமத்தில் மாந்தாதாபுர மென்னும் ஓங்காரத்தில் உள்ளது.

5. வைத்திநாத லிங்கம்—இது பரலியில் உள்ளது.

6. நாகநாத லிங்கம்—இது தாருகாவனத்திலுள்ளது.

7. கேதார லிங்கம்—இது இமயகிரிசாரலில் உள்ளது.

8. திரியம்பகேசுரலிங்கம்—இது கோதாவரியின் உற்பத்தி ஸ்தானத்தில் (நாசிகைக்குப் பக்கத்தில்) இருப்பது.

9. இராமேசுர லிங்கம்—இது இராம சேதுவில் (இராமேசுரத்தில் உள்ளது.

10. பீமலிங்கம்—இது டாகினியில் உள்ளது.

11. விசுவநாதலிங்கம்—இது காசியிலுள்ளது.

12. குஸ்ருனேசுரலிங்கம்—இது இமாலயத்திலிருப்பது.

சோதிலிங்கங்கள் முற்றிற்று.

உ

# நான்முகம்.

வாவியெல்லாந் தீர்த்தம் மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்க ளெல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர்.

கடவுள், நெடுவான் கடுப்ப வடிவுடைப் பொருள், வடிவிலாப் பொருள்களனைத்திலும், மெய்ப்போதவின்பமாய் ஒற்றித்து நிற்கின்றவர்.

அவர் அருட் டிருமேனிகொண்டு, அன்பர் நிமித்தமாய் கண்ணீரும், ஆவின்பாலும் போன்று வெளிப்பட்டருளுகின்றவர்.

மற்றும், திருக்கோயிலின்கண்ணுள்ள சிவலிங்கத் திருமேனியையும், சிவனடியாரின் திருவேடத்தையும் பற்றிக்கொண்டு நின்று, மெய்த்தொண்டர் செய்யும் மிக்குள்ள புறவழிபாட்டை ஏற்றுக்கொண்டருளுகின்றார்.

சிவணுகிய ஆன்மவடிவாய் அகத்தினின்று உள் வழிபாட்டையும் உவந்து ஏற்றுகொண்டருளுகின்றார்.
இதையே,

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே, எனவும்,

- தாபர சங்கமங்க ளென்றிரண் டுருவினின்று
- மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்

எனவும், பிறவும், உண்மை நூல்கள் கூறுகின்றன.

இதனால், ஆன்மகோடிகட்கு அருள்செய்வான், தலம் மூர்த்தி, தீர்த்தங்களாக, தனிப்பெருங் கடவுளின், அருட் டிருமேனி விளங்கு மென்பது, அன்பும் அறிவுமுடைய மெய் யன்பர்களால் ஒருதலையாக உடன்படற்பாலதாம். இஃது எல்லா மதத்தார்களும் சம்மதமாய்க் கொள்ளப்பட்டுள்ள தென் பதும் உணரற்பாலது.

அற்றுகலினன்றே,

ஆண்டருளமலன் அநாதியிலுலக மாக்குழி
யருந்தலந் தீர்த்தம்
காண்டகு மூர்த்தி யென்ன மூன்றுருவாய்க்
கண்ணக னுலகெலாங் கதித்து,

என்று கூறுகின்றன உண்மை நூல்களும்.

இதனால், தலம், மூர்த்தி, தீர்த்தம் என்னும் மூன்றனை யும் சிவபெருமானுகவே கண்டு வழிபடுகின்றவர், பல நலங்க ளுடன் அழிவில் வீட்டையும் அடைவர் என்பது குறிப்பாகக் கொள்ளக்கிடந்தமை காண்க.

இதுபற்றியே,

மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும்.

என வெழுந்தது ஆன்ருேர் மொழியும்.

இம்மூன்றனுள், தலங்களோ எண்ணிறந்தன, அவற் றுள் சிவதலங்கள் சிறந்தன. இத்தகைய தலங்கள் ஆயிரத் தெட்டென்ப. அவற்றுள்ளும் நூற்றெட்டுத் தலங்கள் மிகச் சிறந்தன. அவைகளுள்ளும், அறுபத்தெட்டுத் தலங்கள் முழுதுஞ் சிறந்தன. அவற்றுள்ளும் பதினறு தலங்கள் சொல்லொணுத பெருமைவாய்ந்தன. அவற்றுள்ளும் திருவா ரூர் முதலான சத்த (ஏழு) விடங்கத் தலங்கள் பெரும் மகிமை

வாய்ந்தன. அவற்றுள்ளும், ஊழிமுதலில் தோன்றியதும், எல்லா மதத்தர்களாலும் வழிபடப் பெற்றதும், சோதிலிங்கமா யெழுந்தருளி யுள்ளதும், 'காரணிவிடங்கர்' என்னும் மாணிக்கத்தியாகர் அருணடம்புரிகின்றதுமாகிய ஆதிபுரி யென்னும் திருவொற்றியூரே கைலாய மென்னலாம்.

அற்றுகலினன்றே, திருவொற்றியூரில் பேய்க்கரும்பு தீங்கரும்பா யிருக்கக்கண்ட பட்டினத்தடிகளும்,

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல வழகியதாம்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு. என்றமையாது,

"ஈது சிவலோகமென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந்திருவொற்றியூர்."

என்றும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

மற்றும், தியாகராஜப் பெருமான், ஏனைய தலங்களில் நடனஞ்செய்ததை நோக்க, திருவொற்றியூரில் செய்தருளிய அங்நடனமே சிறப்புடைத்தாம் (அங்நடம் - குந்திக்கொண் டாடுதல்.)

அது வருமாறு:—எடுத்தருளிய இடது திருப்பதத்தை ஊன்றிக்கொண்டும், ஊன்றிய வலத் திருப்பதத்தைத் தூக்கிக் கொண்டும் ஆடுவது கான்மாறியாடும் நடனமாம். இது திருவாலவாயிலின்கண் வழுதியின் மலம் நீங்க ஆடி யருளியதாம்.

பாண்டரங்க நடனம்:—இது, முப்புரமெரிக்க எழுந்தருளுங்கால், பிரமன் தேர்ச்சாரதியா யிருக்க, அதைக்கண்டு கலங்கிய கலைமகளைத் தேற்றுதற் பொருட்டுச் செய்தருளியதாம்.

கோடுகொட்டி நடனம்:—இது திரிபுரத்தை யெரித்தபின்னர், அருட்சத்தி தேவியார் தாளம்போடப் பரசிவனார் தமது திருக்கரங்களைக் கொட்டிக்கொண்டு ஆடி யருளியதாம்.

சந்தியா நிருத்தம்:— ஆர்கலியிலெழுந்த ஆலகாலத்தை யுண்டு, தெய்வமாதர்களின் திருமங்கலநாண் நிறுவி, அறிதுயிற் கொள்ள, தேவர்கள் பூசித்த பின்னர் மறுநாள் திரயோதசியில் (பிரதோஷத்தில்) உமைப்பிராட்டியார் முன்னிலையில், திருக்கரத்தில் டமருகமேந்தி, சூலத்தைச் சுழற்றி ஒருசாம நேரம் ஆடி யருளியதாம்.

சண்டதாண்டவம்:—இது, திருவாலங்காட்டில் காளியின் ஆணவத்தையடக்க, பைரவ மூர்த்தங்கொண்டு ஆடியருளியது. இது பாண்டரங்க மெனவும் பெறும்.

கௌரி தாண்டவம்:—இது, தாருகாவனத்தில் மோகினி வடிவெடுத்த மாயோனுடன் ஆடியது போன்று கௌரிக்குக் கைலையில் ஆடிக்காட்டி யருளியது.

வீரட்டகாச நடனம்:--இது, தணிகையில் குமாரக் கடவுள் பிரணவப் பொருளை யுணர்த்தியபோது 'யானுங் குமரனும் ஒன்றே' என வீரங்கொண்டு ஆடி யருளியது.

ஆனந்தத் தாண்டவம்:—இது, பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலானோர் தரிசிக்கவும், சிவகாமி யம்மையார் திருவுள மகிழவும், முயலகன் முதுகு முறியவும், சிதம்பரத்தில் ஆடி யருளியது.

அனவரதத் திருநடனம்:— இது,பஞ்சாக்கரத்தையே ஒரு திருமேனியாகக் கொண்டு, ஆன்மாக்கட்குப் போக முத்திகளை யளித்தற்பொருட்டு டமருகத்தால் படைப்பும், அபய கரத்தால் காப்பும், அக்கினியேந்திய அங்கையால் அழித்த

னும், ஊன்றிய ஸ்ரீபாதத்தால் திரோபவமும், தூக்கியபாதத்தால், அநுக்கிரகமுஞ் செய்து அனவரதமும் அதாவது எப்போதும் ஆடுகின்ற திருநடனம்.

மகாசங்கார நடனம்:—இது மாப்பிரளயத்தில் உலகனைத்தும், தத்தமது காரணங்களில் இலயப்பட்டுப் பராசத்தியிலொடுங்க, பராசத்தியும் பரசிவத்தில் ஒடுங்கிவிட, பரசிவனொருவனேயாய் மீந்து நின்றபோது ஆடி யருள்கின்றது.

ஆதிபுரியாகிய திருவொற்றியூரின்கண், உரோம ரிஷி, நந்தி, மாந்தாதா முதலானோருக்கு, அமர்ந்த வண்ணமாகவேயிருந்து ஆடி யருளினர். இது, அந்நடனமெனப்படும். இத்தாண்டவம் அநுக்கிரகத்திற்கு மிகவுரியதாமாதலின் இதனாலும் இத்தலம் மிகச் சிறப்புடைத்தென்பது உணரற்பாலது.

இத்தலத்தில், மாணிக்கத் தியாகர் என்னுந் திருப்பெயரால் வழங்கப்படும் தியாகராஜப் பெருமானுக்கு, காரணி விடங்கர் (விடங்கம்—உளிபடாதது) அதாவது மரகத இலிங்கம் எனக் கல்வெட்டில் காணப்படுகிறபடியால் இங்கு விடங்கப் பெருமானும் இருந்திருத்தல் வேண்டும் என்பது புலப்படுகின்றது.

இத்தலத்திலுள்ள மூலத்தானமாகிய படம்பக்க நாதரை, புற்றெனவும், உரோமரிஷியின் சமாதி யெனவும், பட்டினத்தடிகளின் சமாதியெனவுங் கூறுப.

திருவொற்றியூருடையார், ஆதிபுரியீசர், எழுத்தறியும் பெருமானார், வியாகரண தான வியாக்யானப் பெருமானார் என்பது முதலான திருநாமங்களால் வழங்கப் பெறுகின்றவரோ, திருவொற்றியூரானடிமைக்கு அருள் செய்தவரே யென்று தோன்றுகின்றது.

ஒரு சாரார், மூலஸ்தானத்தை ஓமகுண்ட மென்றுங் கூறுவர்.

இத்தலத்தின் அமைப்பை நோக்குமிடத்துத் திருவொற்றியூரான் அடிமையின் திருப்பணித்தானமே மூல காரணமெனப் புலப்படுகின்றது.

இத்தலத்தின் திருப்பணியானது, முதலில் மாந்தாதாவாலும், அதன்பின் தொண்டைமானாலும் செய்யப்பட்டதென்று புராண வாயிலாகத் தெரிகிறது.

இப்போதுள்ள மூலஸ்தான கருப்பக்கிரக கோபுரங்கள், சதுரானன பண்டிதரின் தூண்டுகோலால் மூன்றுவது, ராஜராஜா என்னும் சோழராஜனால் 'ரவி' என்னும் சிற்பியைக் கொண்டு, கி. பி. 1012 - வது ஆண்டில், சரணம், தோரணம், குடம், கோஷ்டம். சிறிய பெரிய நிவாசம், நாசிகம் என்னும் அங்கங்களுடன் கட்டப்பட்டுள்ளது. இது மாநடவுடம்பின் தத்துவம் போன்றது. இது கஜ பிருஷ்டம் என வழங்கப்படும். இதுவே பண்டைக்காலத்திய சிற்பவித்தையின் திறமையைக் காட்டுவதாம். இதன் விரிவை இந்நூலிலுள்ள தேவ ஆலய திருவிழாத் தெளிவிற் காண்க.

இத்தலத்திற்கு, அறிவு சான்ற ஆன்றோரால், 599, செய்யுட்களைக் கொண்டதும், அழகிய நடையிலுள்ள குறிப்புரையை யுடையதும், பதினைந்து சருக்கங்களால் வகுக்கப் பெற்றதுமாகிய புராணம் ஒன்று செய்யப்பட்டிருக்கின்றது.

மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களால், அப்புராணத்தைத் தழுவி எளிய தமிழ் நடையில் புராணச் சுருக்கமும் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

பழைய சுவடி வடிவில், 'ஆதிபுரீசர் மகாத்மியம், என்று கிரந்த சுலோகத்தில் ஒருபுராணமு மிருக்கின்றது. இது, பின்னல் தொகுத்ததென்று தெரிகிறது.

இத் திருவொற்றியூர்ப் புராணம், பதும புராணத்திலும், பிரமாண்ட புராணத்திலும் கூறப்பட்டுள்ளது.

அங்ஙனமாயினும் இந்நூல் பெரும்பான்மை புராணச் செய்யுட்களையே தழுவிய,தாம்.

இத்தலத்திற்கு, சமய குரவர் மூவர்களின் பாடல்களும் இருக்கின்றன.

மற்றும், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் இராமலிங்க சுவாமிகள் முதலான பல ஆன்ரோர்கள் இத்தலத்தை விதந்து பாடி யிருக்கின்றனர்.

இத்தலத்தில், பேய்க்கரும்பு, தீஞ்சுவைக் கரும்பாய் இருத்தல் கண்டு, பட்டினத்தடிகள் தமது தூலத் திரு மேனியை, ஒரு சிவலிங்கவடிவாய்ச் செய்து கொண்டெழுந் தருளியதும், இராமலிங்க சுவாமிகள், அருட்பெற்றதும் இத் தலத்திலாம்.

இவற்றுள், அப்பர் சுவாமிகளின் திருப்பாடல்களை நோக்கின், அப்பர் சுவாமிகள் திருவான்மியூரிலிருந்து இத் தலத்திற்கு வரத்தொடங்கியபோதே திருவொற்றியூர்ப் பெருமானர், அருட் டிருமேனிகொண்டு காட்சி கொடுத்தருளி மறைந்தனர் என்று புலப்படுகிறது.

இத்தலத்தில், பரசிவனர், பாணினி முனிவருக்குப் பதினன்குநாள், பதினன்கு வியாகரண சூத்திரங்களை அருளிச் செய்து அதற்கு வியாக்யானமுஞ் செய்,தருளினரா,தலின், வியாகரண,தான வியாக்கியானப் பெருமானர் என்னுந் திரு நாமமும் பூண்டுள்ளார் என்பதும்,

வியாகரண (வடமொழி யிலக்கணப்) பாடமுறைகள் ஆசிரிய மாணவ மரபுப்படி இத்தலத்தில் நடந்தேறி வந்திருக்கலாம் என்பதும், இத்தலத்திலுள்ள கல்வெட்டில், "வியாகரண வியாக்கியான மண்டபம்" என பலவகையாய் விதந்து எழுதியிருத்தலாற் றெரிகின்றன.

இத்தலத்திற்கு, ஆரியர்களும், தமிழ்மக்களும், ஆடுகள், மாடுகள், பூமிகள், பொன்கள் தானஞ் செய்திருக்கின்றனர் என்பது கல்வெட்டால் தெரிகிறது. இது, மற்றும், ஒரு பெரிய நகரா யிருந்திருக்கலாம் என்று புலப்படுகிறது.

மாந்தாதா, தொண்டைமான், சோழன், முதலான பண்டைக்காலத்திய தமிழ் மன்னர்களும், இக்காலத்தியவரும், திருவொற்றியூரான் அடிமை என்னுஞ் சிறப்புப்பெயர் பெற்றவருமாகிய இராமசாமிப் பெருந்தகையாரும் இத்தலத்தில் திருப்பணிச் செய்கையாளர்கள்.

ஞாயிறு முதற்கொண்டு, கடவுள் வழிபாட்டின் முறைகள் இத்தலத்தில் பல மதத்தர்களாலும் பலவகையாய்க் கையாண்டு வரப்பட்டன வென்று தெரிகிறது.

வட்டப்பாறை நாச்சியாரை, நகர் காவலின் பொருட்டு இங்கு மாந்தாதா தாபித்திருக்கின்றாரென்பது புராணத்தால் புலப்படுகின்றது.

ஆதி சங்கராசாரியர், இத்தலத்தை ஆகமப்படி ஒருவகையில் அமைத்து வட்டப்பாறை அம்மனுக்குரிய பலி முதலானவைகளைக் கோயிலுக்குள் செய்தல் கூடாதென மறுத்துப் பிராகாரத்திற்கு வெளியில் செய்துவரும்படியும், இத்தலம், மிக உயர்ந்ததாமாதலின் இது பிரமசாரிகளால் பூசிக்கப்படல் வேண்டுமென்று கருதி இயற்கைப் பிரமசாரிகளாயுள்ள கோள

நாட்டு 'நம்புதரி' என்னும் ஒருவகையார்களைப் பூசைசெய்து வரும்படி ஏற்படுத்தியதாகத் தெரிகிறது.

மற்றும், பண்டைக்காலத்திய வழக்குகள் பல கல்வெட்டில் இனிது விளங்குகின்றன.

இத்தலத்தில் பணிபுரிந்து அருள்பெற்று உய்ந்த மெய்யன்பர்களுள், "திருவொற்றியூரான் அடிமை" என்னுந் திருப்பெயரையே சிறப்புப் பெயராகக் கொண்டவரும், திருவொற்றியூருடைய பெருமானரின் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் பெரும்பணியையே தமது அரும்பணியாகக் கொண்டு உய்கின்றவருமாகிய இராமசாமித் தொண்டரும் ஒருவராக எண்ணுதற்குரியார் என்பதில் ஐயப்பாடு சிறிதும் இன்மையின், இந்நூலில், "திருவொற்றியூரான் அடிமைத் திருப்பணி மான்மியம்" என ஒரு சருக்கமுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

திருவொற்றியூருடைய சிவபெருமானர், தமது அடிமை காரணமாக, வேதமொழி பெயர்ப்பென்னும் ஒரு திருத்தொண்டை எமக்கும் அருள்புரிந்து எமது உள்ளக்கமலத்திலிருந்து வேதப்பொருளை விளக்கியருளி முற்றுவித்தருளிய எந்தையாராதலின் அத் திருவொற்றியூர்ப் பெருமானர் அன்பு மறக்காதிருத்தல் வேண்டுமென்னுங் கருத்தாலும், திருவொற்றியூர் அடிமை யவர்களின் அன்பின் வயத்தாலும், இந்நூலைத் தொகுக்க முன் வந்தனம்.

திருவொற்றியூர்ப் பெருமானர் திருவருள் வாழ்க.

வேத மொழிபெயர்ப்பாசிரியர்

கா. சிவானந்த யதீந்திர சுவாமிகள்.

ஆறுமுக நாவலரவர்கள் மாணுக்கரும்,
தஞ்சை S. P. G. காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாயிருந்த
ச. விசுவலிங்கபிள்ளை குமாரர், போளூர் போர்டு
ஐஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
கருந்திட்டைக்குடி, வி. சாமிநாதபிள்ளை கூறிய

# சிறப்புப் பாயிரம்.

திருவாருந் திருவொற்றித் திருத்தலத்து மான்மியத்தைச்
செகத்தோர் தேர
உருவாருஞ் செந்தமிழி லுரைநடையிற் சுருக்கிமிக
வுஞற்ற வேண்டி
மருவாருங் கொன்றையணி திருவொற்றி யீசனடி
மறவா தேத்துந்
தருவாருங் கொடைச்சென்னைத் த.ப.ராம சாமிவள்ளல்
சாற்ற மன்னே. 1

வேதமொழி பெயர்ப்பாளன் வேதாந்த சித்தாந்த
வியன்மார்க் கத்து
மாதவமார் துறவர்சிகா மணிவட நூ லொடுதமிழின்
வரம்பு கண்டோன்
ஓதவரும் பெருங்குணத்துச் சிவாநந்த யதீந்த்ரப்பே
ருற்ற மேலோன்
போதவணி பெறவியற்றி யச்சிட்டிங் குதவஙனி
புரிந்தா னன்றே. 2

# தேவாலயத் திருவிழாத் தத்துவத் தெளிவு.

ஈண்டு, தெய்வம், ஆலயம், திருவிழா என்பவற்றை, யாண்டும், எக்காலத்தும், எல்லாமதத்தரும் உடன்பட்டு வருகின்றனர் என்பதில் ஐயம் சிறிதுமில்லை, எனினும் உற்று நோக்காதார் சிலர், இவை அறிவிலார் செய்கைகள் என்று வாய்ப்பறையடித்து வாணாளை வீணாளாகக் கழிக்கின்றனரே யென்று பரிதாபப்பட்டு இவற்றின் தத்துவங்களைத் தெளிதலும் பெரும் பயனுடையதெனக் கருதி, தெய்வம், ஆலயம், திருவிழா என்பவற்றின் தத்துவார்த்தங்களைச் சிறிது விளக்குவாம்.

" திவு, க்ரீடா விஜிகிஷா வ்யவஹார த்யுதி ஸ்துதி
மோத மத ஸ்வப்ன காந்தி கதி (களில்) மூ"

என்பது, வடமொழி பாணினி வியாகரண சூத்திரம்.

அதாவது, விளையாடல், வெல்லும் வேட்கை, வழக்கு, விளக்கம், துதி, இன்பு, களிப்பித்தல், கனவு, ஒளி, (கீர்த்தி) அடைவு என்னும் பொருள்களைக் கொண்ட 'திவு' என்னும் வடமொழிப்பகுதியி லிருந்துவந்த சொல் 'தெய்வம்' எனப்படும் என்பதாம்.

இதன் பொருளோ, தனது வடிவில் விளையாடி மகிழ்வது, பிறவற்றால் வெல்லப்படாதது, நலம் தீமை என்னும் வழக்கை புணர்கின்றது, இன்பவடிவாயது, துன்பைப்போக்குகின்றது, ஊழிமுடிவில் சாந்தமாய் நிற்பது, அனைவராலு மறியப்படுவது தெய்வம் என்பதாம்.

இதையே, பண்டைக்காலத்திய தமிழ் நூல்களும்,

"வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப" "தெய்வமஞ்சல் புரையறத் தெளிதல்" எனவும்,

"தெய்வந் தொழாஅள்", "தெய்வத்துள் வைக்கப்படும்" எனவும்,

"தெய்வமிகழேல்", "யாதொரு தெய்வங் கொண்டீர்" 'அறிவான தெய்வமே' எனவும் எடுத்தோதுகின்றன.

மற்றும், இப்பொருளை மேற்கொண்டே 'கடவுள் வாழ்த் தொடு கண்ணியவருமே' 'காமப்பகுதி கடவுளும் வரையார்' எனவும்,

மெய்ப்பொருள், பெரும்பொருள் எனவும் கூறுநின்றன.

இதில் 'தெய்வம்' என்னுஞ்சொல், எல்லா மொழிகட்கும் பொதுவாய், எல்லாத் தெய்வங்கட்கும் பொருந்திய ஒரு திரு நாமமாய், மதக்கோட்பாடுபற்றியும், மனக்கோள் கொண்டும், பல பல சிறு தெய்வங்களைக் குறிப்பிப்பதாயிருப்பினும், முடி வில் மாற்ற மனங்கழிய நின்ற மறைப்பொருளாகிய சைதன் யத்தையே யுணர்த்துகின்றது.

அற்றாகலினன்றே, இறைவனுக்கு இயல்பு கூறுமிடத்து,

'வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்,' என்று சைதன் யப் பொருண் மேற்றாய்ப் புகலாநின்றது.

இத்தகைய சித்தாகிய சிவமே, கடவுதலாலும், கடந்து நிற்றலாலும், 'கடவுள்' எனவும், பேரொளிப்பிழம்பாய்ப் பிர காசித்தலின் தெய்வம் எனவும், மற்றும் பிறவாற்றானும் வழங் கப்படுகின்றது.

இதுபற்றியே திருக்குறளாசிரியரிற் சிறந்தாராகிய மணக் குடியர்,

" எக்காலத்தும், எவ்விடத்தும், ஒருதன்மையாக அழியாது நிற்றலின் மெய்யாயிற்று, எல்லாப்பொருளையுங் காண்டலால் அறிவாயிற்று " என்று கூறியுள்ளார்.

இத்தகைய உண்மைத் தெய்வமானது, தத்துவங்கடந்த தனிமுதற் பொருளாய், அறிவுமயமாய், அருவாய், ஒன்று, இரண்டு, என்பது முதலான வழக்குகளற்றதாய், மறைகட் கெட்டாத மௌனவைப்பாயிருக்கும் என்பது அனைவராலும் கொள்ளற்பாலதாம்.

இதுபற்றியே,

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானன்று—நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான், எனவும்,

" அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் " எனவும்,
" கேட்டாரு மறியாதான் கேடொன்றில்லான் "
' தன்னேரில்லோன் ' ' கருவாய் உலகினுக்கப்புறமாய் '
எனவும்,

" இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" எனவும் பிறவாற்றானும் நிஷ்களமாகவே கூறுகின்றன உண்மை நூல்களும்.

இத்தன்மைத்தாகிய பரம்பொருள், மரமும் காழ்ப்பும் போலும், எரியும் சூடும்போலும், தன்னோடு பிரிப்பற்ற சிற்சத்தியை நிமித்தமாகவும், அருளையே முதற்காரணமாகவும் ஏற்றுத் திருவுருக்கொண் டெழுந்தருளும் என்பது துணிபாம். அதுபற்றியே,

அகளமா யாரு மறிவரிதப் பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற, எனவும்,

"ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம்" எனவும்,

'பேராயிரம் பரவும் பெம்மான்', 'ஒரு பதினுயிரந் திருநெடுநாமம்', "அருளுருவுயிருக்கென்றே யாக்குவன்", 'உருமேனி தரித்துக்கொண்ட தென்றலும்' பிறவும் பல்வகையாய்க் கூறுகின்றன,

ஈண்டு, கடலில் அலை, திரை, நுரை, குமிழி முதலாயின போன்று எண்ணிறந்த திருமேனிகளைத் தாங்குவதற்குக் காரணமாகிய சத்தி அப்பரம்பொருள் வடிவேயாம். இக்கருத்தையே,

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
அருளு மவனன்றி யில்லை—அருளின்று
அவனன்றே யில்லை யருட்கண்ணார் கண்ணுக்
கிரவிபோ னிற்குமா னேய்ந்து. எனவும்,

பொன்னிறங் கட்டியினும் பூணினும் நின்றாற்போல்
அந்நிற மண்ணனும் அம்பிகையும் — செந்நிறத்தன்
எந்நிறத்த னாயிருப்பள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்த னாயிருப்ப னங்கு,

எனவும்,

"வரும் வடிவெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங்காழ்ப்பும், இருமையும்போல மன்னிச் சிவத்தினே டியைந்து நிற்கும்," எனவும், பிறவும் கூறுகின்றன.

அருவப்பொருளாயுள்ளது உருவப்பொருளாதல் அமையாதெனின்? அற்றன்று, பனிநீர் கட்டியாதல் போலும், கண்ணீர், முலைப்பால், ஆவின்பால் முதலியனபோன்றும் பொருந்துமாற்றிக.

அற்றாகலினன்றே,

இல்லா முலைப்பாலும் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்நிழல்போல்—இல்லா
அருவாகி நின்றானை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று. எனவும்,

உளனெங்கு மிலனிங்கு முளனெனன்பார்க்கும்.

விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோன்
மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ் சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணாத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல் வெளிப்பட் டருளுவ னன்பர்க்கே.

எனவும், பிறவும், கூறுகின்றன.

இவ்வாறு, ஏற்றுக்கொண்டருளாநின்ற திருமேனிகள் எண்ணிறந்தன. அவற்றுள்,

சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன், என்னும் ஒன்பது வகைக என்றி, சந்திரசேகரர், முதலான இருபத்தைந்து திருமேனி களும், ஆன்மாக்கட்கு, போக யோகங்களை யளித்தருள்கின்ற திருமேனிகளாம். சதாசிவத்திருமேனி, மகேசுரனிடத்தி லிருந்தே தோன்றியபடியால் அது அவன்பால் அடங்கு மென்றுணர்க. இப்பொருள்களை யுள்ளடக்கிக்கொண்டே:

ஒன்று யிருதிறமா யோரைந்தா யையைந்தாய்
அன்று தியின்மீட்டு மைந்தா யளப்பிலவாய்
நின்றுவிகட்கு நலம்புரிதற்கேயன்றே,

என்னுங் கந்தபுராணப் பாட்டும் எழுந்தது.

இத்தகைய அருட்டிருமேனிகளுள், பரசிவத் திரு மேனியே, தெய்வத்தன்மை ததும்புவதும், சிவதத்துவத்தை

யுடையதுமாகிய பேரருட்டிருமேனிப் பிழம்பாம்.
இதுபற்றியே,

"தெய்வஞ் சிவமே சிவனருள் சமயம்" என்று கூறுகின்றது உண்மை மறையும்.

இதுவே, மறைகளுள் சிறந்த சதவுருத்திரீய நடுவில் மணிபோன்று விளங்குவதுமாம். மகாகாரண பஞ்சாக்கரமெனவும், உருத்திரம் எனவும் வழங்கப்படுவதும், சிவ, என்னும் இத்தத்துவப் பொருளே யென்பது முணரற்பாலது.

இதன் பெருமையை,

அளவிறந்தது வருள்சிவ சிவசிவ
அகநிறைந்தது வடியிணை சிவசிவ
உளமிறந்துயி ருணர்வொடு பரமற
ஒளிருகின்றது சிவசிவ சிவசிவ,

என்றற் றொடக்கத்து உண்மைவாக்குகளா லுணர்க.

இக்கருத்துக்கொண்டே,

சிவ சிவ வென்கிலர் தீவினையாளர்
சிவ சிவ வென்றிடத் தீவினைமாளும்
சிவ சிவ வென்றிடத் தேவருமாவர்
சிவ சிவ வென்னச் சிவகதி தானே,

என்று திருமூலரும் கட்டளையிட் டருளாகின்றார்.

இவற்றுள், சிகாரமானது, பதியக்கரம். மகாமநு, பெருவெழுத்து, பேசாவெழுத்து எனவும், 'வகாரம்' பரையெழுத்து, பேசுமெழுத்து, எனவும் வழங்கப்பெறும்.

மற்றும், பதியெழுத்தெனப்பெறும் சிகாரம், தேயு தத்துவமாயும், செந்நிறமாயும், அக்கினி மயமாயும், எல்லா வுணர்வுகளையும் விளக்கும் வித்தியாகலையாயும், அகோரமாயும், மூர்த்தி சாதாக்கியமாயும், உருவாயுமுள்ள ஞான இரவியாய்த் திகழும்.

பரையெழுத்தாகிய 'வகாரம்' வாயு தத்துவமாயும், பரிச விடயமாயும், புகை நிறமாயும், காற்று மயமாயும், சாந்தி கலை யாயும், தத்புருட முகமாயும், தம்பாகாரமாக விளங்குவதாயும், கோடிசூரியப் பிரகாசமுடையதாயுள்ள அமூர்த்தி சாதாக் கியமாயும், மகேசுர ரூபமாயும், திரோபவத்தைச் செய்கின்ற சத்தி வடிவாயு மிருக்கும்.

அஃதன்றியும், 'சி' என்னும் வடமொழிப்பகுதி, கிடத் தல், மெலிவித்தல், கூருவித்தல் என்பது முதலான பொருள் களைத் தருவதும், 'சிவ' என்பதை 'வசி' என எழுத்து மாறின், பலவகை அரிய பெரிய பொருள்களைத் தருவதுமாம்.

சிவப்பொருளே, அருவம், உருவம், அருவுருவம் என் பது முதலான எண்ணிறந்த திருநாமத் திருவுருவங்களைத் தாங்கி, வழிபடுவோர்களின் அன்பின் தாரதன்மியப்படி திகழ்ந்து அருளுகின்றது.

இதையே,

· அருவ மாகுவ னுருவ மாகுவ னருவு
· முருவ மில்லதோர் தன்மையு மாகுவ னூழின்
· கரும மாகுவ னிமித்தமு மாகுவன் கண்டாய்,

என்று நூலும் விளக்குகின்றது.

இத்தகைய பரசிவமே, அன்பர்களின் எல்லைகடந்த அன்பு காரணமாய், சாந்திகலை, தற்புருடமுகம், அமூர்த்தி சாதாக்கி யம் எனப்படுவதாயும், சோதித்தம்பமாயும் உள்ள சிவலிங்கத் திருமேனி கொண்டெழுந்தருளு மென்க.

அன்பர்கட்கு, பரசிவன், சோதித்தம்ப வடிவாய் எழுந் தருளுவன் என்பது திருவொற்றியூர்த் தலமகிமையானும், திருவருணைத் தலச்சிறப்பானுந் தெளிந்துகொள்க.

இதைத் தழுவியே அட்டமூர்த்தங்களுள் அக்கினியே பரசிவ வடிவென வழிபடப் பெறுகின்றது. இதைக்கொண்டே எல்லாம், சிவ வழிபாட்டில் அடங்கும் என்பதும், எல்லா மதத்திற்கும் அவ்வத் தெய்வமாக நிற்பது சிவமே என்பதும் இனிது பொருந்துமாறு காண்க.

அற்றேல், அக்கினியையே பரசிவமென்னலாமோ வெனின்? அற்றன்று. என்னே? நூல்கள், அக்கினி சிவமல்ல வென்று மறுத்திருத்தலானும், அக்கினியே சிவனது திருமேனி யெனப்படுதலின், அக்கினிக்குள்ளுமிருந்து அக்கினியையுஞ் செலுத்துவதாகிய சைதன்யமயமாகிய உள்வெளியில் திகழும் சிற்சோதியே பரசிவமாமெனத் துணியப்படுதலினுமென்க. அக்கினியே பரசிவமெனல், பிரகாச ஒப்புப்பற்றி உபசாரமா மென்றுணர்க.

இதுபற்றி யன்றே,

'திரிதரு வாயுவல்லர் செறி தீயுமல்லர்' எனவும்,

'எரிபெருக்குவர் அவ்வெரியீசன துருவருக்கம தாவதுணர்கிலார்' எனவும், தெய்வத் திருமறைகளுந் திருவாய் மலர்ந்தருளுகின்றன.

ஈண்டு, 'ஈசனது உரு' என ஆறும் வேற்றுமையை விரித்திருத்தலின், ஈசன் வேறு என்றும், ஈசனது உருவாகிய திருமேனி வேறு என்றுங் கொள்ளக்கிடந்தமை காண்க.

இதனால்,

"சுடர்கின்ற கேவலந் தீயேயெனு மன்னுஞ் சிற்றம்பலவர்" எனவும்,

"பொங்கழலுருவன் பூதநாயகனுக்கு" எனவும், பிறவும், கூறும் மொழிகளும், சிற்சோதியாகிய சிவபெருமானுடைய திருமேனி, தீ யெனல் உபசார மென்பதை உற்று நோக்கித்

தெளிக. இதன் விரிவை, சாமவேத வுருத்திர விருத்தியுரையிற் காண்க.

இதனாலன்றே, பரசிவனது சோதித்தம்பத் திருவுருவை விளக்குதற் பொருட்டே, வட்டமாய்த் தம்பம்போன்று ஒரு வடிவைச் சிவலிங்கமென வேதாகம புராணங்களும் விளம்புகின்றன.

ஈண்டுச் சிவலிங்கம் என்பதில், லிங் - லயம், கம் - தோற்றம், எனப் பொருள்படுதலின், உலகு தோற்றி யொடுங்குதற்கு இடம் லிங்கமெனப்படும் என்பது கொள்ளக் கிடக்கின்றமை காண்க.

அல்லது, லிங்கம் - பிரகாசம்; அதாவது - படைத்தன் முதலான ஐந்தொழில்களால் உலகைப் பிரகாசஞ் செய்வதால் இலிங்கம் எனவுங் கொள்ளலாம். இதனால், பரசிவனது பிரபாவமே சிவலிங்கமாயிற்றென்பது தெளியப்பட்டது.

மற்றும், இலிங்கம் என்பது அடையாளம், அதாவது ஒருபொருளை இதுவென உணர்த்துதற்குரிய குறியாம். என்னை? யாண்டும், நேரிற் காட்டமுடியாத ஒருபொருளை, ஒரு குறியைக்கொண்டு அப்பொருள் இத்தன்மைத் தென்று அறிவுறுத்துதல் வழக்கு; அதுபோல் பரம்பொருள் இத்தன்மைத்தென நேரேகாட்ட முடியாமையின் இக்குறியைக்கொண்டு தெரிவித்தலால், காணப்படும் கற்றம்பம் சிவலிங்கமென வழங்கப்படுகின்றது.

அல்லது, சிவமே இலிங்கம், அதாவது சிவமாகிய இலிங்கம் என்று பண்புத்தொகையாய்க் கொள்ளினும் இனிதமையும். ஈண்டு, சிலை முதலானவற்றிலுள்ள வடிவ விசேடத்தைச் சிவமெனல் உபசாரம்.

அல்லது, சிவலிங்கம் பிரணவ வடிவமெனினும் அமையும். என்னை? அகாரம் கண்டம், உகாரம் கோமுகம், மகா

ரம் வட்டம் எனவும்; அகாரம் சிவம், உகாரம் சத்தி, மகாரம் பரம் எனவும், அகாரம் நாதம், உகாரம் விந்து, மகாரம் கலை எனவும்; விருத்தம் உருத்திரக்கூறு, நடு எட்டுமூலை மாயோன் கூறு, கீழ் நான்குமூலைக் கூறு பிரமன், உருத்திரன் கூறு, ஆண் பால், விஷ்ணுவின் கூறு பெண்பால், பிரமன் கூறும் பலவின் பால் எனவுங் கொள்ளப்படுதலா லென்க.

இதுபற்றியே,

ஞானம், சத்தியம், கருவி, கரணம் முதற்கொண்டு பல பொருள்களையுஞ் சிவலிங்க மென்பர் பிறரும்.

இதை,

பரசிவம் பிரமமென்னப்பட்டொரு திரிபுமின்றி
உரைமனம் இறந்துநின்ற வொருசிவ லிங்கந் தன்னில்,

என்பது முதலியவற்றாற்றெளிக.

பிரமமே இலிங்கமெனவும், மற்றும், ஆசாரலிங்கம், குரு லிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிராசாதலிங்கம், மகாலிங் கம், என, ஐம்பத்தேழு பேதங்களை யடையும் எனவும், மற் றும் பலவகையாகவுங் கூறுப.

இக்கருத்தை மேற்கொண்டே

“ காண்பன யாவையுஞ் சிதைந்து
பரிக்கு மாங்கதன் றன்னிடை லயிக்கையால்
லிங்கமென் றுரைத்திடப்படுமால் ” எனவும்,

“ பொலிதரு மிலிங்கமெனு மொழிக்குரைக்கும்
பொருள் பிரகாச மென்பர் ” எனவும்,

“ மலர்ந்த அயன் மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சத்தி சிவன் வடிவாகி
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே” எனவும்,

உபதேசகாண்டம், சூதசங்கிதை, திருமந்திரம் முதலான நூல்களும் கூறுகின்றன.

இதனால், பரசிவத்திற்கு இலிங்கம் ஆதாரமெனல் பொருந்தாமை காண்க.

இது, அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆன்மலிங்கம், சிவலிங்கம், எனவும் வழங்கப்பெறும். இதன் விரிவைத் திருமந்திர முதலிய பெருநூல்களிற் காண்க.

ஈண்டு, முழு உருவத்தையு முடைய திருமேனிக்கு இலிங்கமென்னும் பெயரில்லை யென்பதும் உணரற்பாலது,

அல்லது, சித்திரித்த தன்மைகொண்டு இலிங்க மெனவுமாம். பீடம் அவ்யக்தலிங்கம். சந்திரசேகரர் முதலான மூர்த்தங்கள் வியத்தலிங்கங்கள் எனவும் வழங்கப் பெறும்.

இதில் ' சிவ ' என்பதிலுள்ள சிகாரம் - சிவத்தையும், வகாரம் - அருளையும், தனித்து நிற்குங்கால் குறிப்பிடு மென்பது உய்த்துணரற்பாலது.

மற்றும், சிகாரம், பற்றின்றி நிற்குந் தன்மையைக் குறிப்பிடுகின்ற ஒரு எழுத்துச்சொல். ' வா ' என்னு மெழுத்துக் குறுகி ' வ ' என்றாயிற்று. எனவே, பரசிவம், பற்றின்றி, வான்போல் எப்பொருட்கும் வேறாகவும், கிருபையால் எல்லாப்பொருளோடு கலப்புற்றும் நிற்கும் பரம்பொருளாம் என்பதும் பெறப்பட்டமை காண்க,

அல்லது, சத்தியும் சிவமும் கலந்துநின்று எல்லாவற்றிற்கும் மங்களத்தைக் கொடுத்தலின் சிவலிங்கம் மங்கள வடிவாம்.

அல்லது, சிவமென்னும் நலத்தையே நல்கலின் சிவலிங்கமாம்.

பரசிவம் பற்றின்றி வான்போல் சிதாகாயமாய் இருத்தல் என்பது மறைகளின் முடிவாம்.

இன்றெனில், எல்லாவற்றினும் கலந்து நிற்கின்றதென்பது அமையாது.

இதுபற்றியே,

"வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சை வெளியென்ப" எனவும்,

"சிற்பர வெளிக்குள்வளர் தற்பரமதாகவும்" எனவும் பிறவும் கூறுகின்றன.

சிவலிங்கத்தைத் தரிசிக்குங்காலும், கடவுள் இன்ன வடிவினர் என்பது சிறிது விளங்காமல் வான்போல் அருவாய் நிறைந்து நிற்கின்ற ஒரு பெரும்பொருள் என்பதுவே குறியாலுணர்த்தப்படுகின்றது, என்பது உற்று ஆராய்வார்க்கு எளிதில் விளங்கும்.

பரசிவனது அட்டமங்கல மூர்த்தங்களும் இத்தகைய சிவலிங்கத் திருமேனியின்கண்ணே அடங்குகின்றன.

மற்றும், சிவலிங்கத்தில் முக்கண்ணும் ஒருமுகமுந் தோன்றலும், சோம, சூரிய, அக்கினி என்பன கண்களென்பதையும், கருணையையுடைய தன்மையையும் குறிக்கின்றது.

ஆவுடையாள் (ஆவிடையார்) பரவெளியின்கண் ஒரு அசைவு வடிவாகிய சிற்சத்தி உளதென்பதைக் குறிக்கின்றது. ஆ - இருப்பு. இது சிறிது கீழ் இருத்தல், இத்தகைய சிற்சத்தியும் பரசிவத்திற்கு அடங்கியே நிற்கும் என்பதைக் காட்டுகின்றது.

இக்கருத்தையே,

'அவனன்றி யோரணுவும் அசையாது,' என்னுந் திருவாக்குங் குறிப்பிடுகின்றது.

கோமுகி, ஆன்மாக்களிடத்திற் செய்யும் கருணைமுகத்தைக் குறிப்பிடுகின்றது.

அதன்கீழ் உள்ள நாற்கோணமாகிய பிரதிட்டாலிங்கமானது, சிற்சத்தியா லாக்கப்பட்ட எட்டுத்திக்கும், தன்பால் அடங்கிக்கிடக்கின்றன என்பதைக் குறிக்கின்றது. இத்தகைய சிவலிங்கத் திருமேனியே அருவுருவத் திருமேனி யென்ப.

மற்றும், அதீத சிவம், சத்தியோடு கூடும் அவசரமாகிய சாதாக்கியத்தைக் குறிப்பிடலானும் இது அருவுருவத் திருமேனியாம்.

மற்றும், பீடம் பத்திரலிங்கம், தூபி தூலலிங்கம், சிவலிங்கம் சூக்குமலிங்கம் எனவும் கூறப் பெறும்.

அஃதன்றியும், ஆறு தாரங்களுள் அனாகதத்தில் செந்நிறமாய்த் தீபோன்று கீழ்முகமாய்ச் சோதிச்சுடராய் விளங்கும் சுயம்பு லிங்கத்தையும், மணிபூரகத்தில் கோடி சூரியப்பிரகாசம்போல் மேல்முகமாய் விளங்கும் லிங்கத்தையும், புருவமத்தியின் ஆக்கினையில் கோடி சந்திரப் பிரகாசம்போல் அருவாய்ப் பராசத்தியுடன் இனிது ஒளிரும் மகாலிங்கத்தையும் குறிக்கின்றது இத்தம்பாகாரமாகிய சிவலிங்கம் என்பதும் உய்த்துணரற்பாலது,

சிவலிங்கமானது, சோதித்தம்ப வடிவாய் எழுந்தருளும் ஒளிப்பிழம்பைக் காட்டுகின்றதென்பதற்குப் பிரமாணங்கள் வருமாறு :—

அக்கினி புராணத்திலுள்ள 53 - ம் அத்தியாயம் 3 - ம் சுலோகத்திலும், சதானந்த சாகரத்திலும்,

இலிங்கபுராணம் முற்பகுதி, 19 - ம் அத்தியாயம், 3 - ம் சுலோகத்திலும்,

கூர்மபுராணம் இரண்டாம் பகுதி, 11 - ம் அத்தியாயம், 15 - ம் சுலோகத்திலும், மச்சபுராணம், 26 - ம், அத்தியாயம், 16 - 17 - ம் சுலோகங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது.

அங்ஙனமே இருக்குவேதத்திலும்,

" உருத்திரர், மருத்துக்கள் நினது ஐசுவரியத்தை யடைதற்பொருட்டு, உனது சித்திர வடிவாகிய இலிங்கத்தை ஆராதித்தனர். இலக்குமியோடு மாயோனும் பூசித்துப் பரமபத மடைந்தனன் " எனக் கூறப்பட்டிருக்கின்றது.

மற்றும், துரோண பருவத்திலும்,

" பரசிவன் உலக வடிவாயிருத்தலை யுணர்ந்து நாநாராயணர்கள் சிவலிங்கத்தைப் பூசித்தனர். இதனால் கண்ணனுக்குச் சிவனிடத்தில் மிகப்பிரியம், சிவனுக்குக் கண்ணனிடத்திலும் மிகப்பிரியம் " என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஈண்டு, " கல்லினும் செம்பினுமோ இருப்பான்
எங்கள் கண்ணுதல் " எனவும்,

.......................சோதியைமூடரெல்லாம், கட்டிச் சுருட்டித்தங்கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார், எனவும்; பிறவும் கூறுவன அனைத்தும் சிவலிங்க தத்துவந் தெளியாது செய்யும் சிவபூசையைப் பற்றியதேயாம் என்பது ஈண்டுக் காணற்பாலது.

மின்னல் போன்று ஒளிவிடும் பரசிவ நிலை சிவசாதாக்கிய மெனவும், சூரியன் போன்று ஒளிரும் பரசிவநிலை அமூர்த்தி சாதாக்கிய மெனவும்,

முக்கண் ஒருமுகம் முதலான உருவங்களையுடைய பரசிவ நிலை மூர்த்தி சாதாக்கிய மெனவும், நான்கு முகங்கள் எட்டுக் கைகள், பன்னிருகண்கள் முதலானவைகளையுடைய பரசிவ

நிலை கர்த்திரு சாதாக்கிய மெனவும், இலிங்கமும் பீடமுமாக விளங்கும் பரசிவநிலை கன்மசாதாக்கிய மெனவும் கூறப்படும்.

மற்றும், சிவலிங்கமானது, பரசிவன், சோதிவடிவாய் மேல் நோக்கி நிற்கும் அக்கினிபோன்றிருப்பன் என்பதையே காட்டுகின்றது.

சிவஞான வேள்வியிலுள்ள, குண்டமானது ஆவிடையாளையும், ஓமத் தியானது சிவலிங்கத்தையும் உணர்த்துகின்றன.

இதை,

" முதலீறின்றித் தொலைவரும் சோதியாமிச் சுந்தரலிங் கந் தன்னில் " என்றற் றொடக்கத்து உண்மை வாக்கியங் களாற் றெளிக.

பஞ்சாக்கரங்களையும்; ஈசானாய நமஃ, தற்புருடாய நமஃ, அகோராய நமஃ, வாமதேவாய நமஃ, சத்தியோஜாதாய நமஃ, என்னும் பஞ்சப்பிரம மந்திரங்களையும் பரசிவனது வடிவ மென்ப.

இதை,

" மந்திரமதனிற் பஞ்சமந்திர வடிவமாக" என்னுந் திருவிருத்தத்தாற் காண்க.

இஃதன்றியும், அக்கினியைப், பரசிவனுடைய சிரசாகவும், வேதங்களை வாயாகவும், சந்திரசூரியர்களைக் கண்களாகவும், திக்குகளைச் செவிகளாகவும், வாயுவைப் பிராணனாகவும், ஆகாய முதலிய அனைத்தையும் இருதயமாகவுங் கூறுகின்றன நூல்கள்.

இதை,

அங்கிதலை வாய்விவித மானமறை பானு
திங்கள்விழி யெண்டிசை களுஞ்செவிகள் வாயு

தங்குமுயிர் தன்னிதய மேசகல முந்தான்
இங்கவனி சங்கர னிருக்கும்வடி வீதால்,

என்றற் றொடக்கத்து வாக்கியங்களா லறிந்துகொள்க.

இப்பொருளேயே,

"உலகமே யுருவமாக யோனிகளுறுப்பதாக"

என்பது முதலான வாக்கியங்களும் வலியுறுத்துகின்றன.

மற்றும், ஆறத்துவாக்களே பரசிவ வடிவெனவும், மற்றும் பலவாருகவும் தத்தமது கொள்கையையும் அன்பையுந் தழுவிப் பாவித்து வழிபடற்குரியது பரசிவனது வடிவமாம். இதை,

'அத்துவா வடிவா மெம்மிறை' என்றற் றொடக்கத்து வாக்குகளாற் கண்டு தெளிக.

மற்றும், சிகை சிவகரணம், உரையிறந்து நின்ற சுகம் திருமுடி. அனைத்தையும் அவனருளாகவே காண்டல் திருமுகம். ஐந்தொழிலாற்றும் குணவியல் நேத்திரம். அருட்சத்தி இருதயம். யான் எனதென்பது அற்றதன்மை திருவடி என்பது முணர்க.

மற்றும், சிகை ஞானக்குறி, பூணூல் வேதாந்தக்குறி, மதிசூடுவது எல்லாமறியுங் குறி, இடபம் தருமக்குறி, முக்கண் முச்சத்திக்குறி, மான் வேதக்குறி, சூலம் மும்மூர்த்திக் குறி, மழு இலயக்குறி, வாள் பாசமறுக்குங்குறி, வச்சிரம் கேடிலாக்குறி, பாசம் மாயாவடிவக்குறி, உடுக்கு அத்துவாவைச் செலுத்துங்குறி, சர்மம் பரிக்ரகசத்தி யுலககாரணக் குறி, கண்டாமணி நாதக்குறி, நீலோற்பலம் மனத்தைச் செலுத்துங்குறி, அங்குசம் பரிவட்டக்குறி. குவிதல் விரிதல், அக்கினி பாதுகாப்புக்குறி, அபயாத்தம் அருட்குறி, கவசம் பிரகாசக்குறி, மாலை ஓங்காரக்குறி, பளிங்குநிறம் நிருமலக்

குறி, அஸ்திரம், மலம்போக்குங்குறி என்பன முதலிய வற்றையும் யூகித்துணர்ந்து கொள்க.

உற்று நோக்கில், பரசிவனுக்கு, எண்ணிலாத கரங்கள், கண்கள், தோள்கள், நாமங்கள், திருமேனிகள் என்பது உண்மை.

இதை,

எண்ணில் பல்கோடி சேவடி முடிகள்
எண்ணில் பல்கோடி திண்டோள்கள்
எண்ணில் பல்கோடி திருவுருநாமம்
ஏர்கொண் முக்கண் முக மியல்பும்
எண்ணில் பல்கோடி யெல்லைக் கப்பாலாய்
நின்றஞ் ஞாற்றந் தனைரேத்தும்
எண்ணில் பலகோடி குணத்த ரேர்வீழி
யிவர் நம்மை யாளுடையாரே. என்றற்றொடக்கத்து

மறைமொழிகளிற் காண்க.

சிவலிங்க விளக்கம் முற்றும்.

தெய்வத்தின் தத்துவத் தெளிவு

முற்றிற்று.

# ஆலயத்தின் தத்துவத் தெளிவு.

ஆலயமென்பது, ஆ - வயம், லயம் - வரை, அதாவது பர சிவனுடைய அருட்டிருமேனியானது தோன்றி நின்று இல யிப்பதற்குரிய இடம் எனப்படும். அல்லது, உலகங்களின் இல யவரையுள்ள இடம் அதாவது உலகின், தோற்றம் திதி லயம் எவ்விடத்திலோ (எந்தப் பரசிவனிடத்திலோ) அது ஆலயம் எனினுமாம். அல்லது, ஆலயம் என்பது பரசிவன் அருட்டிரு மேனிகொண்டு தங்குமிடமாம். இதுவே கோவில், கோ - பர சிவன், இல் - அருள்செய்யுமிடம் எனப்படுகின்றது.

அற்றுகலினன்றே,

'திருக்கோயிலுள்ளிருக்கும்' எனவும்,

"ஆக்கையாற் பயனென் அரன் கோயில் வலம்வந்து"
"கால்களாற் பயனென் கறைக்கண்டனுறை கோயில்"

எனவும்,

'காலையும் மாலையுங் கால்பெயர்த் திடுவது
ஆலயம் வலம்வருதற்கெசால்பினின்' எனவும்,

'திருக்கோயி லில்லாத திருவிலூரும்' எனவும்,

'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' எனவும்,

'கண்ணுதல் ஆலயம் நோக்குங் கண்களே கண்கள்' என வும்,

'அத்தன் ஆலயம் அனைத்தும் வைகலும்' எனவும், நூல்கள் கூறுகின்றன.

இத்தகைய ஆலயம், சரீரத்தை விரித்துக் குறிப்பிடுவ தால் சரீரப்பிரஸ்தார மெனவும், இருதயத்தை விரித்துக்

குறிப்பிடுவதால் இருதயப்பிரஸ்தாரமெனவும் இருவகைப் படும். அதாவது, உடம்பின் பஞ்சகோச முதலானவற்றைக் காட்டுவதும், உள்ளத்தில், சொல்லும் பொருளுமாயுள்ள விதத் தைக் குறிப்பித்துக் காட்டுவது மென ஆலயம் இருவகைத்தா மென்பதாம்,

இக்கருத்தையே,

'அறிந்தே யுயிராலயத்தி னபேதம்
மறிந்தான் மெய்ஞ்ஞானி மலமற்று' என்பதானும்,

'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் இலங்கு முயிருட லனைத்து மீசன் கோயில்' என்பதானும்,

'உள்ளம் பெருங்கோயி லூனுடம்போராலயமாம்' என்ப தானும்,

'குறிகளு மடையாளமுங் கோயிலும்
நெறிகளு மவர்நின்றதோர் நேர்மையும்' என்பதானும், மற்றும், பல்லாற்றானும் உண்மை நூல்களும் அறிவுறுத்து கின்றன.

ஆலயத்திலுள்ள கருப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நான மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம், என்னும் ஆறு மண்டபங்களும் உடம்பி லுள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் அநுகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறாதாரங்களையும் உணர்த்து கின்றன.

ஆலயத்திற்குள்ள பிரகாரங்களுள், முதலாம் ஆவரணம், கண்ணுக்குப் புலப்படும் அன்னமய கோசத்தையும், இரண் டாம் ஆவரணம் கன்மேந்திரியங்களும் பிராணனுங் கூடி நிற்ப தாகிய பிராணமய கோசத்தையும், மூன்றாம் ஆவரணம், ஞானேந்திரியங்களும் மனதுங்கூடிய மனோமய கோசத்தை

யும், நாலாம் ஆவரணம், ஞானேந்திரியங்களும் புத்தியுங் கூடியுள்ள விஞ்ஞானமய கோசத்தையும், ஐந்தாம் ஆவரணம், அந்தக்கரண விருத்தியும் ஆனந்தமுங்கூடிய, ஆனந்தமய கோசத்தையும் (இது காரணதேக மெனப்படும்) குறிப்பிடு கின்றன.

ஏழு பிரகாரங்களும் உள்ளவைகளெனில், அவைகள் தோல், ரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, மச்சை, சுக்கி லம், என்னும் எழுவகைத் தாதுக்களையுங் குறிப்பிடுகின்றன வென்பதைக் காண்க.

கதவுகள், மூடுங்கால் சிவலிங்கத் திருமேனியை மறைப்ப தாலும், திறக்குங்கால் சிவதரிசனம் நிகழ்தலானும், அது போல், கோபம், ஆசை, ஆணவம் என்பன மறைக்கில் ஆன்ம லிங்கம், காணமுடியாது போதலின், அவித்தையோடு அவை நீங்கியவிடத்து ஆன்மலிங்கங் காணப்படலானும், மறைப் பையும் திறப்பையுங் காட்டுகின்றன.

இராசசபை, தேவசபை, நிருத்தசபை, கனகசபை, சிற் சபை என்பன; அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங்களையுங் குறிப்பிக்கின்றன.

தூபி அல்லது கும்பம், இது இருதய கமலமாய் விளங்கு வது, இதனுடைய கீழிடம், பிருதிவிதத்துவம், மேல்நாளம், அன்பு முதலான இருபத்துமூன்று தத்துவங்களாம். நாளத்தி லுள்ள முட்கள் அமரேசன் முதல் சிகேதன் ஈறாகிய எழுபத் திரண்டு புவனங்களாம், எட்டிதழ்கள் எட்டுத் தத்துவங்களாம். அறுபத்து நான்காயுள்ளன கேசர வடிவங்களாம், ஈசுரம், சதாசிவம் என்னும் இரண்டு தத்துவங்கள். நாளமாம் பூ என் பவற்றின், நுனி, அடிமுடிச்சு மாயையாம். பொகுட்டு சத்தி

யாம். அப்பொகுட்டில் தோன்றும் ஐம்பத்தொரு பீசவடிவம் சிவ தத்துவங்களாம். கலசங்கள் சத்திகளாம். இதனால் இருதய கமலத்தில் பரசிவன் திகழ்கின்ற வுண்மை குறிப்பிடப் படுகின்றது.

உடம்பின் பிரமரந்திர மத்திய கபாலத்துவாரமே உத்தர கோபுரவாயிலாம். காற்பெருவிரலின் முடிவும், கையின் நடுவிரல்களின் முடிவும், குதத்துவாரமும், தக்கண கோபுரவாயிலாம். புருமத்தியமே அந்தராள கோபுரவாயிலாம். உந்தியே பலிபீடமாம். இருதயம், துவசத்தம்பம், பஞ்சகோசம், அந்தக்கரணம், புருடன் என்றும், கண்டம் நந்தி என்றுமறிவர் சிவயோகி.

துவசத்தம்பம் சுழுமுனைநாடியாம். இடைகலை பிங்கலை நாடிகள் இதிற் சென்று அசைவற்றுத் தம்பம்போல் நிற்குந் தன்மை வருதலின் அதற்கொப்பாயிற்று. குண்டலிசத்தி போன்றது துவசத்தம்ப மென்பாரு முளர்.

இதை, ஆயபதிதான் அருட் சிவலிங்கம்
ஆய பசுவு மடலேறென நிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய வரனிலை யாய்ந்து கொள்வார்க்கே, என்பதனாற் றெளிக.

திருவாசி, பிரணவடிவமாம். இதனால், அனைத்தும், பிரணவத்தினின்று தோன்றி யொடுங்கு மென்பதும், மற்றும், பிரணவம் எல்லாத் தேவர்களுக்கும் பிறப்பிடமாயும், பரசிவற்கு இருப்பிடமாயும், உள்ளதென்பதும் குறிப்பிடப்பட்டன.

இதை, ஓங்காரமே நற்றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறைசுடரா—மாங்கார
மற்றா ரறிவரணி யம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின், என்பதனானும் பிறவாற்றானு முணர்க.

தேவாலயத்தில் திருவலகிடல், மனத்தின்பால் உள்ள காமம் வெகுளி முதலான குப்பைகளையும், தொண்ணூற்றாறு தத்துவங்க ளென்னும் குப்பைகளையும், களைதலைக் குறிப்பிக்கின்றது.

இதை,

'காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை,
யரிதினகழ்ந்து போக்கி' என்பதனானும்,
'பொய்த்துறு குப்பை கிளைத்தொளி பொங்கு
முத்தை யளித்தென முத்தை தனக்கு' என்பதனானும்,

பிறவாற்றானும் உணர்க.

திருமெழுக்கிடல், மேற்கூறிப் போந்தவாறே குப்பை களைக் களைந்தவுடன், தத்துவ ஞானமென்னும் நறுஞ் சாணத்தைக்கொண்டு, அன்பென்னும் நீருடன் கலந்து மெழுகில், மனோலயங் திகழுமிடத்து தகராகாச வொளியாகிய சிவலிங்கம் இனிது விளங்கும் என்பதைக் குறிக்கின்றது.

இதை,

சின முதலிய மயல்தீர மாற்றுபு
வினைதபு வாய்மையா மெழுக்கை யன்பெனும்
புனலொடு விரவியே பூசி னல்லது
மனமெனு மனையிடை வராதி லிங்கமே. என்பதனானும்,
பொருதிற னமையிருள் நிறத்து
மதமுடை யடுசினத் தைவகைக்கடாவும்
யாப்பவிழ்த் தகற்றி யன்புகொடு மெழுகி. என்பதனானும், பிறவாற்றானு முணர்க.

திருவிளக்கிடல், மனம் என்னுந் தகழியில், விவேகமென்னும் நெய்யை வார்த்து, உயிர் என்னுந் திரியைப்போட்டு,

பிராணனாகிய காற்றை நிறுத்தி, ஆணவமாகிய இருளை நீக்கி, சிவஞான ஒளியைப் பரப்புந் தன்மையைக் குறிப்பிடுகின்றது.

இதை,

உடம்பெனு மனையகத்துள் உள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீயால் எரிகொள விருந்துநோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே. எனவும்,

'ஞான விளக்கினை யேற்றி' எனவும்,

'அருள் விளக்கேற்றித்
துன்பவிருளைத் துறந்து முன்புற
மெய்யெனும் விதானம் விரித்து.' எனவும், பிறவும் கூறு மாற்றா னறிக.

திரைச்சீலைபோல், மாயையென்னுந் திரையே, சிவத்தை யறியவொட்டாமல் மறைத்திருக்கின்றதென் றுணர்ந்து, அதனை, அம்மாயாவியாகிய பரசிவனது திருவருளால் (வாளால்) கிழித்தெறிந்து விட்டு, ஞானக்கண்ணால் சிவமாகிய இலிங்கத்தை நாடி நோக்கல் வேண்டும் என்பதைக் குறிக்கின்றது திரைச்சீலை.

இதை,

மாயப்படலங் கீறித்தூய
ஞான நடனம் பெற்றனன். எனவும்,

'மாயைத் திரையை நீக்கி நின்னை யாரறிய
வல்லார்' எனவும், பிறவும் கூறுமாற்றானறிக.

இதனாற் போந்த பொருள் என்னையோ வெனின்? தேவாலயங்களை தேவதைகளாகவே பாவித்து வழிபடல் வேண்டும் என்பதாம். எனவே, சிவாலயத்தைச் சிவமாகவே சிந்தித்துத்

தெரிசித்து வழிபடல் வேண்டுமென்பது கொள்ளக்கிடந்தமை காண்க.

அற்றுகலினன்றே,

"ஆலயந்தானும் அரனெனத் தொழுமே." என்று கட்டளை யிடுகின்றது சிவஞானபோதத் திருமறையும்.

ஆலய விளக்கம் முற்றிற்று.

---

உ

## திருவிழா விளக்கம்.

நித்தியம், நித்தியாங்கம், நைமித்திகம், நைமித்திகாங்காம், காமிகம், காமிகாங்கம் என ஒன்பது வகைகளாற் செயப்படுவது தேவாலய பூசையாம்.

திருவிழாத் தரிசனஞ் செய்வோர், முன்னர், வலம் வரல், வணங்கல்களைச் செய்தல் வேண்டும். அவை, பரசிவத்தினது வியாபகத்தில் சிவனுடைய அடக்கத்தன்மையை குறிக்கின்றன.

ஏனெனின்? வணக்கம், வணங்கப்படு பொருளின் உயர்வுணர்ச்சி மூலமாய், வணங்குவோனது தாழ்வுணர்ச்சியாலெழும் கைகால்களின் செய்கையாம். இதனால், கடலில் நதி கலப்பது போன்று தற்போதமுள்ள பிரம விட்டுணுக்களின் செய்கையைத் தள்ளிவிட்டு, சீவன், பிரமப்பொருளாகிய பரசிவத்தில் இரண்டறக் கலத்தல் பெறப்பட்டமை காண்க.

இப்பொருளையே,

அயன்மா லிவர்கீழ் ஆகையின் பொருட்டுச்
சயமான புறவெதிர் தண்டம் பண்ணி, என்னுந் திரு வாக்கும் விளக்குகின்றது.

சிவதரிசனம், இது சரியை, கிரியைகளை யுடையவர்கள் பரசிவத்தை பகிர்முக வடிவிற்கண்டு வணங்குதலும், யோகிகள், உள்ளக் கமலத்திற் கண்டுவத்தலுமாம்.

ஞானிகள் எல்லாமாய்க் கண்டின்புறுவர். இதை யாராயின், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி என்பவைகளால் பரசிவ வுண்மையைத் தெளிந்து மெய்யுணர்வு பெற்று, யாண்டும் பரமானந்தத்தைக் காண்டலாம்.

இதையே,

"தெரிவரிய பரமானந்தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாய்ச் செப்புநூலே" என்னுந் திருவாக்காற் கண்டு தெளிக.

அபிடேகஞ் செய்தல், இது மாக்காப்பினாற் செய்தோர் தானியாதிபதியும், திருமஞ்சனத்தாற் செய்தோர், மிகுந்த சம்பத்தையுடையரும், பாலினாற் செய்தோர் சாந்த முடையரும், தயிராற் செய்தோர் வன்மை மிகுந்த தேகமுடையரும், நெய்யினாற் செய்தோர் பத்மினியின் போகமுடையரும், தேனாற்செய்தோர் சங்கீத வன்மையுடையரும், சக்கரையாற் செய்தோர் சாத்திரவல்லுநரும், இளநீராற் செய்தோர் சற்புத்திரனையுடையரும், பழவகைகளாற் செய்தோர் வசிகரணமுடையரும், பஞ்சாமிருதத்தாற் செய்தோர் நீண்ட ஆயுளையுடையவரும், நறுமணச் சாந்து முதலியவைகளாற் செய்வோர், அரம்பையர் நறுமணக் கலவையைப்பூச, கற்பகதரு நீழலில் வாழ்ந்து உய்பவரும், சுத்தநீராற் செய்தோர் அசுவமேத பலனுடையவரும், ஆவர் என்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

முத்தியை விரும்புவோர், இவை பேரின்பத்தைக் கொடுக்க மாட்டாதனவென்று நீக்கி, அருட்போத மலத்தை அருணீராற் சுத்திசெய்து வீட்டை யடைவர்.

மற்றும், உலகனைத்தையும் கானனீரெனக் கண்டு தெளியும் தத்துவஞானமே திருமஞ்சன மென்பதுமாம்.

இதை,

' இன்ன கடவுளிலிங்கத்தின் மேனி குளிப்ப வெழுந் தோங்கு ' என்றற் றொடக்கத்துக் காசிகாண்டச் செய்யுளிற் காண்க.

மற்றும்,

ஓதும் பேதம் பேய்த்தேரென்
றுணர்தலது வொண்புண லாகும் என்பதனுனும் உணர்க.

திருப்பள்ளித்தாமம், அந்தர்ப்பூசையில் தன்னை ஒரு மாலையாகச் சாத்தி யுய்தலாம்.

இதை,

' தம்மை யொரு பூவாகப் பூவழியாமற் கொடுத்து ' என்பதனுனும், பிறவாற்ருனு முணர்க.

முரசு முதலிய வாத்தியங்களை முழங்கல், இது, ஆருதாரங்கட்கும் மேலாய் விளங்கும் பிரமரந்திரத்தில் சந்திர மண்டலத்தை யிளக்கி, உருகப்பாயும் அமுத வெள்ளம் நாடிகளில் நிறையுங்கால், பத்து நாடிகளில் எழும், சதங்கையொலி, சிலம்பொலி, கண்டாமணி யொலி, சங்கவொலி, வீணையொலி, தாளவொலி, புல்லாங்குழலொலி, பேரிகையொலி, மத்தளவொலி, மேகவொலிகள் போன்ற முழக்கங்களைக் கேட்டுய் தலைக் குறிக்கின்றது.

இதை,

'என்றுமொரு தகைமையா யிருக்கு மின்னருளே
நின்று முழங்கு நெடு முரசோன்' எனவும்,

சுத்தமா நாதத்தொனிகளும் பலவாத்
தோன்றிடு மணிகுழன் மேழகம்,
மத்தளம் பேரி யாழொலி சிலம்பு வளைகிணி
தாள மென்றுமையாட்கு அத்தனுமொழிந்தான்.

எனவும், பிறவும், கூறுமாற்று னறிக.

கீதம்பாடல், பரசிவன் நாதவடிவா மெனலைக் குறிக்கின்றது.

இதை, ஆதிநம்ப னுருநாத வுருவாகு மெனமுன்
ஓதுகின்ற மறை யாவையும்,

என்றற் றொடக்கத்து திருவாக்குகளாற் றெளிக.

திருவிழாக்களிற் செய்யும் உபசாரமானது, சோடசம், தசம், பஞ்சம், என மூவகைப்படும்.

அவற்றுள், ஆவாகனஞ் செய்தல், ஆன்மா, பரசிவனது பேரொளியைத், திருவருளால் உள்ளவாறுணர்ந்து அதிலடங்கலாம்.

இதை,

'அறிவிலழுந்துதல் ஆவாகனமே' என்றற் றொடக்கத்து திருவாக்குகளாற் றெளிக

தாபனம், இது, மேற்கூறிய நிலையிலேயே அழுந்திக் கிடத்தலாம்.

இதை,

'அலையா தழுந்தி நிலைபெறல் தாபனம்' என்பதனுற் காண்க.

சந்நிதானம், இது, பரசிவ நிறைவும், ஆன்மாவி னறிவும் ஒற்றித்தலாம்.

இதை,

இவன்றன தறிவு சிவன் பூரணத்திலும்
சிவன் பூரணத்துவ மிவன்றன தறிவிலும்
ஒன்றை யொன்றகலா துறவு செய்திருப்பது
ஒன்றிய சந்நிதான மென்றுரைப்பர். என்பதனுற்றெளிக.

சந்நிரோதனம், ஆன்மவறிவு, சிவத்தில் எக்காலத்தும் கலந்து போதலாம்.

இதை,

இவனிடத்தூறு மறிவென்று மொழியாச்
சமையது தானே சந்நிரோதனம், என்பதனுற் காண்க.

பாத்தியம், பரசிவனது இச்சை ஞானக்கிரியைகள் பொருந்தின ஒளிநீழலிற் சேர்தலாம்.

ஆசமனீயம், திருவருட்டன்மை மிக்க திருமுகத்திற் பொருந்துதலாம்.

அருக்கியம், அருளைக்கழலும் திருமுடியிற் பொருத்துவதாம்.

புட்பதானமாவது, சம்பாவனை, சந்தோடம், கொல்லாமை, வாய்மை, பொறியடக்கல், அருள், அறிவு, தவம், அன்பு என்னும் புஷ்பங்களால் நிட்களமாகிய பரசிவனுக்கு அலங்காரஞ் செய்தலாம். அதாவது இவற்றால் பரம்பொருளை யருச்சித்தலாம்.

இதை,

அறிவு சம்பாவனை சந்தோடமெனு மலர்களா
லந்தத் தேவாம்
பிறிவரிய வாத்தும தத்துவத்தை யருச்சிப்பதே
பெரிய பூசை,

என்றற் றொடக்கத்துத் திருவாக்குகளா லுணர்க.

மற்றும்,

பத்தி மலர்தூவ, முத்தியாகுமே. என்பதனனு முணர்க.

தூப தீபமிடல், மலத்தைப் போக்கும் கிரியாசத்தியே தூபமாம். ஞானவிளக்கே தீபமாம்.

இதை,

ஞானவிளக்கம் நண்ணுதற் பொருட்டு
தூபதீபந் துதைந்தினி தளித்து. என்பதனுற் காண்க.

நைவேத்தியம், பரசிவத்திற்கு பராபரபோதக் கழற்சியே திருப்திமயமாதலின், அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோகம், கொலை முதலானவைகளைக் கெடுத்தல், அருப்பித்தல் முகவாசம் என்பவற்றைக் குறிக்கின்றது.

இதை,

...............கண்ணீராட்டிச் சொன்மல ரணிந்து தற்போத இன்னமுதை யூட்டித் தற்பர ஞானமாம் ஓமவெங் கனலை மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சியரானுர். என்னும் திருவாக்கா லுணர்க.

மற்றும், இதை

" கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு"

எனவும்,

"பின்மன மமைவு பிறத்தற் பொருட்டு
நைவேத்திய முகவாசமு நல்கி." எனவும், பிறவும் கூறுமாற்று ணர்க.

செபஞ்செய்தல், சிவ வுபாதிகளையும், சத்தி யுபாதிகளையும் பின்னமறத் தரிசித்தலாம்.

இதை,

"முகனுறச் செபித்தபின் முன்போல் நிட்களந்
தானாகவுஞ் செப தர்ப்பணம் பண்ணி." என்பதனாற் காண்க.

கர்ப்பூரார்த்தி, கர்ப்பூரம்போல் ஆன்மாவானது சாத்துவிகமாகி, பின்னர், அது தீயில் ஒன்றுபடல்போல் சிவத்துடன் ஒன்றுபடல் வேண்டு மென்பதைக் குறிக்கின்றது.

இதை,

அக்கினி கற்பூரத்தை யறவிழுங்கிக் கொண்டாற்போல்,
மக்கினம் பட்டுள்ளே மருவி யிருந்தாண்டி, எனவும்,

"தீதணையாக் கற்பூர தீபமென நானகண்ட
சோதியுட னொன்றித் துரிசறுப்ப தெக்காலம்"
எனவும், பிறவும் கூறுமாற்று ணர்க.

இவ்வாற்றால், ஆவாகனம் முதல் புட்பதானம்வரை, தசோபசாரங்களின் தத்துவங்களைக் கண்டு தெளிக.

பஞ்சவுபசாரங்களுள், பூ முதலாயினவைகளும், அன்னம், ஆடை முதலானவைகளும், பலம் முதலானவைகளும் மண் சம்பந்தமானவைகளாதலின் பார்த்திவோபசாரமாகும்.

நீர், பால், தயிர் முதலானவை நீர் சம்பந்தமாதலின் ஆப்யோபசாரமாம். (அப்புவின் உபசாரமாம்.)

பொன், வெள்ளி, ஆபரணங்கள், தீபம், கண்ணாடி முதலாயின தீயின் சம்பந்தமாதலின் தைஜச வுபசாரமாம்.

தூபம், சாமரம், மயில் விசிறி முதலாயின, காற்றின் சம்பந்தமாதலின், வாயுவீய வுபசாரமாம்.

மணியோசை, மந்திரம் முதலாயின, வானின் சம்பந்தமாதலின் வைஹாயச வுபசாரமாம் எனப்படுகின்றன.

யாகம், இது, தேகம் வேதியாகவும், மூக்கு அந்தர்வேதியாகவும், தலை துரோண கலசமாகவும், பாதம் ரதமாகவும், வலக்கை சுருவாகவும், இடக்கை நெய்ப்பாத்திரமாகவும், சபையோர்கள் புலன்களாகவும், பூதங்கள் பிரயாசைகளாகவும், பல், உதடு, சூத்தாவாக மாகவும், நாக்கு யுவாகமாகவும், மிருதி, தயை யாகவும், ஓங்காரம் யூபமாகவும், ஆசை கயிறுகவும், மனது ரசமாகவும், காமம் பசுவாகவும், மயிர் தருப்பைகளாகவும், இந்திரியங்கள் யாகபாத்திரங்களாகவும், கன்மேந்திரியங்கள் அவிசுகளாகவும், கொல்லாமையே யாகமாகவும், எவற்றையும் விடுதலே தட்சணையாகவும், செய்யப்படும் ஞானம் பாகத்தைக் குறிக்கின்றது.

கும்பம், உடம்பாம். புடவை தோலாம். செந்நிற மண்பூச்சு இரத்தமாம். மண் மாமிசமாம். அதில் நிறைத்துள்ள நீர் மேதையாம். கூர்ச்சம் எலும்பாம். நூற்கள் நரம்புகளாம். அதனுள்ளிட்ட நவரத்தினம் புட்பமாம். நியாசஞ் செய்யும் மந்திரம் உயிராம். கீழ்ப்பரப்பிய, நெல், அரிசி, எள்ளு, பயறு, உளுந்து, துவரை, கோதுமைகள் ஆசனமாம் இவற்றை நூலாற் றெளிக.

கால நியமங்கள், பிராண வாயுவின் கதியை முன்னிட்டதாய், மனேலயங்கட்குக் கருவியா மென்பதைக் குறிக்கின்றன.

கொடி யேற்றுதல், ஆணவத்தின் அரசாட்சியும், அதன் சைன்யமான காமம், வெகுளி, மயக்க முதலான பகைவர் ஒழிவதையும், சிவஞான அரசாட்சியும், அதன் சைன்யமான, அருள், தயை சாந்தி முதலான சைன்யங்கள் ஓங்குவதையுங் குறிக்கின்றது.

இதை,

'தாக்கா வுணர்வரிய தன்மையனை—நோக்கிப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கு மருணல்கக் கொடி'. எனவும்,

"நீ புரவா வையமெலா நீ யறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி" என்பதனானு முணர்க.

முதல் நாள் விழாவானது, கட்புலனுக்குத் தோற்றப் படும் அன்னமயத்தாற் பரிணமித்த கருவிகளெல்லாம் சட மாதலின், சித்தாகிய ஆன்மா அவற்றினின்றும் வேறென்று காட்டுவதற்காம்.

இரண்டாம் நாள் விழாவானது, சூக்கும வுடம்பினின் றும் வேறாய் ஆன்மா உண்டென்று தெரிவித்தற் பொருட் டாம்.

மூன்றாம் நாள் விழாவானது, மூவினை, மூன்றுபுத்தி, முக்குணம், மும்மலம், முக்குற்றம், முப்பிறப்பு முதலான வற்றை நீக்குந்தன்மையை அறிவிப்பதாம்.

நான்காம் நாள் விழவானது, அந்தக்கரண நான்கையும், நால்வகைத் தோற்றத்தையும், நீக்குதற் பொருட்டாம்.

ஐந்தாம் நாள் விழாவானது, ஐம்பொறி, ஐந்தவத்தை, ஐம்மலங்களையும் நீக்குந்தன்மையைக் குறிப்பதாம்.

ஆறாம் நாள் விழாவானது, உட்பகை யாந்தன்மையை, அத்துவா ஆறு, கன்மமலங்கள் ஆறு, பதமுத்தி ஆறு என்னும் ஆறுவகைகளை நீக்குங் குறிப்பாம்.

ஏழாம் நாள் விழாவானது, எழுவகைப் பிறப்புகள், காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன் மாயை என்னும் வித்தியா தத்துவங்கள் ஏழு, அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், சூனியம், மாச்சரியம், பயம், என்னும் மாயையின் மலம் ஏழையும் நீக்குங் குறிப்பாம்.

எட்டாம் நாள் விழாவானது, பரசிவனது எண்குணங் களை விளக்குதற்காம்

ஒன்பதாம் நாள் விழாவானது, நிஷ்களம் சகளம், சகள நிஷ்களம், படைத்தல், காத்தல், அழித்தல் சுவர்க்கம், மத்தியம், பாதாளம், என்னுமிவைகள் உண்மையில் இல்லை யென் றுணர்த்தற் பொருட்டாம்.

பத்தாம் நாள் விழாவானது, அந்தமிலாத சிவானந்தக் கடலில் மூழ்கி யிருக்குந் தன்மையைக் குறிக்கின்றது.

முதல் நாள் விருக்ஷத்தடிச்சேவை, இது, சிருட்டிக்கோல மாம்.

இரண்டாம் நாள், சூரிய சந்திர பிரபாகார திருக்காட்சி, இது, திதிக்கோலமாம்.

மூன்றாம் நாள், நந்தி பூதவாகனம் இவற்றுள், அதிகார நந்தி, திருமால்நந்தி, தருமநந்தி, என்பவற்றுள் அதிகாரநந்தி யாரோகணமும், பூதவாகன ஆரோகணத்திருக் காட்சியுமாம். இது சங்கார கோலத்தைக் காட்டுகின்றது.

நாலாம் நாள், ஐம்முக நாகவாகனம். இது திரோபவக் கோலமாம்.

ஐந்தாம் நாள், இலிங்காகார இடபவாகனுரோகணம், இது அநுக்கிரகக் கோலமாம்.

ஆறும் நாள் யானைவாகனம், இது லயக்கிரமஞ் செய்தருளுங் கோலமாம்.

ஏழாம் நாள், இரதக் காட்சி, இது, திரிபுர தகனக் கோலமாம்.

எட்டாம் நாள் குதிரை வாகனம். இது, எல்லாத் தத்துவங்களின் மேலும் பரசிவம் ஏறிநின்றருளுகின்றவர்; அதாவது எல்லாவற்றின் மேலாய் விளங்குகின்றவர் என்பதைக் காட்டுகின்றது.

ஒன்பதாம் நாள் பிக்ஷாடன மூர்த்தக் காட்சி, இது, முடிவில் எல்லாவற்றையுந் துறத்தலே முத்தியின்பைத் தருமென்றுணர்த்தி யருளலாம்.

பத்தாம் நாள் நடனக்காட்சி. இது, அடியார்களிடத்துள்ள பந்த மனைத்தையு மகற்றியருளலாம். ஆதலின் இது பந்தம்பறி எனவும் வழங்கப்படுகின்றது.

பதினோராம் நாள் தியாகராஜ மூர்த்தி தரிசனம். இது, சிவனுஞ் சீவனும் ஒன்றுதலைக் குறிக்கின்றது. மற்றும் இவ்வாறே யூகித்துணர்ந்து கொள்க.

திருவிழாத்தத்துவ விளக்கம் முற்றிற்று.

# திருவொற்றியூர்க் கல்வெட்டின் சாரம்.

திருவொற்றியூர்த் தியாகருக்கு 'காரணி விடங்கர்' என்பதும் ஒரு திருநாமம். திருவாரூர் விடங்கருக்கு தஞ்சை விடங்கர் என்று பெயர்.

திருவொற்றியூரில், 'லகுளீசபாசுபதர்கள், என்னும் ஒருவகைச் சைவர் இருந்ததாகத் தெரிகின்றது. அவர்கள் காரோண தேசவாசிகள் என்பதும், காரண என்பது காரோண என மருவியதென்பதும் கல்வெட்டால் புலப்படுகின்றது.

திருவொற்றியூர்த் தலத்திலுள்ள மூர்த்திகள்:—அநுக்கிரகப் பிள்ளையார், குமாரசாமி தேவர், காரணிவிடங்க தேவர், (தியாகர்.) படம்பக்கநாயக தேவர், (திருவொற்றியூர் ஆதிபுரியீசுரர்) வட்டப்பாறை நாச்சியார். (துர்க்கை.) இவைகளைத் தவிர்த்தும்,

அரசர்களால் தாபிக்கப்பட்ட மூர்த்திகள்,
அருஞ்சாநீசுர முடையார், கம்பீசுரமுடையார்,
விடல்விடுகீசுரர் என்பவைகளும் இருக்கின்றன.

சோமசிந்தாந்தத்தைத் தழுவிய பௌத்த மதத்தர்களை விலக்குதற் பொருட்டே, துர்க்கை, பைரவர் முதலான தேவதைகளின் தாபனையும், பலிபூசை முதலானவைகளும் ஏற்பட்டிருக்கலா மென்பதற்கு இடமுண்டு.

இவற்றை, ஆதிசங்கராசாரியர் நிறுத்தி, அப்புறப்படுத்தி விட்டனர். பின்னர் மெல்ல வந்து சேர்ந்தது. நிரஞ்சன குரு, என்பவர் இத்தலத்தில் பெரிய மடாதிபதியாக இருந்தாரென்று தெரிகிறது.

சதுரானன பண்டிதர், கேரள தேசத்தவர். இவர் நிரஞ்சன குரவர்க்குச் சீடராய் பின்னால் இவ்விடத்திற்கு தலைவரானார். இவரே மூலஸ்தானத் திருப்பணிக்கு நிமித்தராவர்.

ஒரு கல்வெட்டின் நேர் லிபி.

வெகுதானியஙூ தைமீ 7உ புஷல் கோட்டத்தில் தனியூர் ஒற்றியூர் தியாகராஜ சுவாமியார் கோயில் திருப்பணி முதலான தர்மம் செய்யவேண்டி, ஸ்ரீ ஹஜாத்து ஓராவது பொது முத்திரைக்கு அதிகாரியாகிய ஸ்ரீஜஸ்ரீ மூத்தம்பி முதலியார் இராயஸம் கொடுங்கையூர் பெத்துநாயகர் யிவர்கள் முன்பாக உல்லி வெங்கிடேசஞ் செட்டியார்க்கு சீதனத்தார் ஓமநிசியித்த நிச்சயித்த பட் (டயம்) திருவொற்றியூர் கோயிலில் காலசந்திஉபயமும், மத்துமுள்ள திருப்பணி முதலாகிய தருமங்களும் செய்து கொண்டு தாங்கள் தங்கள் பரிபாலனம் பண்ணி (க்கொ) ள்ளக்கடவீர்களாகவும் இந்தப் படிக்கு கணக்கன் ஆயிரங்காத்தான் எழுத்து,

வள்ளப்பக் குருக்கள் கையெழுத்து

காளத்திக் குருக்கள் கையெழுத்து

ஒற்றியப்பக் குருக்கள் கையெழுத்து,

இது, 17-வரியால் எழுதப்பட்டிருக்கிறது.

திருவொற்றியூர் கல்வெட்டின் சாரம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

# திருவொற்றியூர்த் தேவாரம்.

பண் - பஞ்சமம் (௩-ம். திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

விடையவன் விண்ணுமண்ணுந் தொழநின்றவன் வெண்மழுவாட், படையவன் பாய்புலித் தோலுடை கோவணம் பலகரந்தைச், சடையவன் சாமவேதன் சசிதங்கிய சங்கவெண்டோ, டுடையவன் ஞானமில்லி யுறையும்மிட மொற்றியூரே.

பாரிடம் பாணிசெய்யப் பறைக்கட் செறுபல் கணப்பேய், சீரொடும் பாடலாடலிலயஞ் சிதையாத கொள்கைத், தாரிடும் போர்விடையன் றலைவன் றலையே கலனா. வூரிடும் பிச்சைகொள் வானுறையும்மிட மொற்றியூரே. 2

விளிதரு நீருமண்ணும் விசும்போடனல் காலுமாகி, யளிதரு பேரருளானரனுகிய வாதிமூர்த்தி, களிதரு வண்டுபண் செய்கமழ் கொன்றையினே டணிந்த, வொளிதரு வெண்பிறை யானுறையும்மிட மொற்றியூரே. 3

அரவமே கச்சதாகவசைத் தானல கொன்றையந்தார், விரவிவெண் ணூல் கிடந்த விறையார் வரைமார்பனெந்தை, பரவுவார் பாவமெல்லாம் பறைத்துப்படர் புன்சடைமே, லுரவுநீ ரேற்ற பெம்மானுறையும்மிட மொற்றியூரே. 4

விலகினர் வெய்யபாவம் விதியாலருள்செய்து நல்ல, பலகினர் மொந்தை தாளந்தகுணிச்சமும் பாணியாலே, யலகினல் வீசிநீர் கொண்டடிமேலலரிட்டு முட்டா, துலகினரேத்த நின்ருனுறையும்மிட மொற்றியூரே. 5

கமையொடு நின்றசீரான் கழலுஞ்சிலம்பு மொலிப்பச், சுமையொடுமேலும் வைத்தான் விரிகொன்றையுஞ் சோமனையு, மமையொடு நீண்டதிண்டோள மகாய பொற்ருேடிலங்க,வுமையொடுங்கூட நின்ருனுறையும்மிட மொற்றியூரே. 6

நன்றியால் வாழ்வதுள்ளம் முலகுக்கொரு நன்மையாலே, கன்றினர் மும்மதிலுங்கருமால் வரையே சிலையாப், பொன்றினர் வார்சுடலைப் பொடிநீறணிந்தாரழலம், பொன்றினெய்த பெம்மானுறையும்மிட மொற்றியூரே. 7

பெற்றியாற் பித்தனெப்பான் பெருமான் கருமானுரி தோல், சுற்றியான் சுத்திசூலஞ் சுடர்க்கண்ணுதன்மேல் விளங்கத், தெற்றியாற் செற்றரக்கனுடலைச் செழுமால் வரைக்கீ, ழொற்றியான் முற்றுமாள்வா னுறையும்மிட மொற்றியூரே. 8

திருவினர்போகினு னுந்திருமாலு மோர்தெய்வ முன்னித், தெரிவினுற் காணமாட்டார் திகழ்சேவடி சிந்தைசெய்து,

பரவினார் பாவமெல்லாம் பறையப்படா பேரொளியோ, டொரு
வனாய் நின்றபெம்மா னுறையும்மிட மொற்றியூரே. 9

தோகையம் பீலிகொள்வார் துவர்க்கூறைகள் போர்த்
துழல்வா, ராகமசெல்வனாரை யலர்தூற்றுதல் காரணமாக்,
கூகையம்மாக்கள் சொல்லைக்குறிகொள்ளன்மி னேழுலகு,
மோகைதந்தாளவல்லா னுறையும்மிட மொற்றியூரே. 10

ஒண்பிறை மல்குசென்னியிறைவன் னுறையொற்றி
யூரைச், சண்பையர் தந்தலைவன் றமிழ்ஞான சம்பந்தன்
சொன்ன, பண்புனை பாடல்பத்தும் பரவிப்பணிந்தேத்த வல்
லார், விண்புனைமேலுலகம் விருப்பெய்துவர் வீடெளிதே. 11

திருச்சிற்றம்பலம்.

---



## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்தது.

திருநேரிசை. (௪-ம். திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச் சடையில் வைத்தவேத கீதன்றன்பாத,
மெள்ளத்தா னடையவேண்டின் மெய்தரு ஞானத்தீயாற்,
கள்ளத்தைக்கழிய நின்றார் காயத்துக்கலந்து நின்று,வுள்ளத்து
ளொளியுமாகு மொற்றியூருடைய கோவே. 1

வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா வானவரிறைவனின்று, புசிப்பதோர் பொள்ளலாக் கையதனொடும் புணர்வுவேண்டி, லசிர்ப்பெனு மருந்தவத்தாலான்மா விடமதாகி, யுசிர்ப்பெனு முணர்வு முள்ளா ரொற்றியூருடைய கோவே. 2

தானத்தைச் செய்துவாழ்வான் சலத்துளே யழுந்துகின்றீர், வானத்தை வணங்கவேண்டில் வம்மின்கள் வல்லீராகின், ஞானத்தை விளக்கையேற்றி நாடியுள் விரவவல்லா, ரூனத்தை யொழிப்பர்போலு மொற்றியூருடைய கோவே. 3

காமத்துளழுந்திநின்று கண்டராலொறுப்புண்ணுதே, சாமத்துவேதமாகி நின்றதோர் சயம்புதன்னை, யேமத்து மிடையிராவுமேகாந்த மியம்புவாருக், கோமத்துளொளியதாகு மொற்றியூருடைய கோவே. 4

சமையமே லாறுமாகித் தானொருசயம்புவாகி, யிமையவர் பரவியேத்த வினிதி னங்கிருந்த வீசன், கமையினையுடையராகிக் கழலடி பரவுவாருக், குமையொரு பாகர்போலு மொற்றியூருடைய கோவே. 5

ஒருத்திதன் றலைச் சென்றாளைக் கரந்திட்டா னுலகமேத்த, வொருத்திக்கு நல்லனாகி மறுப்படுத் தொளித்துமீண்டே, யொருத்தியைப் பாகம்வைத்தா னுணர்வின லைய முண்ணி, யொருத்திக்கு நல்லனல்ல னொற்றியூருடைய கோவே. 6

பிணமுடை யுடலுக்காகப் பித்தராய்த் திரிந்துநீங்கள், புணர்வெனும் போகம் வேண்டா போக்கலாம் பொய்யைநீங்க, நிணமுடை நெஞ்சினுள்ளானினைக்கு மாகினைக்கின்றாருக், குணர்வினை டிருப்பர்போலு மொற்றியூருடைய கோவே. 7

பின்னுவார் சடையான் றன்னைப் பிதற்றிலாப் பேதைமார்க, டுன்னுவார் நரகந்தன்னுட் டொல்வினை தீரவேண்டின், மன்னுவான் மறைகளோதி மனத்தினுள் விளக்கொன்றேற்றி, புன்னுவாருள்ளத்துள்ளா ரொற்றியூருடையகோவே.

முள்குவார் கோபம்வேண்டின் முயற்றியா விடர்கள் வந்தா, லெள்குவாரெள்கி நின்றங் கிது வொருமாய மென்பார், பள்குவார் பத்தராகிப் பாடியுமாடியுநின், றுள்குவாருள்ளத் துள்ளா ரொற்றியூருடைய கோவே. 9

வெறுத்துகப் புலன்களைந்தும் வேண்டிற்று வேண்டு நெஞ்சே, மறுத்துகவார்வச்செற்றக் குரோதங்களான மாயப், பொறுத்துகப்புட்பகத்தே ருடையானை யடரவூன்றி, யொறுத் துகந்தருள்கள் செய்தா ரொற்றியூருடைய கோவே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருநேரிசை. (ச-ம். திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன் கூட்டைவாளா வுள்ளத்தோர் கொடுமை வைத்துக், காம்பிலாமூழைபோலக் கருதிற்றே முகக்கமாட் டேன், பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின் றேனை, ஓம்பிநீ யுய்யக்கொள்ளா யொற்றியூருடையகோவே

மனமெனுந்தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச், சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகடலோடும்போது, மத னெனும் பாறைதாக்கி மறியும்போதறிய வொண்ணு, துனை யுனுமுணர்வை நல்கா யொற்றியூருடைய கோவே. 2

திருச்சிற்றம்பலம்.

---

திருவிருத்தம். (ச-ம். திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

செற்றுக்களிற்றுரி கொள்கின்றஞான்று செருவெண் கொம்பொன், றிற்றுக்கிடந்தது போலுமிளம்பிறை பாம்பத

னைச், சுற்றிக்கிடந்தது கிம்புரிபோலச் சுடரிமைக்கு, நெற்றிக் கண் மற்றதன்முத்தொக்குமா லொற்றியூரனுக்கே. 1

சொல்லக்கருதிய தொன்றுண்டு கேட்கிற்றொண்டாய டைந்தார், அல்லற்படக் கண்டுபின்னென் கொடுத்தியலைகொண் முந்நீர்,மல்லற்றிரைச்சங்க நித்திலங்கொண்டு வம்பக்கரைக்கே, ஒல்லைத் திரைகொணர்ந் தெற்றொற்றியூ ருறையுத்தமனே.

பரவைவருதிரை நீர்க்கங்கை பாய்ந்துக்க பல்சடைமே, அரவமணி தருகொன்றை யிளந்திங்கள் சூடியதோர், குரவ நறுமலர் கோங்கமணிந்து குலாய சென்னி, உரவுதிரை கொணர்ந்தெற் றொற்றியூருறை யுத்தமனே. 3

தானகங்கா டரங்காகவுடையது தன்னடைந்தார்-ஊனக நாறுமுடைதலையிற் பலிகொள்வதுந்தான், றேனக நாறுந்திரு வொற்றியூ ருறைவாரவர்தாந், தானகமேவந்து போனகம் வேண்டியுழிதர்வரே. 4

வேலைக்கடனஞ்சமுண்டு வெள்ளேற்றொடும் வீற்றிருந்த, மாலைச்சடையார்க் குறைவிடமாவது வாரிகுன்று, ஆலைக்கரும் பொடு செந்நெற் கழனியருகணைந்த, சோலைத்திரு வொற்றி யூரை யெப்போதுந் தொழுமின்களே. 5

புற்றினில்வாழு மரவுக்குந் திங்கட்குங்கங்கையென்னுஞ், சிற்றிடையாட்குஞ் செறிதருகண்ணிக்குஞ் சேர்விடமாம், பெற்றுடையான் பெரும்பேச்சுடையான் பிரியாதெனையாள், விற்றுடையா னொற்றியூ ருடையான்றன் விரிசடையே. 6

இன்றரைக் கண்ணுடையா ரெங்குமில்லை யிமயமென்னுங், குன்றரைக்கண்ணன் குலமகட்பாவைக்குக் கூறிட்டநாள், அன்றரைக் கண்ணுங் கொடுத்துமையாளையும் பாகம்வைத்த, ஒன்றரைக் கண்ணன் கண்டீரொற்றியூ ருறையுத்தமனே.

சுற்றிவண்டி யாழ்செயுஞ் சோலையுங்காவுந் துதைந்தி லங்கு, பெற்றிகண்டான் மற்றியாவருங் கொள்வர்பிறரிடைநீ, யொற்றிகொண்டா யொற்றியூரையுங் கைவிட்டுறு மென் றெண்ணி, விற்றிகண்டாய் மற்றிதுவொப்ப தில்லிடம் வேதி யனே. 8

சுற்றிக்கிடந்தொற்றியூரனென் சிந்தைபிரிவறியா, னெற் றித்திரிதந்து நீ யென்னசெய்தி யுலகமெல்லாம், பற்றித்திரிந் தது பல்லொடுநாமென்று கண்குழித்து, தெற்றித் திருப்ப தல்லா லென்னசெய்யுமித் தீவினையே. 9

அங்கட்கடுக்கைக்கு முல்லைப்புறவ முறுவல்செய்யும், பைங்கட்டலைக்குச் சுடலைக்களரிபருமணிசேர், கங்கைக்கு வேலையரவுக்குப் புற்றுக்கலை நிரம்பாத், திங்கட்குவானந் திரு வொற்றியூரர் திருமுடியே. 10

தருக்கினவாளரக்கன் முடிபத்திறப்பாதந்தன்னு, லொருக் கினவாறடியேனைப்பிறப்பறுத் தாளவல்லா, னெருக்கினவான வர் தானவர் கூடிக்கடைந்த நஞ்சைப், பருக்கினவாறென் செய் கேனொற்றியூருறை பண்டங்கனே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்குறுந்தொகை. (ரு-ம். திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஒற்றியூருமொளி மதிபாம்பினை, யொற்றியூருமப்பாம்பு மதனையே, யொற்றியூரவொரு சடைவைத்தவ, னொற்றியூர் தொழ நம்வினையோயுமே. 1

வாட்டமென்றுரைக்கும் மலையான்மக, ளீட்டவே யிரு ளாடியிடுபிணக், காட்டிலோரிகடிக்க வெடித்ததோ, ரோட்டை வெண்டலைக்கை யொற்றியூரரே. 2

கூற்றுத் தண்டத்தையஞ்சிக் குறிக்கொண்மி, ணூற்றுத் தண்டத் தடக்குமரனடி, நீற்றுத்தண்டத்தராய் நினைவார்க் கெலா, மூற்றுத்தண்டொப்பர்போ லொற்றியூரரே. 3

சுற்றும்பேய் சுழலச்சுடுகாட்டெரி, பற்றியாடுவர்பாய் புலித்தோலினர், மற்றையூர்களெல்லாம் பலிதேர்ந்துபோ, யொற்றியூர்புக் குறையுமொருவரே. 4

புற்றிலாடரவாட்டி யுமையொடு, பெற்றமேறுகந்தேறும் பெருமையான், மற்றையாரோடுவான வருந்தொழ, வொற்றி யூருறைவானோர் கபாலியே. 5

போதுதாழ்ந்து புதுமலர்கொண்டுநீர், மாதுதாழ்சடை வைத்தமணாளனூ, ரோதுவேதியனூர் திருவொற்றியூர், பாத மேத்தப் பறையுநம்பாவமே. 6

பலவுமன்னங்கள் பன்மலர்மேற்றுஞ்சுங், கலவமஞ்ஞை கள் காரெனவெள்குறு, முலவுபைம் பொழில்சூழ் திருவொற் றியூர், நிலவினானடி யேயடை நெஞ்சமே. 7

ஒன்றுபோலு முகந்தவரேறிற்று, வொன்றுபோலு முதைத்துக் களைந்தது, வொன்று போலொளிமாமதிசூடிற்று, வொன்றுபோலுகந்தா ரொற்றியூரரே. 8

படைகொள் பூதத்தர்வேதத்தர் கீதத்தர், சடைகொள் வெள்ளத்தர் சாந்த வெண்ணீற்றின, ருடையுந் தோலுகந்தா ருறை யொற்றியூ, ரடையுமுள்ளத்தவர் வினையல்குமே. 9

வரையினாருயர் தோளுடைமன்னனை, வரையினால் வலி செற்றலர் வாழ்விடந், திரையினார் புடைசூழ் திருவொற்றியூ, ருரையினாற் பொலிந்தா ருயர்ந்தார்களே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருத்தாண்டகம். (சு-ம். திருமுறை.)

### திருச்சிற்றம்பலம்.

வண்டோங்கு செங்கமலக்கழு நீர் மல்கு மதமத்தஞ்செஞ் சடைமேன் மதியஞ்சூடித், திண்டோள்களாயிரமும் வீசி நின்று திசைசேர நடமாடிச் சிவலோகனு, ருண்டார்நஞ் சுல குக்கோ ருறுதி வேண்டி யொற்றியூர் மேய வொளிவண்ண னுர், கண்டேனன் கனவகத்திற் கண்டேற்கென்றன் கடும் பிணியுஞ்சுடுந் தொழிலுங் கைவிட்டவே. 1

ஆகத்தோர் பாம்பசைத்து வெள்ளேறேறி யணிகங்கை செஞ்சடைமே லார்க்கச் சூடிப், பாகத்தோர் பெண்ணுடையா ராணுமாவர் பசுவேறியுழிதரு மெம்பரமயோகி, காமத்தாலங் கணையான் றன்னைவீழக் கனலா வெரிவிழுத்த கண்மூன் றினு, ரோமத்தா னுன் மறைகளோதலோவா வொளிதிகழு மொற்றி யூருறைகின்றூரே. 2

வெள்ளத்தைச் செஞ்சடைமேல் விரும்பிவைத்தீர் வெண் மதியும் பாம்புமுடனே வைத்தீர், கள்ளத்தை மனத்தகத்தே கரந்து வைத்தீர் கண்டார்க்குப் பொல்லாது கண்டீரெல்லே, கொள்ளத்தா னிசைபாடிப் பலியுங் கொள்ளீர் கோளரவங் குளிர்மதியுங் கொடியுங்காட்டி, யுள்ளத்தைநீர் கொண்டீரோ தலோவா வொளிதிகழு மொற்றியூ ருடையகோவே. 3

நரையார்ந்தவிடை யேறிநீறுபூசி நாகங்கச் சரைக்கார்த் தோர்தலைகையேந்தி, யுரையாவந் தில் புகுந்துபலிதான் வேண் டவெம்மடிகளும் மூர்தானே தோவென்ன, விரையாதே கேட் டியேல் வேற்கணல்லாய் விடுங்கலங்க ணெடுங் கடலுநின்று தோன்றுந் திரைமோதக்கரை யேறிச்சங்கமூருந் திருவொற்றி யூரென்றூர் தீயவாறே. 4

மத்தமாகளியானை யுரிவைபோர்த்து வானகத்தார் தான கத்தாராகிநின்று, பித்தர்தாம் போலங்கோர் பெருமைபேசிப் பேதையரை யச்சுறுத்திப் பெயரக்கண்டு, பத்தர்கடாம் பல ருடனே கூடிப்பாடிப் பயின்றிருக்கு மூரேதோபணியீரென்ன, வொத்தமைந்த வுத்திரநா ளீர்த்தமாக வொளிதிகழு மொற்றி யூரென்கின்றாரே. 5

கடியவிடையேறிக் காளகண்டர் கலையோடு மழுவாளோர் கையிலேந்தி, யிடியபலி கொள்ளார் போவாரல்ல ரெல்லாந்தா னிவ்வடிகள் யாரென்பாரே, வடிவுடைய மங்கையுந் தாமுமெல் லாம் வருவாரை யெதிர்கண்டோ மயிலாப்புள்ளே, செடிபடு வெண்டலை யொன்றேந்திவந்து திருவொற்றியூர் புக்கார்தீய வாறே. 6

வல்லராய் வானவர்களெல்லாங்கூடி வணங்குவார் வாழ்த் துவார்வந்து நிற்பா, ரெல்லையெம்பெருமானைக் காணுமென்ன வெவ்வாற்று லெவ்வகையாற் காணமாட்டார், நல்லார்க ணான் மறையோர் கூடிதேடி நாமிருக்கு மூர்பணியீரடிகேளென்ன, வொல்லை தான்றிரையேறி யோதமீளு மொளிதிகழுமொற்றி யூரென்கின்றாரே. 7

நிலைப்பாடே நான்கண்டதேடிகேளாய் நெருநலைநற் பக லிங்கோரடிகள் வந்து, கலைப்பாடுங் கண்மலருங் கலக்கநோக் கிக் கலந்து பலியிடுவே னெங்குங் காணேன், சலப்பாடேயினி யொருநாட் காண்பேனாகிற் றன்னகத் தென்னக மொடுங்கும் வண்ண, முலைப்பாடே படத்தழுவிப் போகலொட்டே னொற்றி யூருறைந்திங் கே திரிவானையே. 8

மண்ணல்லை விண்ணல்லை வலையமல்லை மலையல்லைகட லல்லை, வாயுவல்லை யெண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை, பெண்ணல்லை யாணல்லைபேடு

மல்லை பிறிதல்லையானாலும் பெரியாய் நீயே, யுண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை யுணர்வரிய வொற்றியூ ருடையகோவே.

மருவுற்றமலர்க் குழலிமட வாளஞ்ச மலைதுளங்கத்திசை நடுங்கச் செறுத்து நோக்கிச், செருவுற்றவா ளரக்கன்வலி தான் மாளத் திருவடியின் விரலொன்று லலறவூன்றி, யுருவொற்றி யங்கிருவ ரோடிக்காணா வோங்கினவவ் வொள்ளழலா ரிங்கே வந்து, திருவொற்றி யூர்நம்மூ ரென்று போனார் செறிவளைக ளொன்றொன்றாச் சென்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்.

———



## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்தது.

பண் - தக்கேசி. (எ-ம். திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

அழுக்குமெய் கொடுன் திருவடி யடைந்தே னதுவு நான் படப் பாலதொன்றானாற், பிழுக்கைவாரியும் பால்கொள்வ ரடிகேள் பிழைப்பனாகிலுந் திருவடிப் பிழையேன், வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லான் மற்று நானறி யேன்மறுமாற்ற,

மொழுக்கவென்கணுக் கொருமருந்துரையா யொற்றியூரெனு
மூருறைவானே. 1

கட்டனேன் பிறந்தேனுனக்காளாய்க் காதல்சங்கிலிகார
ணமாக, வெட்டிஞற்றி கழுந்திருமூர்த்தி யென் செய்வானடி
யேனெடுத் துரைக்கேன், பெட்டனாகிலுந் திருவடிப் பிழை
யேன் பிழைப்பனாகிலுந் திருவடிக்கடிமை, யொட்டினேனென்னை
நீசெய்வதெல்லா மொற்றியூரெனு மூருறைவானே. 2

கங்கைதங்கிய சடையுடைக்கரும்பே கட்டியேபலர்க்குங்
கனி கண்ணே, யங்கைநெல்லியின் பழத்திடையமுதே யத்தா
வென்னிடரார்க் கெடுத்துரைக்கேன், சங்குமிப்பியுஞ் சலஞ்
சலமுரல வயிரமுத்தொடு பொன்மணிவரன்றி யொங்குமா
கடலோ தம்வந்துலவு மொற்றியூரெனு மூருறைவானே. 3

ஈன்றுகொண்டதோர் சுற்றமொன்றன்று வியாவராகிலெ
னன்புடையார்க, டோன்ற நின்றருள் செய்தளித்திட்டாற்
சொல்லுவாரையல்லா தனசொல்லாய், மூன்றுகண்ணுடையா
யடியேன்கண் கொள்வதே கணக்குவழக்காகி, லூன்றுகோ
லெனக்காவ தொன்றருளா யொற்றியூரெனு மூருறைவானே.

வழித்தலைப் படுவான் முயல்கின்றே னுன்னைப்போலென்
னைப் பாவிக்கமாட்டேன், சுழித்தலைப்பட்ட நீரதுபோலச்
சுழல்கின்றேன் சுழல்கின்ற தென்னுள்ளங், கழித்தலைப்பட்ட
நாயதுபோல லொருவன்கோல் பற்றிக்கறகற விழுக்கை,
யொழித்துநீ யருளாயினசெய்யா யொற்றியூரெனுமூ ருறை
வானே. 5

மானைநோக்கியர் கண்வலைப்பட்டு வருந்தியானுற்றவல்
வினைக்கஞ்சித், தேனையாடிய கொன்றையினுபுன் சிலமுங்குண
முஞ்சிந்தியாதே, நானுமித்தனை வேண்டுவதடியே னுயிரொ
டுங் நரகத் தழுந்தாமை, ஊனமுள்ளன தீர்த்தருள்செய்யா
யொற்றியூரெனுமூ ருறைவானே. 6

மற்றுத்தேவரை நினைந்துனைமறவே னெஞ்சினொடு வாழவுமாட்டேன், பெற்றிருந்துபெரு தொழிகின்ற பேதையேன் பிழைத்திட்டதை யறியேன், முற்றுநீயெனை முனிந்திடவடியேன் கடவதென்னுனை நான்மறவேனே, லுற்றநோயுறு பிணி தவிர்த்தருளா யொற்றியூரெனுமூ ருறைவானே. 7

கூடினாய் மலைமங்கையை நினையாய் கங்கையாயிரமுகமுடையாளைச், சூடினாயென்று சொல்லியபுக்காற் றெழும்பனேனுக்குச் சொல்லலுமாமே, வாடிநீயிருந்தென் செய்திமனனே வருந்தியா லுற்றவல்வினைக்கஞ்சி, ஊடினாலினியாவ தொன்றுண்டே யொற்றியூரெனுமூ ருறைவானே. 8

மகத்திற்புக்கதோர் சனியெனக்கானாய் மைந்தனே மணியேமணவாளா, வகத்திற் பெண்டுகள்நானொன்று சொன்னாலழையேல் போகுருடா வெனத்தரியேன், முகத்திற்கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன் முக்கணா முறையோ மறையோதீ, யுகைக்குந் தண்கடலோதம் வந்துலவு மொற்றியூரெனுமூருறைவானே. 9

ஓதம்வந்துலவுங் கரைதன்மேலொற்றியூருறைசெல்வனை நாளு ஞாலந்தான் பரவப்படுகின்ற நான்மறையங்க மோதிய நாவன், சீலந்தான் பெரிதும்மிகவல்ல சிறுவன்வன்றொண்டனாரனுரைத்த, பாடல் பத்திவை வல்லவர்தாம்போய்ப்பரகதி திண்ண நண்ணுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

பண் - குறிஞ்சி. (எ-ம். திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பாட்டும்பாடிப் பரவித்திரிவார், ரீட்டும் வினைகளைப்பார் கோயில், காட்டுங்கலமுந் திமிலுங்கரைக்கே யோட்டுந் திரைவாயொற்றியூரே. 1

பந்துங்கிளியும் பயிலும்பாவை, சிந்தை கவர்வார்செந்தீ வண்ண, ரெந்தம்மடிக ளிறைவர்க்கிடம்போ, லுந்துந்திரைவா யொற்றியூரே. 2

பவளக்கனிவாய்ப் பாவைபங்கன், கவளக்களிற்றி னுரிவை போர்த்தான், தவழுமதி சேர்சடையாற் கிடம்போ, லுகளுந் திரைவா யொற்றியூரே. 3

என்னதெழிலு நிறையுங்கவர்வான், புன்னைமலரும் புற விற்றிகழுந், தன்னைமுன்ன நினைக்கத்தருவா, னுன்னப்படுவா னொற்றியூரே. 4

பணங்கொளரவம் பற்றிப்பரமன், கணங்கள் சூழக்கபால மேந்தி, வணங்குமிடைமென் மடவாரிட்ட வுணங்கல்கவர்வா னொற்றியூரே. 5

படையார் மழுவன் பால்வெண் ணீற்றன், விடையார் கொடியன்வேதநாவ, னடைவார் வினைகளறுப்பா னென்னை, யுடையா னுறையு மொற்றியூரே. 6

சென்றபுரங்கடீயில்வேவ, வென்றவிகிர் தன்வினையை வீட்ட, நன்றுநல்ல நாதன்னரையே, றென்றையுடையானொற் றியூரே. 7

கலவமயில்போல் வளைக்கைநல்லார், பலரும்பரவும் பவ ளப்படியா, னுலகினுள்ளார் வினைகடீர்ப்பா, ருலவுந்திரைவா யொற்றியூரே. 8

பற்றிவரையை யெடுத்தவரக்க, னிற்றுமுரிய விரலாலடர் த்தா, றெற்றும்வினைகடீர்ப்பாரோத, மொற்றுந்திரைவா யொற்றி யூரே. 9

ஒற்றியூருமரவும் பிறையும், பற்றியூரும் பவளச்சடையா,
னொற்றியூர்மே லாரனுரைத்த, கற்றுப் பாடக்கழியும் வினையே.

திருவொற்றியூர்த் திருப்பதிகம் - அ.

## திருவோற்றியூர்த் தேவாரப்பதிகம்

முற்றிற்று.

---



## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்தது.

யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதெனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
மண்ணுள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச்
சிவனே யெம்பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா
ளென்றென்றே வருந்துவனே.

---



## அருணகிரி நாதர் அருளிச்செய்தது

### திருப்புகழ்.

கரிய முகில் போலு மிருளளக பார
  கயல் பொருத வேலின் விழிமாதர்
கலவிகளின் மூழ்கி மிருகமத படீர
  களப முலை தோய வணையூடே
விரக மதுவான மதனகலை யோது
  வெறிய னென நாளு முலகோர்கள்
விதரணமதான வகை நகைகள் கூறி
  விடுவதன் முன் ஞான வருடாராய்
அரி பிரமர் தேவர் முனிவர் சிவயோக
  ரவர்கள் புகழோத புவிமீதே
அதிக நடராஜர் பரவுகுரு ராஜ
  வமரர் குல நேச குமரேசா
சிரகர கபால ரரிவை யொரு பாகர்
  திகழ் கனக மேனி யுடையாளர்
திருவளரு மாதி புரியதனின் மேவு
  ஜெய முருக தேவர் பெருமாளே.

உ

# திருவொற்றியூர்த் தலமான்மிய

# தோத்திரங்கள்



## குணாலய விநாயகர் துதி.

விலகரு மென்னெடுந்துயரும் வினைப்பயில்வு மென்மனத்தி
னிலகியெழு புன்றொடையு மெளிதின்முடிப் பதுகுறித்துப்
பலர்புகழு மொற்றியூர்ப் பருமணிப்பொற் கோபுரத்திற்
குலவியமுக் கட்களிற்றுக் குணாலயன்றாள் குறிக்கொள்வாம்.



## சுப்பிரமணியர் துதி.

வார்புனையுந் தனவள்ளி யானைபுண
ரீராறு மணித்தோண் மார்பும்
பார்வெருவப் பொருஞ்சூரன்
படவிடுத்த வயில்வேலும் பவுரிகொண்டு
கார்குலவ நடமாடு மஞ்ஞையுமம்
மஞ்ஞையின்மேற் கலந் திருந்த
சீர்குலவு கந்தனிரு பொற்பதமும்
அறுமுகமுஞ் சிந்தைசெய்வாம்.

### ஆதிபுரித்தியாகர் துதி.

காராரு மாலயனுர் கைத்தாள முழவொலிப்ப
வாராருந் தனத்துமையாள் கண்டுவந்து மனமுருகத்
தாராருஞ் சடையசையப் பத்மதாண் டவமாடுஞ்
சீராரு மாதிபுரித் தியாகர்திரு வடிபோற்றி.

### படம்பக்கநாதர் துதி.

சீரான நான்முகன்மா றேடிக் காணுத்
திருவுருவா யருவாகி யிரண்டு மின்றிப்
போராத வுலகமுத லந்து மாகிப்
பெறுவானுந் தருவானுந் தாமே யாகி
ஆராயும் வேதமுத லெல்லா மாகி
யவைதமக்குந் தோற்றும லப்பா லாகி
யோரான திருவொற்றி யூரின் வாழு
மெழுத்தறிவார் பதகமலஞ் சிரமேல் வைப்பாம்.

### வடிவுடையம்மை துதி.

படிமிசையி லருளொளியாய்ப் பாரபர சத்
தியதாகிப் பரவி நின்று
நெடியவனுன் முகனுதி யுயிர்த்தொகைக
டாம் போற்று நிலையும் பொற்பாந்
தடவரைபோ லிருதனமும் பிறைநுதலு
மலர்விழியுந் தயங்கா நிற்கும்
வடிவுடைய மங்கையெனு மாதாவி
னிருதாளை வணக்கஞ் செய்வாம்.

### திருநந்திதேவர் துதி.

மறந்தினியா னச்சதனில் வாராம லருடந்து
சிறந்தபுகழ்க் காயிலைதனிற் றிருக்கணங்கள் புடைசூழ
அறந்திகழு மரியயனே யாதியர்க்கும் வரமருளி
நிறைந்தசிவன் றனைப்பிரியா நேசநந்தி தாள்போற்றி.

## திருஞான சம்பந்த சுவாமிகள் துதி.

காழிநகர்தனிற் றோன்றிக் கடம்பவனத் தமணழித்தே
வீழிநகர்ச் சிவனருளால் விளங்குபடிக் காசுபெற்றம்
யாழினிடைத் திருப்பதிக மிசையுடனே தான்பாடி
வாழிமணத் துட னிறையைமகிழ்ந் தடைந்தான் றாள்போற்றி.

## திருநாவுக்கரசு சுவாமிகள் துதி.

விளங்குதிரு வாமூரில் வேளாளர் குலத்துதித்துக்
களங்கமுறு மமணர்செயுங் கடுந்துயரைத் தானீக்கி
வளங்குலவு மறைக்காட்டின் மறையடைத்த திருக்கதவைத்
தெளிந்ததிருத் தமிழாலே திறப்பித்தான் றாள்போற்றி.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

எம்பிரா னுவலூ ரிசைஞானி யிடத்துதித்தே
தம்பிரான் றோழனெனச் சங்கரனைத் தூதுகொண்டு
மும்பரெண்ணக் கராமுன்னு ணுண்டமறைச் சேயழைத்தே
கம்பமத களிறேறிக் கயிலைசென்றா னடிபோற்றி.

## மாணிக்கவாசக சுவாமிகள் துதி.

மருவாரும் பொழின்மதுரை மன்னனுக்கே மந்திரியாய்ப்
பெருஞான வுபதேசம் பெருந்துறையிற் பெற்றருளித்
திருவாச கம்புகன்று சிவானந்தக் கடன்மூழ்கு
மொருவாத வூராளி பதம்போற்றி யுளமகிழ்வாம்.

## மற்றைத் திருத்தொண்டர் துதி.

நாவிசைக்குஞ் சிவமறையோர் நற்றவர்க டமைப்போற்றித்
தேவர்பிரான் பணிவிடையோர் திருவடிக டமைப்போற்றி
மேவுதி ரளார்கூட்ட மெய்த்தொண்டர் தமைப்போற்றி
யாவலுட னொற்றிபுரி யமர்வோர்தா ளிணைபோற்றி.

# திருவொற்றியூர்ப் புராண சாரம்.

## நூல் வரலாறு.

ஓதநீர் சூழுந் தொண்டை
　யொற்றிமான் மியத்தை நன்கு
ஓதவே வேண்டி யந்த
　வுயர்நைமி சாரண் யத்து
மாதவர் வேண்ட வாங்கே
　மன்னிய தவத்தான் மிக்க
சூதமா முனிசி ரேட்டர்
　சொல்லினர் தலந்தொ குத்தே.

**தத்துவங்** கடந்த தனிமுதற் கடவுளை நித்தமும் போற்றும் சித்தர்களான நைமிசாரணிய முனிவர்கள், சிவ யோகத்திருக்கும்போது, பவரோகம் நீக்கும் தவராசரான சூதமா முனிவர், அங்கு எழுந்தருள, அவரைக் கண்டு அவா மீக்கொண்டு மண்ணுறப் பணிந்து உண்ணெக்காற் போற்றி உபசரித்து, முனிவர்கட்கரச! நனியெலா முணர்ந்தோய்! பல கலை கற்ற பரசிவபக்த! தேவரீர், முன்னர், திருமயிலைச் சிறப்பை, கருதி யுளமகிழத் திருவாய்மலர்ந்தருளினீர், அக்கால், அத்தலத்திற்கு வடக்கில் 'திருவொற்றியூர்' என்னும் ஒருதலம் உன்டென்று அருளினீர்; அத்தலப் பெருமையைச் சித்த சஞ்சலமற முற்றிலும் எமக்கருள்வீராக, என்று நைமி சாரணிய முனிவர்கள் வேண்ட, சூதமா முனிவர், திருவொற்றியூ ரென்னுஞ் சொல்லைக் கேட்டவன் மாத்திரத்தானே, கனனல் மெழுகுபோன்று மனமிக வுருகி, அன்புமேலீட்டால் கண்ணினீரோட மயிர்க்குச்செறிந்து, உயர் ஒற்றியூர் மகிமையைச்

சொல்லத் தொடங்கில், அல்லற்படும் பவம் எள்ளளத்தனையு மின்றி மெல்லப் போய்விடுமென்று துணிந்து சொல்லத் தொடங்கினர்.

'திருவொற்றியூர்' என்று சொன்ன மாத்திரத்தால் எமபயமில்லை. திருவொற்றியூருக்குப் போகவேண்டு மெனப் புறப்படில் பாவமனைத்தும் போய்விடும். திருவொற்றியூர் எல்லையை மிதிக்கில் கருவுற்ற நோயெலாம் ஒழியும்.

திருவொற்றியூர்க், குணலய விநாயகரைக் கண்ணுற் கண்டு பணியில் பண்ணும் பாவங்கள் நீங்கும்.

திருவொற்றியூர் மாணிக்கத் தியாகரைக் காணில் பூமிக் கண் பிறப்பதில்லை.

திருவொற்றியூர் படம்பக்க நாதரை நினைக்கில் அடுந் துட்ட எமன் வரான்.

திருவொற்றியூர் வடிவுடையம்மையைப் போற்றில் படிமிசை எல்லாச் செல்வமுமுண்டு, இல்லாளும் மக்களும் கண்டு பல்லாயிரம் ஆண்டும் வாழ்வர்.

திருவொற்றியூரில் இறக்கில் பிரமனுக்கும் எட்டாச் சுவர்க்கம் பெறுவர்.

திருவொற்றியூரில் அன்னமளிப்போர் உன்னதமாகிய இந்திரபதத்தை யடைவர்.

திருவொற்றியூரில், பிதிர்க்களுக்கு எள்ளுந் தண்ணீரு மிறைக்கில் உள்ளுஞ் சிவகதி யடைவர்.

திருவொற்றியூரில், திருவிழாச் செய்துவைப்போர் உருவம் வழாத பிரமலோகத்தை யெய்துவர்.

திருவொற்றியூரில், ஆலயப்பணி யியற்றுவோர் மாலுறையும் மேலுலகைப் பெறுவர்.

திருவொற்றியூரைத் தரிசியாதவர்க்கு முத்தி கிடைப்பது அரிதாம்.

திருவொற்றியூரினுஞ் சிறந்த தலம் ஒன்று உண்டென்று எண்ணுபவன் நரகை யடைவன்.

திருவொற்றியூர் மாணிக்கத் தியாகரின் நடனத்தைக் கண்டவர் வேறு தலத்தைக் காணவும் விரும்புவரோ?

திருவொற்றியூர், வடிவுடையம்மனைக் காணுங் கண்களே கண்கள், மற்றைய கண்கள் புண்களே.

இந்திரன் பொன்னுலகையும், பிரமன் சத்திய வுலகையும், விஷ்ணு வைகுண்டத்தையும் பெற்றுக்கொண்டது திருவொற்றியூரைத் தரிசித்த புண்ணியத்தின் பலனும்.

திருவொற்றியூரிலுள்ள கற்களனைத்தும் இலிங்கங்கள், தண்ணீரனைத்தும் புண்ணிய கங்கை, மரங்களெல்லாம் கற்பக விருட்சங்கள், உணவுப் பொருளெல்லாம் அமரர்க்குரிய அமுதம்.

திருவொற்றியூரில் நடத்தலே வலம்வரல், பேசுதல் மறையோதல், தூங்குதல் ஒங்குறு நிட்டை.

இன்னோரன்ன பல சிறப்புக்களை யுடையதால் திருவொற்றியூரே சிவலோகமாம்.

ஐவகை வேள்விகளை யாற்றினும், அட்டாங்கயோகம் நோற்பினும், தான முதலிய பல புண்ணியங்களைச் செய்யினும் திருவொற்றியூரைக் காணுதார் வருமுத்தி யின்பத்தை யடையார்.

தேவர்களும் திருவொற்றியூரில் ஒரு கெட்ட புழுவாக வேனும் பிறக்க விரும்புவார்களெனின், இத்தலத்தின் மகிமையை இன்னதென்று எடுத்துக் கூறலாவதோ?

திருவொற்றியூர் எல்லாத் தலங்களுக்கும் ஆதிகாரண மானதால் இதற்கு ஆராதனையானது முறையாய் நடக்கில் தலங்களனைத்திற்கும் நடந்ததேயாம்.

திருவொற்றியூரைத் தரிசியாதவர் நற்குலம் நற்குண முடையவ ரெனினும் தீயரேயாவர்.

திருவொற்றியூர் மகிமையை ஒரு பத்துநூறு நாவுடைய ஆதிசேடனும் கூறியமையாதெனின், யான் கூறல் எங்ஙனம்? ஆயினும் திருவொற்றியூரான் திருவருளால் தெரிந்தவரை சிறிது கூறுகின்றேன் என்று படம்பக்கநாதரையும் வடிவுடையம்மையையும் மனத்துட் கொண்டவராய் சூதமா முனிவர் திருவொற்றியூர் மான்மியத்தைச் சொல்லத் தொடங்கினர்.

நூல்வரலாறு முற்றிற்று.

---

## திருவொற்றியூர்த் தல மான்மியம்.

நந்திமலை சொரிபாலி நதிபொய்யாப் பாய்தொண்டை
நாட்டி னுள்ள
எந்தைசிவ பிரானிருக்கு மெழிற்றலங்கள் தனைச்சூழு
மேற்றம் பெற்று
வந்தவுய ராதிபுரி முதலாக மருவுபல
நாமம் வாய்ந்த
இந்ததிருத் தலமூவர் வெண்காடர் இனிதேத்த
விலகிற் றன்றே.

ஒருநாள் வசிட்டமா முனிவர், பூசை செய்யுங்கால், அவருடைய காமதேநுவானது, இடபதேவர்மீது விருப்பங்கொண்டதை யறிந்து, ஒரு தருப்பைப் புல்லை இளங்கன்றுக்கிச்

செல்லவிட, காமதேநு அதைக் கண்டு மனங்கசிந்து முலைப் பாலை நந்தி மலையிற் சொரிந்தது.

அந்தப்பால் ஒரு ஆறுய்ப்பெருகி, குறிஞ்சிநிலம், முல்லை நிலம் பாலைநிலம், மருதநிலம், நெய்தல் நிலம் எங்கும் பாய்ந்து, தெங்கு, மா, பலா, கமுகு, கதலி முதலான பலவகை காவனங்கள் சூழ்ந்ததும், சான்றோர்களை யுடையதுமாகிய தொண்டைநாட்டில் பாலியாறு (பாலாறு) என்னுந் திருநாமத்துடன் பாய்ந்து வளத்தைப் பெருக்குகின்றது.

அத்தகைய தொண்டை நாட்டில், வேதமாகிய சூதமா நிழலில், சாதல் பிறப்பற்ற ஏகாம்பரநாதரை, உமாதேவியார், கம்பாநீராடி தனமிரண்டும் புதைய மனங்கரைந்து களிப் பெழத் தழுவி யணைத்து மகிழும் காஞ்சித் தலமும்,

திண்ணனு ரென்னும் கண்ணப்ப நாயனர் உண்ணும் வாய் நீரால் எண்ணுமஞ்சனமாட்டி கண்ணை யெடுத்தப்பிய சிகாளத்தித் தலமும்.

சம்பரன் சம்பாதி என்னும் கழுகுகளிரண்டும் விழுமிய மனத்தால் வழுவிலாது பூசை செய்யும் திருக்கழுக்குன்றத் தலமும், மலரவன் தாளந்தட்ட, மாயவன் டக்கை கொட்ட, நந்தியும் வாணசுரனும் மத்தளத்தையும், குடவாத்தியத்தையும் முழக்க காளிவெட்கக் காளகண்டனுடிய திருவாலங்காடு என்னுந் தலமும்.

இரவி, மதி, பிரமன், குமரன் என்பவர் வழுத்த அவர்கட்குக் காட்சி யளித்தருளிய திருமுல்லைவாயி லென்னுந் தலமும்.

திருநந்திதேவர் அருங் கங்கை நீரை இரவும் பகலும் பொழிகின்ற நந்திவாய்த் திருவூறல் (தக்கோலம்) என்னுந் தலமும்.

ஒரு தீர்த்தத்தை (நந்தி தீர்த்தம்) உண்டாக்கி அங்குச் சிவ யோகத்திருந்தனர்.

அங்ஙனமே, அறிதுயிலமர்ந்தோனும், உள்ளத்தில் பரசிவனது திருநடனத்தைத் தெள்ளிதிற்கண்டு களிப்புற்றிருக்கும்போதே, திடீலென திருநடனக்காட்சி மறைந்து விட்டது. அதனுல், கண்ணபிரான் மனம் பதைத்து, முனஞ்செய்ததை மறந்து, கண்ணீர் சொரிய, மண்மேல் விழுந்து புரண்டு வாய்குழற உதடு துடிக்க, எந்தையே! இமைப்பொழுதும் எங் நெஞ்சில் நீங்காத திருநடனம் இப்போது நீங்கிவிட்டகாரணம் என்னை? யான் செய்த பிழையாது? பொறுத்தருள்க. திருநடனக்காட்சி யின்றேல் ஒரு நிமிடமும் உயிர் தரியேன் என்று வேண்டிக்கொள்ள, பரசிவன் கனிந்து, அன்ப! விண்டுவே! நீ 'திருவொற்றியூருக்கு மாசித்திங்கள் ஞாயிற்றுக்கிழமை மக நட்சத்திரத்தில் வருவையேல், எமது திருநடனக்காட்சி கிடைக்கும். ஆதலின் அதுகாறும் அங்குச்சென்று தவஞ் செய்து கொண்டிருக்கக் கடவை யென்று ஆகாயவாணி ஒன்று எழுந்தது. விண்டு அதைக்கேட்டுக் களிப்புற்று கருணையங்கடலாகிய சிவபெருமான் செய்தருளியதை நினைந்து நினைந்து உருகிக்கொண்டிருந்தனர்.

அருகிலிருந்த, இலக்குமி தேவியார் அதைக்கண்டு ஐய! நீர் சற்று நேரத்திற்கு முன் முற்றும் கவலைக்குட்பட் டிருந்தீர் இப்போது பெருங்களிப்பில் மூழ்கினீர் இஃதென்னை? என வினவ, அதற்கவர், முன் நடந்தவற்றைக் கூறிவிட்டு, திருவொற்றியூருக்கு விஷ்ணுவானவர் புறப்பட்டனர்; இலக்குமி, தானும் வருவதற்கு எழ அதற்கிசைந்து இருவரும் திருவொற்றியூரை யடைந்து, நந்தியைக்கண்டு வணங்கி, முந்திய படம்பக்க நாதரைத் தரிசித்துப் பணிந்து போற்றி இருவரும், கிழக்கிலும், அக்கினி திக்கிலும் இரண்டு தீர்த்தங்களை

யுண்டாக்கி அவற்றில் நீராடி, நீறணிந்து, கண்டிகைபூண்டு, பஞ்சாக்கரத்தை மொழிந்து தவஞ் செய்தார்கள்.

இதை யுணர்ந்த உரோமரிஷியும் திருநடனத்தைக்காண, ஒருமனதாயுறுதிகொண்டு திருவொற்றியூரையடைந்து படம்பக்கநாதரைப் பணிந்து ஒரு இடத்திலிருந்து அடல்வேண்டு மைம்புலனையுமடக்கித் தவஞ்செய்தனர்.

இங்ஙனமிருக்க, பழைய பிரமன் மரிக்க, புதியதோர் பிரமன் விதியதாயுதிக்க: அவன் இவ்வுலகை நோக்கி, இஃதென்ன வியப்பு? படைப்பவன் யானுயிருக்க இவ்வுலகைப் படைத்துள்ளவர் யாவர்? என்று கருவங்கொண்டு உலகைக்காண விரும்பிச்செல்லத்தொடங்கி, முதலில் திருவொற்றியூரை யடைந்து அங்கிருந்த மாயோனைக்கண்டு வணங்காது ஓ விஷ்ணுவே! யானன்றி இவ்வுலகைப்படைத்தவன் யாவன்? என வினவ; விஷ்ணு இவனது இறுமாப்பைக் கண்டு, அடக்கக்கருதி இதோ இங்குள்ள உரோமரிஷியின் கையில் மயிர் கழிந்திருக்கின்றதே அது என்ன காரணம்? என்று முன்னர் வினவுவோம், பின்னர் இவ்விடயங்களையுங் கேட்போம் என்று எண்ணிக்கொண்டு உரோமரிஷியிடத்தில் இருவருஞ் சென்று, தவச்செல்வ! நினக்கு உடலெங்கும் உரோமம் மூடிக்கொண்டிருக்க, கையில் மாத்திரம் உரோமங்கள் உதிர்ந்திருப்பதற்குக் காரணம் யாது? என வினவினர்.

அதைக்கேட்ட உரோமரிஷி, ஐய! எண்ணில்லாத இரவி மதிகளும், தேவர்களும் இறக்கில், பிரமன் ஒருவன் இறப்பன்; எண்ணிறந்த பிரமர்களிறக்கில் மாயோன் ஒருவன் மரிப்பன். எண்ணிறந்த, மாயோர்கள் இறப்பரேல் எனது உரோமம் ஒன்று உதிரும் என்றனர்.

இவ்வாறு கோடிக்கணக்கான பேர்கள் இறந்ததால் எனக்குச் சில மயிர்கள் உதிர்ந்தன என்றனர். இத்தன்மையர் மற்றும் பலரும் உளர் என்றும் அறிவுறுத்தினர்.

அதைக்கேட்ட பிரமன் நடுக்குற்று, மாதவ! எனது பிழையைப் பொறுத்தருளல் வேண்டும். இருவரும் உரோம முனிவரை வணங்கிக்கொண்டு நந்திதேவர் நளின மலர்ப்பதத்தைப்பணிய, நந்திதேவர், விஷ்ணுவே! நீ இப்பிரமனுக்கு மகா மந்திரமாகிய சிவபஞ்சாக்கரத்தை யுபதேசித்து இத்தலத்திலேயே தவமாற்றும்படி செய்குவை" என்றருளினர். அவ்வாறே பிரமன் உபதேசம் பெற்று, இத்தலத்தின் வாயு திசையில் ஒரு பன்னகசாலை யமைத்துக்கொண்டு, வடதிசையில் தன் பெயரால் ஒரு சிவலிங்கத்தையும் தாபித்துப் பூசித்து, கீழ்த்திசையில் பஞ்சாக்கர செபஞ்செய்து, ஈசான திசையில் தவஞ்செய்து கொண்டிருந்தனன்.

பிரமனது பிரியாளாகிய கலைமகளும், மலைமகள் கொழுநனது அருளைப்பெறுவதற்கு இத்தலத்தின் நிருதி திசையில் ஒரு தீர்த்தமுண்டாக்கி, அதன்கரையில் தவஞ் செய்து கொண்டிருந்தனள்.

இவ்வாறு இவர்கள் தவஞ் செய்துகொண்டு, எப்போது? எம்பெருமானுர் திருநடனக்காட்சி கிடைக்குமோ? என, ஏங்கிக்கொண்டிருக்கையில், தேவதுந்துமி முதலான ஐவகை வாத்தியங்களும் ஆகாயத்தில் முழங்க, கற்பகத்தரு புட்ப மழை பொழிய, அமரர் ஆரவாரிக்க, நான்மறையொலி காதுகளைத்தாக்க, கந்தருவர்பாட, சிவகணங்களாட, திருச்சின்ன சங்கங்கள் ஒலிக்க, படம்பக்க நாதருக்குப் பின்புறமாய் மேற்றிசையில், திருமுகமண்டலமும், திருச்செவியிற் குண்டலமும், குழைகளும், காளகண்டம், கரத்தில் மழுவும், மானும், பாம்பும் புலித்தோலும், கங்கையுங் கொன்றையும் அசைந்

தாட, அம்மையாரும், விநாயகரும், வேலவரும், குலுங்கி யாட, மாணிக்கத்தியாகர் திருநடனஞ் செய்தருளினர்.

அதைக்கண்ட நந்தி முதலிய சிவகணங்களும் பிரமன் முகுந்தன் முதலான எண்ணிறந்த தேவர்களும், உரோமர் முதலான இருடி கணங்களும், எல்லார்க்கும் அடைக்கல! வல் லார்க்கு மாட்டார்க்கும் வரமருளும் வரமே! எல்லாம் வல்ல இறைவ! யாங்கள் முற்பிறப்பிற்செய்த பற்பல புண்ணியப்பய னால் தேவரீர் திருநடனங்காட்டி யருள்செய்தீர்; இத்தகைய இவ்வரிய பெரிய ஞானநடனத்தைக் கண்டு இவ்வுலகமும் உய் யுமாறு, இத்தலத்தில், திருவொற்றியூர் நாதனை விட்டு நீங் காதிருந்து எப்போதும் திருநடனஞ் செய்தருளவேண்டு மென்று வேண்ட, அவ்வாறே தியாகராஜப் பெருமானும் இசைந்தருளினர்.

இத்தகைய பெருமை வாய்ந்த தியாகராஜப் பெருமானது ஞானத் திருநடத்தை, இத்தலத்தில், அமாவாசை முதலான புண்ணிய தினங்களில் அன்போடு கண்டு தரிசிப்பவர் இம் மையில் இன்போடு செல்வத்தையும், மறுமையில் அருட்செல் வத்தையும் அடைந்துய்வர். இதை, வேறுவகையாகவும் கூறு வர் சிலர் அது வருமாறு:—

முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, முனிவ! ஆதிபுரி என்னும் 'திருவொற்றியூரின் கண், பரசிவன், நடனங்காட்டுங் கால் ஆறுமுறை நடித்ததற்குக் காரணம் யாது?' என்று வினவியதற்கு,

முனிவர்காள்! முதன்முறை செய்தருளிய திருநடனத் தால், பார்வதி தேவியார் மிகக் களிப்புற்றனர். இரண்டாம் முறை நடனத்தால் தேவர்களும், மூன்றும் முறை நடனத் தால் முனிவர்களும், நான்காம்முறை நடனத்தால் மக்களும்,

ஐந்தாம் முறை நடனத்தால் அன்பர்களும், துன்பம் நீங்கி இன்புற்றனர் என்றனர்.

இவ்வாறு பரசிவனது திருநடனத்தைக் கேள்வியுற்று, காசி மன்னன், அத்தகைய திருநடனத்தைத் தரிசிக்கப் பேரா வலுடன் வந்தனன். வரும் வழியில் திருநடனக் காட்சி முடிவுற்றது என்பதைக் கேட்டு, பெருந்துன்பக் கடலுள் மூழ்கி, இனியாம் செய்வதென்னே ? என்று உறுதிகொண்டு இம்முங்கிலையாய் உயிர் துறத்தலே தகுதியெனக் கண்டு கல் லின்மீது தனது தலையை மோதிக் கொண்டனன்.

இவ்வணமிருக்க, கைலையில், தேவகணங்களுடன் களிப் புற்றிருந்த பரசிவன் திடீலென மனவாட்டத்துடன் முகவாட் டமு முற்றனர். அதைக்கண்ட பிரமன் வணங்கி சுவாமின் ! இன்று தமக்கு விரைவில் கலக்கம் உண்டாவதற்குக் காரணம் என்ன? என்று வினயத்துடன் வினவினன்.

அதற்குப் பரசிவனர், இப்போது காசி மன்னன் கணக் கிலாத துயருற்றிருக்கின்றனன்; அதுவேதான் காரணம் என் றருளினர்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த கங்காதேவியானவள் யான் சென்று அவனுடைய மனத்துயரை மாற்றி வருகின்றே னென்று புறப்பட்டுக் காசிமன்னன்பாற் சென்று ஆரவாரிக்க, அதைக்கண்ட காசிமன்னன், அந்தோ ! இறைவனது கருணை இருந்தவாறென்னே ! என்று மனங்கசிந்து கைகுவித்து கங்கா தேவியைப் பணிந்து போற்ற, தேவியார், "அன்ப! திருவொற் றியூரிலுள்ள பிரமதீர்த்தமாடி அருகிலுள்ள புற்றிடங் கொண்ட படம்பக்கநாதரைக் காணில் முக்தியடைவை" என் றருளினர்.

அதைக்கேட்ட, மன்னன், அம்மையாரே! நான் திருவொற்றியூருக்கு வருதல் எற்றுக்கு, நான் குறிப்பிட்ட சிவ தாண்டவம் ஆகிவிட்டதே என்றனன்,

கங்காதேவி, காசிமன்னனைப் பலவாறுகத் தேற்றி, நீ உயிர் துறக்க விரும்பினும் திருவொற்றியூர்த் தவத்திலேயே உயிர் துறக்கலாம் என்று வற்புறுத்தி, காசி மன்னனை திருவொற்றியூருக்கு வருமாறு செய்தனள்.

பின்னர், காசி மன்னன், திருவொற்றியூரை யடைந்து பிரமதீர்த்தமாடி, முறைப்படி சுவாமி தரிசனஞ்செய்து கொண்டு மீண்டும் திருநடனக்காட்சி தந்தருள வேண்டு மென்று திருவொற்றியூர்ப் பெருமானைப் பலநாள் பலவாறுக வேண்டிக்கொண்டு வந்தனன்.

பின்னர், ஆதிபுரியின் பாதிமங்கையர் காசிமன்னனது தூசில் பக்தியைக் கண்டு வியந்து ஆருவதாக ஒரு திருநடனஞ் செய்து காட்சி யளித்தருளினர். அதைக் கண்ணாரக் கண்டு ஒண்ணுதனைத்து மடைந்து எண்ணில்லாத ஆனந்தக்கடலில் மூழ்கினன்.

அதன் பின்னர், பரசிவன், காசி மன்னனை நோக்கி, அன்ப! உனக்கு வேண்டிய தென்னை? என்று வினவியருளினன். அதற்கு, மன்னன், எந்தாய்! யான் வாழும் இடத்தில் கங்கையும் வாழ்தல் வேண்டும், அதில் நீராடினோர் காசிமணி கர்ணிகையில் நீராடிய பயனையடைய வேண்டும் என்பதே யென்றனன்.

பரசிவன், அப்படியே அருள்புரிந்தனன் ஆதலின் இப்போதும் திருவொற்றியூரிலுள்ள பிரமதீர்த்த மென்னும் தீர்த்தமானது, காசித்தீர்த்தமென வழங்கப்பட்டு அவ்வாறே பலனையும் அளிக்கின்றது என்பதாம்.

தியாகராஜர் நடனமான்மியம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.



## உமைகேள்வி மகிமை.

மன்னுறு கைலையில் மலமகளீ சனை
உன்னிய வுலகின ருய்திறமரு ளென
முன்னவன் ஒற்றியி னயன்றட மூழ்கினர்
என்னையே வழிபடீஇ யின்பம தெய்துவர்.

சிவபத்தர்களான முனிவரர்காள்! அருளே வடிவாகவுடையதும், ஊழியில் அழியாததும், எண்ணிறந்த பிரமன் விஷ்ணு முதலான தேவர்கள் வாழ்வதற்கு இடமுமாகிய வெள்ளியங்கிரியின்மீது, சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும்போது, ஒருநாள், மலைவளர் காதலியாகிய உமையவள் வணங்கி, இறைவ! கலியுகத்தில், இருவினையாற் கட்டப்பட்டுப் பிறந்திறந்துழலாநின்ற ஆன்மகோடிகள், ஆன்மலாபத்தையும், முத்தி வீட்டையும் பெற வழியற்றவர்களாய் இருக்கின்றார்களே, அவர்கள் எவ்வாறு தமது திருவடி நிழலையடைந்து உய்வர்?

அதை, தயைமிக்கூர்ந்து அடியாளுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டனள்.

அதைக்கேட்ட பரசிவன், புன்னகை கொண்டு இன்னிசை மொழியிற் கூறுகின்றனன்:—பார்வதியே! நீ வினவியது உலகிற்கு இனியதாகும், அதைக் கூறுதும் கேட்பாயாக. இவ்வுலகில், யாம், அருட்டிருமேனிகொண்டு எழுந்தருளிய தலங்கள் எண்ணிறந்தன. அவற்றுள் மிகச்சிறந்தவை அறுபத்தெட்டு. அவற்றையடைந்து சிவதீர்த்தத்தில் நீராடி உதயப்போதில் எம்மை ஆராதிப்பவர் முத்தியடைவர்.

கிரகண முதலான புண்ணியகாலங்களில் ஆராதித்தவர்கள் பிறப்புக்கடோறுஞ்செய்த பாவங்களை யொழித்துச் சிவலோக மடைவர்.

அங்கு பஞ்சாக்கர வுபதேசம் பெற்றுக்கொண்டவர் உண்மை ஞானிகளே யாவர்.

அங்ஙனமாயினும், அவையனைத்தினும் சிறந்தது, நம்மை வழி படாதவரும் முத்திபடைதற் பொருட்டு ஊழியின் முதலில் உண்டாக்கிய ஆதிபுரி யென்னும் திருவொற்றியூர்த் தலமாம்.

அதில் யாம் பிரமனுடைய மூலக்கனலையே திருக்கோயிலாகக்கொண்டு வீற்றிருக்கின்றோம்.

அங்குள்ள பிரமதீர்த்தத்தைக்காணினும் கொடிய பாவங்களும் நீங்கும். அதில் நீராடில் பிரமன், விஷ்ணுக்கள் அடையத்தகும் பதவியை யளிப்போம்.

அங்குள்ள சுயம்புலிங்கத்தைக்காணில் பலகோடி அசுவமேதயாகங்களின் பலன் கிடைக்கும்.

இத்தலம் பிரமனால் பூசிக்கப்பெற்றமையின் 'சொர்ணபுரி' எனவும், நாராயணன் பூசித்தமையின் 'நாரணபுரி'

எனவும் வேதங்கள் பூசித்தமையின் வேதபுரி எனவும் அழைக்கப்பெறும். யாம், மறைமுடியின்மீதும், இத் திருவொற்றியூரிலும் விளையாடிக் கொண்டிருக்கின்றோம். ஆதலின் இத்தலம் மிகச் சிறந்ததாம்.

காசியில் இறக்கிலும், சிதம்பரத்தைக் காணிலும் ஆரூரில் பிறக்கிலும், அருணையைச் சொல்லினும் முத்தியுண்டு. திருவொற்றியூரை நினைத்தன் மாத்திரத்தானே முத்தியுண்டாம்.

உலகெலாம் அழியினும் ஒற்றியூர் அழியாது. பிரம தீர்த்தத்தில் நீராடி, பொன், அன்னம், பசு, புத்தகம், கமண்டலம், யோகதண்டம், என்னு மிவைகளில் ஒன்றையேனும், சிறந்த சிவனடியார்க்கு அளிக்கில் மாபாதகங்களும் ஒழியும்.

மெய்மையே கூறுகின்றவன் இத்தீர்த்தத்தில் நீராடில் மூப்பு நீங்கி இளமையடைவன். இத்தீர்த்தம் கங்கை முதலான நதிகளையும் புநிதஞ்செய்வதாம். கிரகண காலத்திலும், அமாவாசையிலும், பருவத்திலும், மாதப்பிறப்பிலும், இதில் நீராடினவர் சீவன் முத்தராவர்.

வளர்பிறை அட்டமியிலும், மார்கழித் திருவாதிரையிலும், இதில் நீராடினோர் மிகப்புநிதராவர். மாசிமாத மகத்தில் நீராடி நீறுகண்டிகை பூண்டு நம்மை வணங்கினோர் இம்மையில் செல்வத்தையும் மறுமையில் முத்தியையும் அடைவர்.

இதில், ஞாயிற்றுக்கிழமை, காலையிலும், உச்சியிலும் அந்தணர் முதலானோர் நீராடலாம். திங்கட்கிழமை உதயத்தில் துறவிகளும், செவ்வாய்க்கிழமை மாதர்களும் நீராடலாம். புதன்கிழமை அமரர்கள் வந்து நீராடுவர்.

கன்னிகையானவள் வியாழக்கிழமை நீராடில் விரைவில் மணப்பள். தாலிகட்டியவள் வெள்ளிக்கிழமை நீராடில் நல்ல

திருவுண்டாகும். சனிக்கிழமையில் நீராடில் மக்கட்பேறுண்டு. கைம்பெண் நீராடில் துன்பம் நீங்கும். எழுகிழமைகளிலும் நீராடி எம்மை வழிபடில் வேண்டியவனைத்தையும் ஒருங்கே யடைவர்.

இத்தலத்தில், நித்திரை செய்தலே நிட்டையாம். பேசுதலே சிவபுராணம் படித்தலாம். திரிதலே வலம் வருதலாம் நினைத்தலே வேள்வி செய்தலாம். பசுதானஞ்செய்யில் பசுவின் ஒவ்வொரு மயிர்க்கும் ஒருகற்பகாலம் நம்முலகில் வாழ்வர்.

இறந்தவரின் எலும்பை குடத்தில் வைத்து வாய்மூடி இலக்குமி தீர்த்தத்திற்கு அருகில் புதைக்கில் முத்தியடைவர்.

இத்தலம் எமக்கு மிகப்பிரிய முடையது. இதில் ஒவ்வொரு அமாவாசையிலும் நந்திக்கு முன்னே நாம் நடனஞ் செய்வோம். இதைக்காணுதவர் புண்ணியவான்களாயினும் பாவிகளேயாவர். இதைக்கண்டார் பாவிகளெனினும் புண்ணியர்களே யாவர்.

உமைகேள்வி மான்மியம் முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

## வேதசுத்தி மான்மியம்.

வருணன் றரு மகவாகிய வரவான்மிக முனிவன்
திருநின் றருள் பலமா தலந் தெரிசித்தில ணெய்தி
மருவுந்திறன் மருந்திசனை மகிழ்வோடரிச் சித்தே
தருவம்மெனுப் பெருநித்தியத் துவமேநனி பெற்றுன்.

தத்துவஞானிகளான முனிவர்காள்! முன் ஒரு பதும ஊழியில், சலப்பிரளய முண்டாக, விஷ்ணு அதினடுவில் சிவ

யோகத் துயில்கொள்ள, அவரது உந்தியங்கமலத்தில் நான் முகன்றோன்றினன்.

அவனுடைய நான்கு முகங்களிலும் நான்குமறைகள் திகழ்ந்தன. இருதயத்தில் புராணங்களுண்டாகி விளங்கின. பிரமன் அவற்றைக்கண்டு களித்தனன். பரசிவன் பிரமனுக்கு உலகைப்படைக்கு மாற்றலை யளித்தனன்.

பிரமன், முதலில் தேவர்களையும் அசுரர்களையும் உண்டாக்கினன். இருதிறத்தார்க்கும் பெரும்போர் தோன்ற அதனுல் தேவர்கள் வேதமந்திரங்களையே படைகளாக்கி அசுரரைத் தோல்வியடையச் செய்தனர்.

அதைக்கண்ட அசுரர், வேதங்களைக் கவர்ந்துகொள்ள நினைத்து, மது, கைடவன் என்னுமிருவரையும் மாயையின் துணையால் வேதங்களை யெடுத்துக் கடலின் நடு சேற்றில் புதைக்கச் செய்து விட்டனர்.

தேவர்கள், வேதமொழிந்தமைபற்றி விதியினிடம் முறையிட்டனர். விதியும் தனது படைப்புத்தொழிலை யுணராது, மாயோன்பாற் சென்றனன், விஷ்ணு கருடன் மீதேறி அசுரர் முன் சென்று, பலநாள் போராற்றி வெல்ல முடியாமல் பரசிவனது யோக சத்தியை மனதில் நினைத்துப் பூசிக்க அச்சத்தி வெளிப்பட்டு அருள்செய்தமையால் அசுரரை மயங்க வைத்து சக்கரப்படையால் ஆக்கணங் கொன்றனர்.

அவர் உடனே பாதாளஞ் சென்று வேதநான்கையுந் தேடிக் காணுமல் கடற்கரையினின்று, மறைகளே! நீவிர் பரசிவனது அருமைவாக்குகளன்றோ, உங்களாலல்லவா, மூவரும் முத்தொழிலைக் கொண்டனம். மும்மூர்த்திகளான யாங்கள் உங்களுடைய ஆணையின்படி யன்றோ நடக்கின்றோம். உங்களுடைய முடியிலன்றோ, சிவப்பொருள் திகழ்கின்றது.

உங்களாலன்றோ. யாம் பரசிவனது மகிமையை இன்னதென் றுணர்ந்தோம், நீங்களின்றேல் யாம் என்செய்வோம்? தயை செய்து வாரிரோ, என்று வேண்ட, வேதமூர்த்திகள், மாயவ! எங்களை அசுரர் கடலுக்குட் புதைத்து விட்டனர், இங்கு வந்து எங்களைக் கொண்டு போவாயாக என்றன.

அதைக்கேட்ட விஷ்ணு மகா மீனாகிக் கடலுட்புகுந்து கலக்கி வேதங்களை வெளிக்கிளப்பி, திருவொற்றியூரில், படம் பக்கநாதரின் சந்நிதியில் வைத்துப்பணிய, படம்பக்க நாதர் தமது திருக்கடைக்கண் சாத்திப்புநிதஞ்செய்து, அன்ப! அடி யாருட் சிறந்தோய்! நீ மறைகளின் பொருட்டு நிறைந்த பிர யாசை எடுத்துக் கொண்டனை, நீ, இனி மனையாளோடு இனிது அரிதுயிலமருதி என்றருளினர்.

விஷ்ணு, எந்தையாகிய பரசிவ! என்னால் ஆவது இங்கு ஒன்றுமில்லை. உனது அடியவர்க்குள் யான் ஒரு தொண்டனாத லின் எல்லாம்வல்லேன். யான் தமது திருவடியில் ஒருகண்ணை யெடுத்துச் சாத்தியதாலும், தமக்கு இடபமாயிருத்தலானும், தமது வில்லுக்குப் பாணமானதாலும், தமது பரிக்கிரக சத்தி யாயிருத்தலானும் அனைவரும் மதிக்க வாழ்கின்றேனே யன்றி, எனக்கென ஒரு சுதந்திரம் சிறிதளவுமில்லை, என்று பலவாறு புகழ்ந்து விடைபெற்றுக் கொண்டு திருப்பாற்கடலை யடைந்து சிவயோக நித்திரையில் அமர்ந்தனர்.

வேதசுத்தி மான்மியம் முற்றிற்று.

---

உ
திருச்சிற்றம்பலம்.



# பாணினிமுனிவர்
# வடமொழி யிலக்கணஞ்செய்த மான்மியம்.

ஒற்றியிறை பிரமாவி னுரைகேட்டுப் பாணினியும்
முற்றுசிவ சூத்திரமாம் வியாகரண மூலமெனப்
பெற்றுபதி னன்கினையும் பெருகுமெட்டு வியல்வகுத்து
அற்றமிலா வியாகரண மாகவிரித் தனனம்மா.

சிவநாமப் பிரியர்களே ! பாணினி, என்னும் பண்டைக் காலத்திய முனிசிரேட்டர் ஒருவர், தாம் வேதங்களை முழுதும் இனிது உணரவேண்டு மென, பிரமனைநோக்கி நெடுநாள் தவஞ்செய்தனர். நான்முகன் அருள்கூர்ந்து வெளிப்பட்டு, அன்ப ! உனது தவத்திற்கு வியப்புற்றேம். ஆதலின், நீ விரும்பியவாறே கைகூடுதற்குரிய உபாயமொன்றைச் சொல்கின்றேம் கேட்பாயாக.

கல்விக்கிறைவர் கண்ணுதற்கடவுளாவர். அவரே வேதங்களையும் திருவாய்மலர்ந்தருளியவர். அவர் அன்போடு அருட்டிருமேனிகொண்டு எழுந்தருளி யிருக்கின்றது திருவொற்றியூராம். அத்தலத்தில் ஒருநாள் தவம் பண்ணில், ஏனைய தலங்களில் ஆயிரக்கணக்கான வருடங்கள் தவஞ்செய்ததனுலாய பலம் எளிதிற்கைகூடும். இதிற்சிறந்த சிவத்தலம் வேறெதுவுமில்லை. இத்தலத்திற்சென்று படம்பக்கநாதரைப் போற்றித் தவஞ்செய்வையேல், நினைத்தது கைகூடும் என்றனர்.

பாணினி முனிவர் அதைக்கேட்டுக் களிப்புற்றவராய் திருவொற்றியூரையணுகி அடிவைத்தவுடனே தலத்தை நன்கு பணிந்து, கைகளைத்தலையின்மேல் குவித்து உட்புகுந்து பிரம தீர்த்த நீராடி, நீறு கண்டிகை யணிந்து ஐந்தக்கரத்தைக் கூறிக்கொண்டே வலம் வந்து, ஆலயத்துட்புகுந்து, நந்தியம் பெருமான்பால் விடைபெற்று, விநாயகரையும் வெற்றி வேலவனையும் பணிந்து, படம்பக்கநாதர் சந்நிதியில் பன்முறை விழுந்து பணிந்து துதித்து, வடிவுடையம்மையைக் கண்டு வாழ்த்தி அன்றிரவு முழுதும் நிட்டையிலமர்ந்து பகல்களில் முன்போன்றே சிவனைப்பூசித்து வருகையில், தீண்டாத் திருமேனியராகிய படம்பக்கநாதர் சிவலிங்கத்திலிருந்து மெய்ப்போத வின்ப வடிவாய் அருட்டிருமேனி கொண்டு வெளிப்பட்டுப் பாணினி முனிவரை நோக்கி, " உத்தம! உனக்கு வேதப் பொருள்கள் உள்ளவாறு விளங்கும்படி அருள் செய்தோம் ". வேதமரபு வழாதபடி, வடமொழி இலக்கணத்திற்கு மூலகாரணமாகிய பதினன்கு வியாகரண சூத்திரங்களையும் உனக்கு அளித்தோம். இச்சிவ சூத்திரங்களைக்கொண்டு மிக விரிவாய் " வியாகரண நூல் செய்யக்கடவை " என்று அருள் செய்துவிட்டு மறைந்தருளினர்.

பாணினி முனிவர் அன்பின் வயத்தராய் ஆடிப்பாடி அழுது தெளிந்து சிவபெருமான் ஆணைப்பட்டி வியாகரண

நூலை எட்டத்தியாயங்களாக விரித்துச் செய்து மறைப் பொருளையுணர்ந்து இனிது வாழ்ந்தனர்.

பாணினி வடமொழி செய்த மான்மியம் முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.



## வான்மீகி முனிவர்
## நித்தியத்தன்மை பெற்ற மான்மியம்.

வருணன்றரு மகவாகிய வரவான்மிக முனிவன்
திருநின்றரு பலமாதலந் தெரிசித்திவ ணெய்தி
மருவுந்திறன் மருந்தீசனை மகிழ்வோடரிச் சித்தே
துருவம்மெனும் பெருநித்தியத் தவமேனி பெற்றான்.

நீறணிந்த நெறியுடைய முனிவர்காள்! சிவனடியையே சிந்திப்பவரும், உலகவாழ்வில் உவர்ப்புடையவரும், வேதாகம புராணங்களை யோதுகின்றவரும், சிவச்சின்னங்களை யணிகின்றவரும், பரசிவனையே பரிவினுடன் வழிபடுகின்றவருமாகிய

வான்மீக முனிவர், சிவத்தலங்களைத் தரிசிக்க விரும்பி, வட திசை சென்று கங்கைநீராடி, காசி விசுவநாதரைக் கண்டு பணிந்து, திரிவம், குச்சரம் முதலான தேசங்களிலுள்ள சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு, சீசைலம், திருக் காளத்தி, காஞ்சி, அருணை, திருக்கோவலூர், திருமுதுகுன் றம், திருமுட்டம், திருமயிலாடுதுறை, திருவழுவையூர், திரு வீழிமிழலை, திருவிடைமருதூர், திருவையாறு, திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி, இரத்தினகிரி, திருவாலவாய், திருநெல் வேலி, திருக்குற்றாலம், இராமேச்சுரம் முதலான தலங்களை யும் தரிசித்துக்கொண்டு, திருமறைக்காட்டை யடைந்து ஒரு குடிசைபோட்டுக்கொண்டு அங்குச் சிலநாள் தவமாற்றிக் கொண்டிருந்தனர்.

அங்கு, கீழ்கடற்கரையில் விஷ்ணு, அரக்கர்களை வென்று கொண்டு தனது கோதண்டத்தை, தனது முகவாய்க்கட்டை யில் ஊன்றிக்கொண்டு நிற்கும்போது, சில அரக்கர் செல்லுரு வெடுத்து வில்லின் நாணியை அறுத்துவிட, கோதண்டம் கிளம்பி விஷ்ணுவின் சிரசையறுத்து வெகு தூரத்திற் கொண்டுபோய்ப் போட்டு விட்டது. அதைக்கண்ட இலக் குமி, ஓடோடிப்போய்ப் பூசிக்க முன்போல் சிரசையளித்த திருவாரூர் முதலிய தலங்களையுங் கண்டு தரிசித்துக்கொண்டு,

நடராசர், ஆனந்தத்தால் நடிக்கும்போது விஷ்ணு, மத் தளங்கொட்டியது பிழை பட்டமையால் காலால் உதைக்க, அதனல் விஷ்ணு, நடராசர் குஞ்சித பாதத்தைத் தூக்கிக் கொண்டிருத்தலின், இன்னும் உதைப்பரோ, என்னும் பயத் தால் பயந்து படுத்துக்கொண்டிருக்கும் சிதம்பரம், முதலான தலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருவொற்றியூரையடைந்து தரிசனஞ் செய்தவுடன் அத்தலத்தைவிட்டு நீங்க மனமில்லாத வராய் அங்கேயே வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அப்போது ஒருநாள் முழுமுதற்கடவுள் அருளுருக் கொண்டு எழுந்தருளி, முனிவ! உனது தவத்திற்கு வியந்தனம், நினக்கு வேண்டிய தென்ன? என்று வினவியருளினர்.

அதற்கு வான்மீக முனிவர், எந்தாய்! நினது அருவுருவத்திருமேனியை எனது கைகளாற்றொட்டுப் பூசிக்கவேண்டுவதே எனது வேண்டுகோள் என்றனர்.

அதைக்கேட்டருளிய பரசிவனுர், அன்ப! அரிபிரமர் முதலானோரும் என்னைத்தொட்டுப் பூசிக்க வல்லராகார். நீ தொட்டுப் பூசித்தல் என்பது எவ்வாறு? அங்ஙனம் உனக்கு பேரன்பு இருக்குமேல், நமது அடியவர் ஒருவருக்கு, மாணிக்கத்தைக் கொடுக்கும்படி சென்று திருவிளையாடற்செய்த தலம் இத்தலத்திற்குத் தெற்கில் இருக்கின்றது. அத்தலத்திலும் நாமே அருட்டிருமேனி கொண்டு எழுந்தருளி யிருக்கின்றோம். தேவர்கள், அங்கு, திருப்பாடற்கடலிற் கடைந்த அமுதத்தை, ஒரு சிவலிங்கமாக்கிப் பூசித்துள்ளார். நீ, அங்குச்சென்று உன்மனவிருப்பின்படி வழிபடுவாயாக என்று அருளிச்செய்து மறைந்தனர்.

வான்மீக முனிவர், அவ்வாறே திருவொற்றியூரீசரின் ஆணைப்படியே திருவான்மியூர்சென்று பெருந்தவ மாற்றி வந்தனர்.

அக்கால் ஒருநாள், அங்குள்ள 'மருந்ீசர்' என்னும் எம்பெருமான் அருளுருக்கொண் டெழுந்து "அன்ப! உனது வழிபாட்டில் மிக மகிழ் வெய்தினம் நீ இத்தலத்திலேயே ஊழிகாலமிருந்து தவமாற்றி முடிவில் நமது திருவடியையடைந்துய்வை" இத்தலமும் உனது பெயரால் அதாவது 'திருவான்மியூர்' என்று வழங்கக்கடவது என்று அருளி மறைந்தனர்.

அது முதற்கொண்டு இதுகாறும், வான்மீகி முனிவர் திருவான்மியூரிலும், திருவொற்றியூரிலும் தரிசனஞ்செய்து கொண்டு நித்தியராய் இருக்கின்றனர்.

வான்மீகி முனிவர் நித்தியத்தன்மை பெற்ற மான்மியம் முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.



## வாசுகி முத்திப்பெற்ற மான்மியம்.

நாக மன்னனும் வாசுகி நவிபவ வேட்கை
தாக மென்னநற் றவமலி யுபமன்யு முனியின்
ஏக வின்னருள் பெற்றுவித் தலமதை யிறைஞ்சி
பாக மங்கைகொள் படம்பக்கர் தாடலைப் படிந்தான்.

சிவபத்தர்காள்! பாதாளவுலகிலுள்ள எண்வகை நாக மன்னர்களுட்சிறந்த வாசுகி என்னும் சர்ப்பராசன், அற நீதிப் படி, ஆணை செலுத்திக்கொண்டு, பல்லாயிரம் சர்ப்பங்கள் தன்னைச்சூழ வாழ்ந்து சிவபத்தருட் சிறந்தவனாயிருந்து வந்தனன். இவன் பரசிவனை வழிபடுவதிலேயே தனது முக்கர

ணங்களையும் செலுத்துவதேயன்றி பிறவற்றிற் செலுத்தாதவனுவன்.

இவ்வணமிருக்கு நாள் ஒருபோது தனக்குத்தானே எண்ணுவானுயினன், சிவனை நினைக்கில் திரைமூடுகின்றது, உலகை எண்ண வுவப்பெழுகின்றது, பொய் மெய்யாகின்றது, மெய் பொய்யாகின்றது, நாடோறும் இறப்பதைக் கண்டும் யாம் எக்காலும் வாழல் வேண்டுமென்று விரும்புகின்றது, மற்றும், நலம் தீதாகவும், தீது நலமாகவும் தோன்றுகின்றது, இஃதென்ன வியப்பு ? இம்மாயை எவரால் வெல்லற்பாலது ? அம்மம்ம ! எவராலும் வெல்லப்படாதது. அரிபிரமர் முதலானோர் இவ்வலையிற்சிக்கி உழல்பவரொனின், யான் எத்துணையன் ? எனது தாய் தந்தையர் எங்கே ? மண்ணுடாண்ட மன்னர்கள் எங்கே ? விண்ணுடாண்ட வேந்தர்கள் எங்கே ? ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆண்ட அசுரன் எங்கே? நிலையாமையையே மேற்கொண்ட உடல், தனம், மனை முதலானவற்றில் பற்றுவைத்தல் பித்தரின் செய்கையன்றே, இஃதென்ன மயக்கம் ? ஆராயில், பசிக்கில் உண்பதும், மயக்கில் உறங்குவது மன்னியில் வேறென்னை ? ஆதலின்,

உள்ள வெளியில் நள்ளும் பகலும் நடனமிடும் சிவனைத் தியானித்து அதனலடையப்படும் சிவானந்த வாழ்வன்றே, என்றும் நிலையானது. ஆதலின் இனி யாம் ஞான அரசாட்சியை யடைய வேண்டுமென்று மனத்துட்கொண்டு இருவினையொப்பும் மலபரி பாகமுமுடைய அதிகாரியாய், மேல் யாம் செய்யற்பாலது முத்தித்தலமாகிய திருவொற்றியூரையே யடையவேண்டுமெனத் துணிந்து, தனது இராச்சியத்தை புத்திரன்பால் ஒப்புவித்து, சுற்றத்தார்க்கும் வேண்டிய இதங்கூறிவிட்டு, பூவுலகத்திற்கு வருங்கால், இடையில் ஒருவனத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த உபமன்யு முனிவரைக் கண்டனன்.

கண்டு பணிந்து, தன்கருத்தை உபமன்யு முனிவருக்குக் கூற, அதைக்கேட்ட முனிவர், சர்ப்பராஜ! நினது பக்குவத் தன்மை வியக்கற்பாலதேயாம்.

அங்ஙனமாயினும் ஞானத்திற்கும் ஒரு படிவேண்டு மல்லவா? கருவியின்றி யாதும் கைகூடாதன்றோ? ஆதலின், நீ, சிவதீட்சை பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்றருளினர்.

அதைக்கேட்ட வாசுகி, இதுவே முறையெனக்கொண்டு, தீட்சை செய்து வைக்குமாறு உபமன்யு முனிவரை வேண்டி, தீட்சை செய்து கொண்டு, அம்முனிவருக்கு நெடுங்காலம் தொண்டு செய்திருந்து அவரைவிட்டு நீங்கித் திருவொற்றியூருக்குச் சென்றனன்.

சென்று, நாடோறும் பிரமதீர்த்தமாடி, படம்பக்க நாதரைப்பணிந்து, வடிவாம்பிகையை வழுத்தி போற்றிக்கொண்டு வரும் நாளில், இவருடைய பத்தி மேலீட்டால் சிவபெருமான் அருட்டிருமேனி கொண்டு எழுந்தருளி, அன்ப! இத்தலத்திற்கு வடதிசையில், வானவர்கள் வண்டுகளாய் வந்து தேனையுண்டு தியக்கும் ஒரு பாலை மரத்தடியில் எழுந்தருளியிருக்கும் எம்மை, நாடோறு வழிபட்டுக் கொண்டிருப்பாயாக என்றருள் செய்தனர்.

அவ்வருளைப் பெற்று, வாசுகி, பாலைவனமடைந்து அங்கெழுந்தருளியுள்ள ஆதிபுரியீசரை நாடோறும், அன்போடு வழிபட்டு வருகையில், பலகை வடிவாகிய சிவலிங்கத்தினின்றும் எம்பெருமான் வெளிப்பட்டு வாசுகியாகிய பாம்பினை எடுத்துத் தனது திருவடியில் வைத்துக்கொண்டு மறைந்தருளினர்; வாசுகியும் சிவலிங்கத்தில் இரண்டறக் கலந்தது.

அது பற்றியே இதுபோதும் திருவொற்றியூர் படம்பக்க நாதர் என்னும் மூல இலிங்கத்தில் சர்ப்பம் ஒன்று தோன்றிக் கொண்டிருக்கின்றது.

வாசுகி முத்திபெற்ற மான்மியம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஆதிசேடனும் சந்திரனும் அருச்சித்த மான்மியம்.

பத்தி மிக்கெழ பாதலத்துறு பணிகள் போற்றிடு சேடனும்
நித்த மங்குள பூவிவண்கொடு நெருங்கி யொற்றியூ ரீசனை
முத்தி தந்தருள் பூசனைசெய முந்திநீண்மதி யாற்றிடு
நத்த ருச்சனை யாலமரெழ நம்பன்சோதிய தாகினனரோ.

மாதவர்காள்! திருவொற்றியூரில் வாசுகி முத்தியடைந்ததைக் கேள்வியுற்ற ஆதிசேடன், களிப்புற்று, பாதாள வுலகத்தில் தனது நந்தவனத்திலுள்ள அரியபூக்களை யெடுத்துக் கொண்டுவந்து திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் படம் பக்கநாதரையும், வடிவாம்பிகையையும், அருச்சித்துப்போற்றி அடிபணிந்து ஆடிப்பாடிக் களிப்புற்று மீண்டும் பாதாள லோகத்திற்கே போய்க் கொண்டிருந்தனன்.

இதைக் கேள்வியுற்று வானிலுள்ள சந்திரனும், அங்ஙனமே, தானும் திருவொற்றி யூரையடைந்து அருச்சிக்க விரும்பினவனாய், இரவில், மணமிகுந்த பூக்களைக்கொண்டு வந்து, ஆதிசேடன் அருச்சித்துள்ள பூக்களைக் களைந்துவிட்டு தனது பூக்களால் அருச்சித்து போற்றிக்கொண்டு வந்தனன்.

ஆதிசேடன், நாடோறும் தான் அருச்சித்த பூக்கள் சிவன் திருமேனியிற் காணாமையின் மிக மனம் வருந்தி, இரவில் பழம்பூக்களைக்கொண்டு அருச்சனை செய்துவிட்டு எனது பூக்களைக் களைந்தெறியும் கள்வன் இன்னனெனத் தெரிந்திலே

அப்பாவியைக் கண்டுபிடிக்க வேண்டுமெனின் பாதாளலோகஞ் செல்லாமல் இங்கு இருத்தல் வேண்டும். இருக்கிலோ எனது குடிகள் வருந்தும், அங்ஙனமாயினும், எவ்வாற்றானும் இக் கொடியவனைப் பிடித்துத் தண்டித்தலே நலம் என்று துணிந்து, ஒருநாள் பாதாளலோகம் போகாமல் இங்கேயே தங்கி ஆலயத்தின் ஒரு பக்கத்தில் தெரியாமல் மறைந்து கொண்டிருந்தனன்.

வழக்கம்போல் அருச்சிக்கின்ற சந்திரன் அருச்சிக்கத் தொடங்கினன். அதைக்கண்ட ஆதிசேடன் இவனே திருடன் என்று, அடா! கள்வ! இவ்வாறு தீச்செயல் செய்யலாமா? யான் அருச்சித்த பூவைக் களைவதற்கு நீயார்? யான் அருச்சித்து வருங்கால் நீ எவ்வாறு அருச்சிப்பை? நீ களங்கமுடைய கயவன், குருமனையைப் புணர்ந்த கொடியன், புத்தியற்றோய்! உனக்கு மதி சிறிதுமில்லை என்று கடிந்தனன்.

சந்திரன், அதைக்கேட்டு, ஆதிசேட! நீ சிறிதும், ஆராயாது கூவுகின்றனை; சிவனை யருச்சித்தற்கு அன்புதான் முக்கிய காரணமேயன்றி பிறிதில்லை. கருணையே யுருவாகிய கடவுள் நிறைந்து நின்றருள்பவர். எல்லாவுயிர்கட்கும் இரக்கங் கொண்டருளும் இறைவர். அத்தகைய பரசிவன் உனக்கு மாத்திரம் சொந்தமாவரா? எல்லாருக்கும் அவர் இறைவரலரோ? பொல்லார்க்கும் அருளும்பூரண நோக்குடையரலரோ? நாம் அவர்க்குச் செயற்பலது என்னை? எல்லாம் அவருடையதன்றோ? மற்று, யாம் அன்பொன்று மாத்திரமே அவருக்குச் செயற்பாலதும் அரிதுமாம். ஆகையால் யான் அன்பு மேலீட்டால் அருச்சித்து வருகிறேன் நீ என் வீணாய்ப் பிதற்றுகின்றனை? நினது வன்மையும் எனக்குத் தெரியும் என்றனன்.

அதைக்கேட்ட ஆதிசேடன் மிக வெகுண்டு, சந்திர! நீ, கற்ற வித்தையை என்பால் காட்டுகின்றனையோ? வாயை மூடிக்கொள்ளுதி. உன்னை இப்போதே எனது விஷச்சுவாலையால் எரித்து விடுகின்றேன் என்று எழுந்தனன்.

சந்திரன், கயவனுக்கு இதஞ்சொல்லில் அகிதமாகும், இவனை யடக்குதலே தகுதி என்று கோபமீக் கொண்டெழ, ஒருவருக் கொருவர் பெரும்போர் விளைந்தது.

கருணைக்கடலாகிய திருவொற்றியூர்ச்சிவபெருமான் இருவரையும், ஆட்கொள்ளத் திருவுளங்கொண்டு, அரிபிரமர்கட்கிடையில் அக்கினி மலையாய் எழுந்தருளியது போன்று, ஆதிசேடன், சந்திரன், என்னும் இருவருக்கு மிடையில் தீப்பிழம்பாய்த் திருமேனி கொண்டெழுந்தருளினர்.

அதைக்கண்டு இருவரும் பயமடைந்தவராய் போராடுவதை யொழித்து, கண்ணீர் சொரிய, மண்ணிற் கூத்தாடி, ஆடிப் போற்றிப்பரவி நின்றூர்கள். கருணையங்கடலாகிய திருவொற்றியூரீசர் இவ்விருவரின் மனவுறுதிக்கு வியப்புற்றவராய் அன்பர்காள்! உமது அன்பின் உறுதிப்பாட்டை யுணர்ந்தனம் ஆதலின் நீவிர் எண்ணியபடியே உங்களுக்கு நித்தியத்தன்மையை யளித்தோம் என்றருளிவிட்டு மறைந்தனர்.

பின்னர், இருவரும் மனக்களிப்புற்று பிணக்கதை விட்டு கட்டியணைத்து முத்த மிட்டுக்கொண்டு தம்முள் அளவளாவித் தத்தமது வுலகங்களை யடைந்தனர்.

சேடனும் மதியும், அருச்சித்த மான்மியம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.



## கற்பக விருக்ஷங்கள் மகிழமரமான மான்மியம்.

விண்ணுறை யைவகை வியன்ற ருக்களும்
அண்ணியிவ் வொற்றியி லமலனை யிறைஞ்சிட
பண்ணிய தவப்பயப் பரமனு மருட
மண்ணதில் மகிழநன் மரமென மலிந்ததால்.

சிவானந்தச் செல்வர்கள்! ஒருகாலத்தில் சுவர்க்கத்தி லுள்ள ஐவகைத் தருக்களும், இப்பொன்னுலகத்து, நமக் கிறைவனாகிய இந்திரனுடைய செல்வத்தைக் கண்டு பொறாமையால் அடிக்கடி அசுரர்கள்வந்து போராடுகின்றனர். போராடி நம்மையும் துன்புறுத்துகின்றனர். முனிவர்களும் சாப மிடுகின்றனர். இவ்வாறு அல்லற்படுவதைப் பார்க்கிலும் இவ்வுலகை விட்டொழித்து வேறு யாண்டேனுஞ் சென்று உய்வதே நலம் என்று தம்முள் உசாவித் தீர்மானித்துக்கொண் டிருக்குங்கால், அங்குவந்த சில அடியவர் வாயிலாகத் திருவொற்றியூர் மகிமையைக் கேள்வியுற்று, திருவொற்றியூருக்கு

வந்து, படம்பக்கர் சந்நிதியில் நெடுநாள் கடுந்தவஞ் செய்து கொண்டிருந்தன.

ஒருநாள், பச்சிளங்கிள்ளையாகிய பார்வதி தேவியாரென்னும் வடிவாம்பிகையோடு, மான், மழு, நாற்கரம், காளகண்ட முக்கண்களுடன் படம்பக்கநாதர் அருட்டிருமேனி கொண்டு எழுந்தருளி அவ்விருட்சங்கட்கு அருகில் வந்து, தருக்களே! நீவிர் எதைக்குறித்துத் தவஞ்செய்கின்றீர்கள்? என்று வினவியருள, உடனே தருக்கள் அன்போடு பணிந்து, ஆட்கொள்ளவந்த அண்ணலே! எங்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றி யருளல் வேண்டும் என்றிரந்தன. அவ்வேண்டுகோள் யாதென்று? இறைவன் வினவ, தருக்கள், எந்தாய்! 'யாம் உமது திருமேனியைத் தொட்டுப் பூசித்துக்கொண்டேயிருத்தல் வேண்டும்' என்பதே யாம் என்றன.

அதைக்கேட்ட பரசிவனார் புன்னகை கொண்டு, தருக்காள்! நீங்கள் கொண்ட எண்ணம் மிகச் சிறந்ததாம். ஆயினும், நாம் இத்தலத்தில் தீண்டாத் திருமேனியாய் எழுந்தருளியிருக்கின்றோமாதலின் அது பொருந்தாது.

ஆதலின், எம்மைத் தொட்டுப் பூசிக்கவந்த, இளையபெருமானாகிய முருகனும், உருத்திர கணங்களும், எழுமாதர்களும், பன்னிரு இரவிகளும், ஆதிசண்டர், கபாலமுனிவர், வாலி, சந்திரன், வேதம் விஷ்ணு முதலானோர்களும், திருமயிலையை அடைந்து எம்மைப் பூசிக்குமாறு செய்து அருள்செய்துள்ளோம். ஆதலின் தருக்களே! உங்களுடைய கருத்து நிறைவேறாது. ஆனால் தவம் வீணாகாவாறு நீங்கள் இத்தலத்தில் ஒரு மகிழமரமாய் இருப்பீர்களாக. இருக்கில் அந்நிழலில் நாம் தங்குவோம்" என்றருளினர்.

அதைக்கேட்ட தருக்கள், எம்பெருமானே! இக்கோல மாகவே, வருடந்தோறும் எங்கட்குக் காட்சியளித் தருளல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டன.

அவ்வாறு தென்றற்காற்றோடு தேவரீர் எழுந்தருளும் போது தரிசித்தவர்கள் அனைவருக்கும் முத்தியை யளித்தரு ளல் வேண்டும் என்றும் இரந்தன.

சிவபெருமானர், அதைக்கேட்டு "அங்ஙனமே யாகக்கடவ தென்று" வரமளித்துவிட்டு மறைந்தருளினர். உடனே, ஐந்து தருக்களும் ஒரு மகிழமரமாகி திருவொற்றியூர்த் தலத்தில் இன்றும் இருக்கின்றன. இம்மரத்தைப் பரசிவமாகக் கண்டு பணிபவர் தேவரேயாவர். இம்மரத்தின்மீது ஏறுபவர் நரகரே யாவர். இதன் இலையையும் பூவையும் கண்ணில் ஒத்திக்கொண் டவரும், பாவம் நீங்கி, புண்ணியம் வளர்ந்து வறுமை யொழிந்து செல்வந்தழைத்து முடிவில் சிவபத மடைவர்.

கற்பகத்தருக்கள் மகிழமரமான மான்மியம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.



# அகத்திய முனிவருக்கு மணக்கோலங் காட்டிய மான்மியம்.

மலைமகளை மணக்கவரன் மண்ணாடும்
விண்ணாடும் வந்துகூடித்
தலையழியத் தரையதுவுந் தன்பேர்ந்து
தலையருளாற் சிரசிற்றாய
கலைமதியன் குடமுனியைப் பொதிகையின்பாற்
கடவியதாற் கைலைவாழ
நிலையுதவு மகத்தியற்கு மணக்கோலம்
நிகழ்த்திடுமா தலநேருண்டோ.

சிவ யோகிகளே! முன்னர் இமயமலையின் புத்திரியாகிய பார்வதி தேவியாரை மணஞ்செய்து கொள்ளுதற் பொருட்டு, பரசிவன், கைலையங்கிரியை நீங்கி இமயமலையை யடையுங்கால், உலகங்கட்கு, அன்னையும் பிதாவுமான அவ்விருவருடைய மணக்கோலத்தைக் காணுதற்கு, மூவுலகத்தவர்களும்

ஒருங்கே திரண்டு இமயமலையை யடைந்த மாத்திரத்தில் பெருஞ்சுமை தாங்கமுடியாமல் பூமியின் வடதிசை தாழ்ந்தும், தென்றிசை உயர்ந்தும் நிலைதடுமாறுவதைக் கண்ட தேவர்கள், பரசிவன் சந்நிதியிற் பணிந்து, இதைத் தெரிவித்தனர், எம் பெருமான் அதைக்கேட்டுக் கருணைகூர்ந்து, கும்பமுனிவரை நோக்கி, முனிவர! நீர், தென்றிசைசென்று பொதியமா மலையின்மீது அமரல் வேண்டும் என்று பணித்தருளினர். அதைக்கேட்ட அகத்திய முனிவர், இறைவ! தேவரீரது திருவாக்கைச் சென்னிமேற்றாங்கிச் செல்கின்றேன் ; ஆனால், எந்தாய்! ஒரு விண்ணப்பம், அதாவது பல் கோடி ஆன்மாக்கள் உமது மணக்கோலத்தைத் தரிசிக்க, பாவியாகிய யான் மாத்திரம் தரிசியாது செல்லல் பாவத்திற்பாவமன்றோ, எவ்வாறு தமது மணக்கோலத்தைக் கண்டு களிப்பேன் என்று, மனங்கரைந்து வேண்டிக்கொள்ள, அதைக்கேட்ட கருணைக்கடலாகிய மலைமகட் கிறைவன், முனிவ! உலக நலத்தின் பொருட்டு நீ இக்காரியத்தை நிறைவேற்றுவாயாகில் பின்னர், யாம் ஒரு புண்ணிய தலத்தில் நினக்கு மணக்கோலத்தைக் காட்டுவோம் என்றருளினர். அதன் பின்னர், அகத்தியர் அவ்வாறே தென்றிசை சென்று பொதியமலையின்மீ தமர்ந்த மாத்திரத்திலேயே பூமிப்பரப்புச் சமமாகி விட்டது. கைலையில் எம்பெருமானுக்கு விவாகமும் முடிந்தது.

இவ்வாறு அகத்தியர் பொதியமலையிலிருக்குங்கால், ஒரு நாள், பரசிவன் மணத்தை முடித்துக்கொண்டு கைலையை யடைந்திருப்பர். அடியேற்குந் திருவாய் மலர்ந்தருளிய மணக்கோலக்காட்சி, எப்போது? எங்கேகாட்டுவரோ? அறிகிலேன் என்று மனங்கசிந்து சிந்தித்துக் கொண்டிருக்கையில், "அகத்திய முனிவ! அஞ்சற்க, யாம் மிகப்பிரியத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் திருவொற்றியூருக்கு வரக்கடவாய்,

அங்கு உனது மனக்குறையை நிறையச் செய்கின்றோம்" என்று ஒரு அசரீரி வாக்கெழுந்தது.

அகத்தியர் அதைக்கேட்டெழுந்து ஆடிப்பாடி ஆனந்தங் கொண்டாடி, தேவரீர் அடியேன் பால் வைத்திருந்த திருவருடிறம் என்னே! என்னே! என்று எண்ணியெண்ணி, திருவருளைப் பன்னிப்பன்னி உடனே பிரயாணப்பட்டு திருவொற்றியூரை யடைந்து பிரமதீர்த்தத்தில் நீராடி அநுட்டானஞ் செய்து கொண்டு சிவபூசை முதலியவற்றையும் முடித்துக் கொண்டு, படம்பக்க நாதரையும் வடிவாம்பிகையையும் வணங்கிப் பலவாறுகப்போற்றி, நாடோறும் திருவொற்றியூர் மாடவீதியை வலம்வந்து எப்போது எம்பெருமானுடைய திருக்கடைக் கண்ணேக்கெழுமோ? என்று சிவ சிந்தனையுடனிருந்தனர்.

ஒருநாள், அவ்வாலயத்தில், பலவகை வாத்தியங்கள் முழங்க, கற்பகப்பூமாரி பொற்புடன் பொழிய, மறைகள் ஒலிக்க, தேவமாதர் ஆட, கந்தருவர் பாட, மலைமகளுடன் மணியாசனத்தி லமர்ந்திருக்க, பிரமன் மணச்சடங்கு செய்யவும், மலையரையன் நீர் வார்த்துக் கொடுக்கவும், மற்றும், பலவகை வியப்புடன் அத் திருமணக்கோலத்தைக் காட்டியருளினர்.

அகத்தியனுர், அதைக்கண்டு களித்து, கண்களில் ஆனந்த பாஷ்பஞ் சொரிய, மனங்கசிந்து கசிந்து கரைய மயிர்க்குச் செறிய, விம்மிதமுடையராய்ப் போற்றி வலம்வந்து பணிந்து, ஆடிப்பாடி, எந்தாய்! வணக்கம் வணக்கம், அடியேனை யாட் கொண்ட அரசே! வணக்கம். பிறவி யொழித்த பெம்மானே! வணக்கம், முத்தியளித் தமுதல்வா! வணக்கம், என்று போற்றி, இறைவ! இத்தலத்தில் எப்போதும், இத்தகைய கோலத்

துடனே கல்யாண சுந்தரர் என்னுந் திருநாமம்பூண்டு எழுந்தருளல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

மற்றும், தம்மைத் தரிசிக்கின்றவர்கட்கு மணம் விரைவில் முடிதலும் வேண்டும். என்பது முதலான பலவரங்களையுங் கேட்க, அவ்வாறே கிருபைபாலித்து விட்டு ஆதிபுரீசர் மறைந்தருளினர்.

அகத்தியர்க்கு மணக்காட்சியளித்த மான்மியம் முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

## தொண்டைமான் திருப்பணி மான்மியம்.

---

பன்னருங் காஞ்சியாளும் பழுதிலாத் தொண்டைமான்பல்
ஒன்னலர்க் காயமாய னுதவிடு கிரி பாற
நன்னக ரொற்றியீசர் நயந்தபுல் மழுவாற்றீயர்
இன்னலை மாற்றியீண்டு யிழைத்திடு பணிகளாமால்.

அருளிற்சிறந்த முனிவர்காள் ? காஞ்சிபுரியில் அரசாட்சி செய்து கொண்டிருந்த தொண்டைமான், தனது நாட்டிலுள்ள குறும்பர்களை யழித்துக்கொண்டு வருகையில் வடகீழ்த் திசையிலிருந்த, வாணன், ஓணன் என்னும் இரண்டு குறுநில மன்னர்கள் இவனுடன் எதிர்த்துப்போராட, தொண்டைமானுடைய சேனைகள் அவர்களுடைய சேனைகளைச் சின்ன பின்னப் படுத்த அவர்கள் தோல்வியுற்று ஓடிப்போய் தமது கோட்டைக்குள்ளிருந்த பைரவமூர்த்தியைத் தியானித்து, ஒரு பூதத்தையுண்டாக்கிக்கொண்டு மீண்டும்போர் செய்யவந்தனர்.

வந்து, போராடுங்கால் அப்பூதம் தொண்டைமானுடைய சைன்யங்களை வாரி வாரியுண்டது; அதனால் தொண்டைமானுடைய சேனைகள் இருந்தவிடந் தெரியாமல் ஓடி மறைந்தன.

அதைக்கண்ட தொண்டைமான், நடுக்குற்று இனிச் செய்வதென்னை? என்று ஆராய்ந்து, திருவேங்கட மலையையடைந்து விஷ்ணுமூர்த்தியை நோக்கி, எட்டக்கரத்தைக்கூறி ஐம்புலனையடக்கி மோன முற்றுத் தவமாற்றினன்.

அதைக்கண்ட விஷ்ணு, கிருபைகூர்ந்து கருடன்மீதேறி விரைவோடுவந்து தொண்டைமானை நோக்கி, மன்ன! நினக்கு வேண்டியவரம் யாது? என்று வினவியருள, தொண்டைமான் பணிந்தெழுந்து கரங்கள்கூப்பி, இறைவ! வாணன் ஓணன் என்னும் இரண்டு குறுநில மன்னர்களான எனது பகைவர்கள் ஒரு பூதத்தைக்கொண்டு என்னோடெதிர்த்துப் போராடி எனது சைன்யத்தை அப்பூதத்திற்கு இரையாக்கி என்னையுந் தன்னந்தனியனாக்கி விட்டார்கள்; ஆதலின் அவர்களைவெல்ல, தேவரீர் தமது சக்கரப்படையைத் தந்தருளவேண்டும் என்று இரந்தனன். அவ்வாறே தொண்டைமானுக்கு விஷ்ணு சக்கரப்படையை யளித்து மறைந்தருளினர்.

அதைப்பெற்றுக் கொண்டு தொண்டைமான் மீண்டும் போர் தொடங்கவும், அப்பூதம் தனது தண்டாயுதத்தால் அடித்து அச்சக்கரத்தையும் ஒடித்து விட்டது.

அதைக்கண்ட தொண்டைமான் திடுக்கிட்டு இனிச்செய்வதென்னை? என்று விசாரமுற்று, திருவொற்றியூரையடைந்து, அங்கு பெருந்தவ மாற்றிக் கொண்டிருக்கிற உரோம முனிவர் திருவடியிற்பணிந்து தனது குறையை அவரிடம் கூறினன். அதைக்கேட்ட உரோமரிஷி மனங்கசிந்து படம்பக்க நாதரைப் பணிந்து சிறிது போது அவரை மனத்தில் உன்னி அவரு

டைய திருவருளைத் தாங்கி, அச்சந்நிதானத்திலிருந்த ஒரு தருப்பைப் புல்லையெடுத்து மழுவாயுதமாகப் பாவித்துத் தொண்டை மானிடங் கொடுத்தருளி, ஐய! இதைக்கொண்டு உனது பகைவரை வெல்லுவாயாக, என்று அருள் செய்தனர்.

தொண்டைமான் பணிந்து இருகைகளாலும் அதை ஏற்று ஆசிர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு போகுங்கால், விஷ்ணுவின் படையே அப்பூதத்தை வெல்லமுடியாத விடத்து, இத்தருப்பைப்புல் யாது செய்யும்? ஆனால் பெரியா ருடைய அருளிருக்கில் எதுதான் முடியாது? என்று உன்னி, மற்றும், இதையும் பார்க்கலாமென மனத்துட் கொண்டு அத னுடன் போய், வாணனையும், ஓணனையும் முன்போல் எதிர்த் தனன்.

முன்போல் அப்பூதம் வந்து அட்டகாசஞ் செய்யவும், அரசன், தருப்பையை அதன்மீது ஏவினன்; அது மழுவாகச் சென்றபோது பூதம் அதைக்கண்டு பயந்து ஓ! ஓ! இது நமது சிவபெருமானரது ஆயுதம், இதை நாம் வெல்லமுடியாது, இங்குச் சிறிதுநேரம் இருப்போமாகில் நம்மைக் கொன்று விடுமென்று ஓடுங்கால், அதை, தருப்பையாகிய மழுவாயுத மானது கொன்று விட்டது.

உடனே தொண்டைமான் வெற்றி முரசறைந்து அவர்க ளுடைய கோட்டைகளைத் தன் வசமாக்கிக் கொண்டனன்.

அதன் பின், தொண்டைமான், மீண்டும் திருவொற்றி யூரையடைந்து உரோமமுனிவரைத் தரிசித்துப் பணிந்து ஐய! இனி யான் செயற்பாலதாகிய தொண்டு யாது? என்று வினவினன். அதற்கு உரோமமுனிவர், அன்ப! இவ்வாலயத் திற்கு, திருமதில், மண்டபம், கோபுரம், முதலானவற்றைக் கட்டுவித்துத் திருவிழாவும் செய்வாயாக, என்று கட்டளை யிட்டனர்.

பின்னர் தொண்டைமான் உரோமரிஷியின் ஆணையைச் சிரமேற்றாங்கி, காசிமாநகரை யடைந்து, ஐநூறு சிவலிங்கங்களையுங் கொண்டுவந்து திருவொற்றியூரிற் குடியேற்றி, ஆலயத் திருப்பணியையும் செய்து முடித்து, அவ்வாலயத்திற்குக் காவலாக, வீரமாகாளியையும், அவளுடைய மந்திர சக்கரத்தின் தாபிதமாகிய ஒருவட்டப் பாறையையும் ஏற்படுத்தி, மாவிரதப் பிராமணர்களுக்கு பொருளனைத்தும் விளங்குமாறு உபதேசித்தருளும் மூர்த்தியாகிய பரசிவத்தையும், தியாகராஜருடைய திருக்கோவிலுக்கு மேற்குப்புறத்தில், தாபித்து, ஏழுகாளிகட்கும் வைரவர்கட்கும், மற்றையயோர்கட்கும் வரிசையாய் ஆலயங்களையமைத்து, ஊர்களையும், அங்குவேண்டிய வளப்பங்களையும் வகுத்து, பல தீர்த்தங்களையும் புதுப்பித்து, மாசிமாத, மகநட்சத்திரத்தில், சமுத்திர தீர்த்த முதலான மகோற்சவங்களையும் வகுத்து, அவ்வாறே சிவாசாரியரைக் கொண்டு நடத்தி, உரோமரிஷியைப் பூசித்து, பலநாள் அவருக்குத் தொண்டுபுரிந்து, அவருடைய அநுஞ்ஞையால், காஞ்சியையடைந்து இனிது அரசாட்சிசெய்து கொண்டிருந்தனன்.

தொண்டைமான் திருப்பணி மான்மியம் முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்

## இலவன் வேள்வி மான்மியம்.

எண்ணில்சீ ரிலவனு ரித்தலத்தின்
மகிமைகளை யினிதினோர்ந்து
மண்ணில்மா தலமாகு மிவண்மருவி
மறுவில்பிர தோஷந் தன்னிற்
பண்ணிரா சயசூயம் பயனடைந்து
படம்பக்கர்ப் பாதம்போற்றி
நண்ணியே யரசாட்சி நலந்துய்த்து
நற்பெயரும் நாட்டினனால்.

சிவஞானச் செல்வர்களான முனிவர்காள்! பிரமனிடத்தில் திருவொற்றியூர் மகிமைகளைக் கேட்டு இனிதுணர்ந்திருந்த நாரதர், ஒருநாள், அயோத்தியையடைந்து இராமபிரானின் புதல்வனாகிய இலவனைக்கண்டனர்.

உடனே இலவன், நாரதரின் திருவடியில் நன்குபணிந்து, தனது சிம்மாதனத்தமர்த்தி, முனிவர! யான் பிரமபதவியையடைய விருப்புற்றேன், அதன் பொருட்டுச் செயற்பாலது யாது? அதை எனக்கருள்வீராக, என்று வேண்டிக்கொண்டனன்.

அதைக்கேட்ட நாரதமுனிவர் அருள்கூர்ந்து, அன்ப! இது நிறைவேறுவதற்கு, அனைத்தினுஞ் சிறந்த இராசசூயயாகமே செய்யற்பாலதாம். அது திருவொற்றியூரென்னும் திவ்யத்தலத்திற் செய்வையேல் இனிது நிறைவேறும், என்றருளி விட்டு மறைந்தனர்.

பின்னர், இலவன் அவ்வாறே செய்யக்கருதி, அயோத்தியை விட்டுப்புறப்பட்டு, பலதேசத்து அரசர்களை வென்று

கொண்டு காஞ்சிபுரியையடைந்து, கம்பாநதியில் தீர்த்த மாடி, மாமரத்தடியி லெழுந்தருளியுள்ள, காமாட்சியோடு கூடிய ஏகாம்பரநாதரைப்பணிந்து போற்றிக்கொண்டு திருவொற்றியூரையடைந்து இராசசூய யாகஞ்செய்தற்குரிய நல்ல நாளை எதிர்பார்த்துக்கொண்டு அங்குச்சிலநாள் வசித்தனன்.

திருவொற்றியூரான் திருவருளால் ஒருசிவனடியார் அவனிடம் வந்தனர். அவர், சுக்கிலபக்ஷம் திரயோதசி, அல்லது, கிருஷ்ணபக்ஷத் திரயோதசி, உதயாதி, உதயாந்தம் அறுபது நாழிகைகளிலும் இருப்பது உத்தமமாகிய பிரதோஷகாலம், முப்பதுநாழிகைவரை யிருப்பது மத்திமம். இருபத்தாறேகால் நாழிகைக்குமேல் ஒருவிநாடியாவது இருப்பது அதமம். துவாதசியுடன் கலந்து வருவது அதமாதமம்.

ஒருநாளுக்கு முகூர்த்தம் பதினாறு, அவற்றுள் மத்தியிலுள்ள முகூர்த்தங்கள் எட்டு. அவற்றுள், உதயாதிமுதல் ஏழுமுகூர்த்தங்களைக்கழித்து, எட்டாவது முகூர்த்தமே பிரதோஷகாலமாம். ஒருமுகூர்த்தமென்பது மூன்றே முக்கால் நாழிகை கொண்டது. அதை மூன்றுப்பகுத்து முதற்பகுதியில் பிரதோஷத்தைக் கொண்டாடுவது உத்தமம், இரண்டாம்பிரிற்கொண்டாடல் மத்தியமம். மூன்றும் பகுதியிற் கொண்டாடல் அதமம்.

பிரதோஷ சமயம் ரஜனிமுகவேளை, அதாவது மஞ்சள் வெய்யிற் காயும்போது, ஏகாதசியில் சிவபெருமான் விஷத்தையுண்டு, துவாதசியில் விழித்திருந்து, திரயோதசியில் நடனஞ்செய்த அவசரமாம், பிரதோஷகாலத்தில், சிவாலயத்திற்குள் தேவர்களனைவரும் வந்திருப்பார்கள். ஆகையால் அப்போது சிவாலயத்தைத்தவிர்த்து வேறிடஞ் செல்வோர் நரகடைவர்.

பிரதோஷகாலத்தில் கணிகையரின் ஆட்டத்தைக் காண வந்தவரும் சிவஞானமடைவர்.

பிரதோஷத்தில், நந்தியின் இடப்பாகத்தைத் தொட்டுக்கொண்டு, அதன் கொம்புகளின் நடுவில் சிவபிரானைத் தரிசிக்கில் வினையனைத்தும் போம். பிரதோஷத்தில் வலம் வரில் பிணியெலாம் நீங்கும். அக்காலத்திற் செய்த சிவத்தொண்டு சிறிதாமாயினும் கோடானுகோடியாய்ப் பலனையளிக்கும்." என்று பிரதோஷ மகிமைகளைக் கூறினர்.

அதைக்கேட்ட இலவன், பிரதோஷகாலமே இராசசூய யாகத்திற்கு நல்லதினம் என்று தீர்மாணித்துக்கொண்டு காஞ்சியை விட்டுத் திருவொற்றியூருக்குப் புறப்படும்போது அவனது அன்பை வெளிப்படுத்தற் பொருட்டு திருவருளால் நிறைய மழைபெய்யத் தொடங்கியது; மழை மிகுதியால் வெள்ளந்திரண்டு ஓடியது, அதனால் வழியே தெரியாமல் தடமாடும்படி நேரிட்டது.

அதைக்கண்ட இலவன், பிரதோஷகாலம் நெருங்கியது மழையோ சிறிதும் விடவில்லை. பிரதோஷகாலத்தைக் கடந்து நான் திருவொற்றியூருக்குச் செல்வதைவிட இறத்தலே நலம் என்று துணிந்து தனது வாளையுருவித் தனதுகழுத்தை வெட்டிக்கொள்ள முயன்றனன்.

கருணைக்கடலாகிய திருவொற்றியூரீசர் அருண்மேலிட்டால் உடனே இடபவாகனரூடராய் இலவனுக்கு அவ்விடத்திலேயே காட்சி கொடுத்தருளினர்.

அக்காட்சியைத் தனது கண்குளிரக்கண்ட இலவன், எந்தாய்! இவ்விடம் இது முதல் "இலவனூர் பேறூர்" என வழங்கிவரல் வேண்டும். [இது சென்னையிலிருந்து பூவிருந்தவல்லிக்குப் போகும் வழியில் போரூர் எனப்படுகின்றது.]

இங்குத் தேவரீர் சுயம்புவாகத் திருக்கோயில் கொண்டெழுந் தருளல் வேண்டும், என்றிரந்தனன். சிவபெருமான் அவ்வாறே வரமளித்துவிட்டு மறைந்தருளினர்.

பின்னர், இலவன் அங்கிருந்து திருவொற்றியூரையடைந்து தீர்த்தமாடி படம்பக்கநாதரையும், வடிவுடையம்மையையும் பணிந்துபோற்றி, பிரதோஷகாலத்தில் அங்கு இராசசூயயாகத்தைச் செய்து நிறைவேற்றி, பலவித வரங்களைப் பெற்று அயோத்தியை யடைந்து இனிது அரசாட்சிசெய்து கொண்டு வாழ்ந்தனன்.

இலவன் வேள்விமகிமை முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

## எழுத்தறியும் பெருமான் மான்மியம்.

"அறத்தினைக் குறையென வகக்கணக் கெழுதுமா
றுறுத்தமாந் தாதன்முன் னொற்றியூர் நீங்கலென்
குறித்தல்கண் டயன்குளம் குளித்துநற் குமரனை
முறுக்கெனி னொற்றியூர் மொழிவதற் கெளியதோ."

மெய்த்தவர்காள்! பூர்வம் கிருதயுகத்தில் அரசாண்டு வந்த மாந்தாதா வென்னும் மன்னன், வஞ்சனையாற் பொருள் தேடாதவன். உண்மையை நாடுபவன். அரசநீதிப்படி உலகையாள்பவன். உடம்பெலாம் வெண்ணீறணி பவன். திருநீறில்லாதாரைத் தரிசியாதவன். சிவநேசன். சிவனடியார்க்குத் தாசன். பலவகைச் சிவதருமங்களைச் செய்பவன். குளம், சத்திரம். சிவவேள்வி முதலான தருமங்களையுஞ் செய்பவன்.

பெருங்கீர்த்தியும், அருஞ்சீர்த்தியு முடையவன். கல்வியிற் கடலான். செல்வப்பெருக்கான். சான்றோராற் சூழப்பெற்றவன் அத்தகைய, அயோத்தி நாடாண்ட மன்னன், மூப்படைந்து நரையுற்று, தசைவற்றி, பற்கள்வீழ்ந்து, சொற்கள் சோர்ந்து வருந்தும்போது,

ஒருநாள் சிலவஞ்சகரை நோக்கி, ஐயன்மீர்! யான் இன்னும் இங்குத்தன்புருவண்ணம் விரைவில் உடல்நீங்குமாறு செயற்பாலது யாது? என்றனன். அதற்கவர்கள் புண்ணிய மிகுந்த திண்ணிய மன்ன! நீர் செய்துவரும் புண்ணியங்கள் கேடுறும்படி ஒரு காரியத்தைச்செய்யில் அவ்வாறாகும் என்றனர்.

அதைக்கேட்ட மாந்தாதாவானவன், அவ்வார்த்தையை நம்பி, கருணீகனை (கணகனை) யழைத்து, "நீ உடனே சென்று சிவத்தலங்கட்கு நான் நடத்திவரும் தருமங்களையெல்லாம் குறைத்துக் கணக்கெழுதிவிட்டு வருவாயாக" என்று ஆணையிட்டனன்.

கருணீகனும், அவ்வாறே எழுதி அக் கணக்கேட்டையும் அரசன்பால் கொடுத்தனன். அதைப்பார்க்க, அதில் "திருவொற்றியூர் நீங்கலாக" என்று எழுதியிருந்ததைக் கண்டு வெகுண்டு கருணீகனைத் தண்டிக்க முயன்றனன்.

கருணீகன், ஐய! திருவொற்றியூர் நீங்கலாக, என்னும் எழுத்து எனது கையெழுத்தன்று, என்று இரந்துகூற, அரசனும் பார்க்குங்கால் அதுமாத்திரம் வேறொரு கையெழுத்தாக இருந்ததைக் கண்டு கோபந்தணிந்து, அதையடித்து விட்டு அவ்வேட்டைத் தனது அரண்மனையிலுள்ள ஒரு அறையில் வைத்து மூடிவிட்டனன்.

மறுநாள் அந்த ஏட்டை யெடுத்துப்பார்க்க மீண்டும் அவ் வெழுத்து அவ்வாறே யிருந்தது. அதைக்கண்டு வியப்புற்றவ னாய் இது தெய்வீகமாகிய எழுத்தென்று தெளிந்து 'திருவொற்றியூர்ப்' பெருமானுடைய மகிமையையுணர்ந்து உடனே திருவொற்றியூரையடைந்து தனது மனையாளுடன் திருவீதியில் நடந்துவந்து, பிரமதீர்த்தமாடி, படம்பக்க நாதரைப் பணிந்து முன்போல் இளமைப்பருவத்தை யடைந்தனன்.

அதைக்கண்ட மாந்தாதா, பேருவகை பொங்க, சுவாமி சந்நிதியினின்றுகொண்டு போற்றி, மங்களகுணங்கள் நிறைந்த மாதேவ! எங்களை அடிமை கொள்ளுதற்குத் திருவுளத் தெண்ணி, கணக்கேட்டில் வரிப்பிளங்கெழுதிய எழுத் தறியும் பெருமானே! நின்கருணை இருந்தவாறென்னே? என்னையாண்டருளுவாய் என்று பலவகையாக வழுத்தி, "இளமைதந்த நாயனர்" என்னுந் திருநாமத்தால் ஒருசிவலிங்கத்தை அங்குத்தாபித்து, பூசித்து, பல்லாயிரங்கோடி தருமங்களை திருவொற்றியூரிற் செய்துவிட்டு, அயோத்தியை யடைந்து அரசாண்டு கொண்டிருந்து முடிவில் கைலையை யடைந்து சிவனடியில் வாழ்ந்தனன். இது தீர்த்த மகிமை யெனவும்படும்.

பெருமானர் எழுத்தறிந்த மான்மிய முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# தியாகேசர் மான்மியம்.

"ஆரூருக் கருகிலுற்ற வாடகத் தலத்த மர்ந்த
ஏரூரு மந்தணருக் கேலேல சிங்க னிடம்
சீரூரும் மணியளிக்கச் செய்த வருட்டிறம் வாய்ந்த
தேரூரும் மாணிக்கத் தியாகர்நலஞ் செப்பரிதால்."

சீவன் முத்தர்களான முனிவர்காள்! முன்னொருகாலத்தில் அந்தணர் குலத்திற் சிறந்த இரண்டு வைதிகசைவர்கள், வடமொழியில் இரண்டு பதிகங்களைப் பாடிக்கொண்டு, சிவலோகமாகிய திருவொற்றியூருக்கு வந்தார்கள். அங்குள்ளார், அவ் வடமொழிப் பதிகங்களைக்கேட்டு மகிழ்ந்து, அதன் பொருட்டுப் பரிசுகொடுத்தனர். ஆனால் அவர்கள் அதில் விருப்பில்லாதிருந்தனர்.

அப்போது திருவொற்றியூரிலுள்ளார், ஐயன்மீர்! நீவிர் வாழுமிடம் யாது? இங்குவந்தகாரணம் என்னை? நாங்கள் அன்போடளிப்பதை ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம் என்ன? என்றனர்.

அதற்கு அவ்விருவரும், அன்பர்காள்? நாங்கள் வாழும் ஊரோ, ஆடகபுரியாம், அதன்மகிமையைக் கேட்பீர்களாக:— முன்னர் ஏழு முனிவர்கள், கலிகாலக்கொடுமைகளினின்றும் தப்பித்துக் கொள்ளுதற்கு, பிரமனிடம்போய் வேண்டிக் கொள்ள, பிரமன், கருணைக்கடலாகிய பரசிவனிடத்திற்செல்லுமாறு செலுத்த, பரசிவன், ஆடகபுரியையடைந்து தவஞ்செய்யில் கலிகாலக்கொடுமை தொடராதென்று கட்டளையிட்டருளினர். அவ்வாறே ஏழுமுனிவர்களுஞ்சென்று தவஞ்செய்கின்ற தலம் ஆடகபுரியாம்.

மற்றும், அரிதுயிலமர்ந்த மாயோனுடைய உந்தியக் கமலத்தில் எழுந்த பிரமனை, மாயோன் இவ்வாடகபுரிக்கு அனுப்பித் தவஞ் செய்விக்க, பிரமன் தவஞ்செய்து வேதாகமங்களின் உண்மையையுணர்ந்து படைப்புத்தொழிற்கு ஆற்றலையடைந்து கொண்டது இத்தலத்திலாம்.

அகத்தியரால் உண்டாக்கின, தீர்த்தம், நதி, சிவகங்கை, சூரிய சந்திர தீர்த்த முதலாயின இத்தலத்திலிருக்கின்றன.

மற்றும், திருத்தண்டலை, திருவாய்மூர், திரு இடும்பை, வேதாரணியம், திருக்களரி, திருக்கோட்டூர், திருத்தெங்கூர் முதலான அரிய பெரிய சிவத்தலங்களாற் சூழப்பெற்றது இத்தலம்.

முசுகுந்த மன்னனாற் செய்யப்பெற்ற பலதிருப்பணிகளையுமுடையது.

நாங்கள் பலவகையாய்த் தேடிய பொருளை இத்தகைய ஆடகேசுரருக்கே அருப்பணஞ் செய்வோம்.

இந்த ஆடகபுரி என்பது திருவாரூர்க்குத் தென்புறத்திலுள்ளது.

அத்தகைய ஆடகேசுரப் பெருமானுக்கு நாங்கள் செய்துள்ள இரத்தினமாலைக்கு நடுநாயகமணி ஒன்று அகப்படாமையால் சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டிருந்தோம் அப்போது, "திருவொற்றியூருக்குச் சென்றால் அவ்வண்ணமாகிய மணி கிடைக்கும்," என்று அசரீரிவாக்கெழுந்தது; ஆதலின் இத்தலத்திற்கு வந்தோமென்றனர்.

அதைக்கேட்டவர்கள், அப்படியானால், அந்தணர்காள்! நீங்கள் படம்பக்க நாதராகிய திருவொற்றியூரீசர் சந்நிதியில் அவ்வடமொழிப் பதிகங்களை விரித்துரைக்கில் உங்களுடைய எண்ணம் நிறைவேறி விடும் என்றனர்.

அவ்வாறே அவ்வந்தணச் சிறுவர்கள் திருவொற்றியூ ரீசர் சந்நிதியில் அவ் வடமொழிப்பதிகங்களை அரங்கேற்றுங் கால், எந்தையராகிய கருணைநிதிக்கடவுள் சிவச்சின்னங்களை நிறைய அணிந்துள்ள ஒரு சிவத்தொண்டராய்த் திருமேனி தாங்கி எழுந்தருளி வந்து, வித்துவ சிரோமணிகாள்! நீங்கள் விரும்பிய இரத்தின மணியைத் தேடிக்கொடுக்கின்றேன் வாருங்கள் என்று, திருமயிலையிலுள்ள ஏலேலசிங்க செட்டி யாரிடம்போய், எங்கட்கு சில இரத்தினங்கள் வேண்டு மென்று அவரைக்கேட்க, செட்டியார் வணக்கத்தோடு தன் னிடத்திலுள்ள அரிய பெரிய இரத்தினங்களை யெல்லாங் கொண்டுவந்து அவர்கள் முன்வைத்து விட்டனர்.

அதைக்கண்டு, இவற்றுள் யாம் வேண்டிய இரத்தின மணி இல்லையென்றனர், ஐய! அரசனுக்கென்றே ஒரு இரத் தினம் வைத்திருக்கின்றேன் என்றனர். அற்றேல், அதைக் காட்டுவீராக என்றனர். அவ்வாறே அதைக்காட்ட, அந்த ணர்கள் பார்த்து இதுவே எங்கட்கு வேண்டிய தென்றனர்.

உடனே, வந்த சிவனடியார் அம்மணியை யெடுத்து அந் தணர் கையில் கொடுத்துவிட்டு மறைந்தருளினர்.

ஏலேலசிங்கர் இதைக்கண்டு இது திருவருள் விளையாட் டென எண்ணிக்கொண்டு தனது மனைக்குட்சென்று விட்டனர்.

அந்தணர்களும், அம்மணியை எடுத்துக்கொண்டு இங்கு வருங்கால், கள்ளர் அதைக்கவர நினைக்க, இடையில் ஒரு வெள் ளத்தை யுண்டாக்கிக் கள்ளர்களைத் தடுத்தருள, திருவொற்றி யூரை யடைந்து படம்பக்கநாதரைப் பணிந்து போற்றிக் கொண்டு ஆடகபுரியை யடைந்தனர்.

இதையுணர்ந்த சிலர், அரசனிடஞ்சென்று, "மன்ன! தங் கட்கென்று வைத்திருந்த விலையிலா மாணிக்கத்தை ஏலேல

சிங்கர் ஒரு அந்தணருக்குக் கொடுத்து விட்டனர்" என்று சொல்ல, உடனே அரசன்மிக வெகுண்டு செட்டியாரை அழைப்பித்துக் கேட்க, செட்டியார், ஐய! இரத்தினம் தயாராய் இருக்கிறது நல்லநாள் அன்மையின் கொண்டுவரவில்லை நாளைக்குக் கொடுக்கின்றேன் என்றனர். அதைக்கேட்ட மன்னன் கோபந்தணிந்து அப்படியேயாகுக, நீர் போகலாம் என்று அனுப்பி விட்டனன்.

பின்னர், செட்டியார் தனது வீட்டிற்குவந்து, அதுவே ஏக்கமாய் இடையறுது சிவத்தியானத்தையே செய்து கொண்டிருந்தனர். அப்போது அவதிர நித்திரையில், "பயப்படற்க நினது பெட்டியில் இரத்தினம் இருக்கின்றது" என்று திருவருட் கனவுகண்டு விழித்து, பரசிவனைச் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென ஏவலாள் வந்து செட்டியாரைக் கொண்டுபோய் அரசன் முன்னிலையில் விட்டு விட்டனன்.

அரசன், மிக வெகுண்டு இரத்தினம் எங்கே! என்றனன், ஐய! நான் பெட்டியைத்திறந்து இரத்தினத்தை எடுத்துக் கொண்டு வருவதற்குள் ஏவலாளர்கள் என்னை மடக்கிக் கொண்டு வந்து விட்டார்கள் என்றனர்.

அற்றேல், அப்பெட்டியை இங்கு வரவழைக்கலாமென்று ஏவலாளரை அனுப்பி அதைக் கொண்டுவந்து சேர்க்க, செட்டியார் கருணைக்கடலாகிய சிவபெருமானது தியானத்துடனே பெட்டியைத் திறந்தனர். அப்பெட்டியில் ஒரு பைநிறைய மாணிக்கங்களிருந்தன; அவற்றுள் ஒன்றை எடுத்து அரசன் கையில்கொடுத்தனர்.

அரசன் மிகமகிழ்ந்து செட்டியாரே! இன்னும் ஒரு மாணிக்கத்தை எடும் என்றனன், இவ்வாறே அநேக இரத்தினங்களை பார்த்தவுடன் கண்கள் கூச, மன்னன் அன்பின் மிகுதியால் செட்டியாரைக் கட்டியணைத்துப் பாராட்டி, அவரது மனைவரை காலால் நடந்து சென்று பலவுபசாரங்கள் புரிந்து திரும்பினன்.

செட்டியாரும் திருவொற்றியூர் மாணிக்கத்தியாகரை வாழ்த்திக் கொண்டே இனிது வாழ்ந்து, இம்மை மறுமைப் பயன்களை யடைந்து உயர்ந்தனர்.

தியாகேசர் மான்மியம் முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.



## பட்டினத்தடிகள் முத்திபெற்ற மான்மியம்.

முனிவர்காள்! அப்பால் ஐயர் திருவொற்றியூரை யடைந்து, திருவொற்றியூரானைக் கருதிக்கருதிய மனத்தினும் கடிது வருவார்.

இவ்வாறிருக்குங்கால் திருவொற்றியூர்ப் பெருமான் திருவருளமுதம் ஊறிப்பெருகவே.

“ கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதா
மண்டத்தைப்போல் வழிகியதாம்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு.”

என்ற தனி வெண்பாப்பாட்டை பாடிக்கண்ட சராசர முழுவதும், குருலிங்க சங்கமங்களாகக் கண்டு ஆராமை மிக அன்பு பெருக,

" வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்க ளெல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈதுசிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றியூர். "

என்ற திருவெண்பாவாற் றுதித்துப் பன்முறை பணிந்தெழுந்து, திரு எல்லையைக் குறித்து வணங்கி உட்புகுந்து திருவீதி யடைதலும் தம்மை யறியாமெழுந்த பேராசைக்கடலுள் மூழ்கி,

" ஒடுவிழுந்து சீப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கொண்டேன்—கடுவருந்துந்
தேவாதிதேவன் திருவொற்றியூர்த் தெருவிற்
போவாரடியிற் பொடி. "

என்ற தனித்திரு வெண்பாவை யோதி, மேலும் மேலும் அடங்காக்காத லெழுந்தமையின்.

" சுடப்படுவாரறியார் புரமூன்றையுஞ் சுட்டபிரான்
றிடப்படுமாமதிற் றென்னொற்றியூரன் றெருப்பரப்பில்
நடப்பவர் பொற்பத நந்தலை மேற்பட நன்குருண்டு
கிடப்பதுகாண் மனமே விதியேட்டைக் கிழிப்பதுவே.

என்று துதித்து, அத்திருவீதியை அங்கவலம் வந்து சந்நிதியையடைந்து, அடியவர் தங்களுக்கு ஆராவமுத னென்னும் திருவொற்றியூரானை அடங்காத அன்பு பெருக விழியான் முகந்துண்டு அருட்கடலிலலைந்து அழுந்தி உடல் குழைய என்புநெக்கு விட்டுருகக் கரைந்து கரைந்து கண்ணீருங் கம்பலையுமாய்க் கைகளுச்சிமேல் வைத்து,

திருவொற்றியூர்க் கோவை.

" இருநிலமடந்தை யியல்பினி லுடுத்த
வொருகடன் மேகலை முகமெனப் பொலிந்த
வொற்றி மாநக ருடையோய்,

என்றெடுத்து அகவலொருபா வொருபதாகிய ஒற்றியூர்த் தொகையைப்பாடி முடித்துத் துதித்து, தம்வசமிழந்து பரவச முற்று நெடுநேரம் நின்று பின்தெளிந்து பிரியாவிடைபெற்று மீள்வார், படம்பக்கப் பெருமானுர் திருவடியிலே,

"ஐயுந்தொடர்ந்து விழியுஞ்செருகி யறிவழிந்து, மெய் யும் பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவன் யான், கையுந்தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவுங் கற்பியுமே."

என்று விண்ணப்பித்து, அரிதுபுறம் போந்து, திருவெல்லை யைப் பிரியாதவராய், சாக்கிர முதலிய ஐந்தவத்தைகளையுங் கடந்து, அருளுக்குத் தம்மையுணவாக்கி, முழுவதும் விழுங் கப் பட்டாராய், தத்துவ முழுவதும், இச்சைவழி பணிகேட்ப, பிரணவமே திருவுருவாக அருட்சகசம்பிறக்கவே உலகில் பேயாகப் பசுமேய்க்குஞ் சிறுவரோடுகூடி ஆடியும்பாடியும் பலவிளையாடல் புரிந்திருக்கு நாளில், முதல்வன் முறையீடு, அருட்புலம்பல், இறந்தகாலத்திரங்கல், நெஞ்சொடு புலம்பல், அருட்புலம்பல், பூரணமாலை, நெஞ்சொடு மகிழ்தல், உடற் கூற்று வண்ணம் என்னும் நூல்களை அருளிச்செய்து, பசுநிரை மேய்க்கும் அச்சிறுவரோடு கூடி, மணற்குன்றிலும், புன்னைச் சூழலிலும், பலவிளையாடல் செய்து வீற்றிருக்கு நாளில், ஐந் தெழுச்சருச்சனை முறைப்படி செய்து திருவருளுக்குத் தம்மை முற்றும் உணவாக்கி, தத்துவமுழுவதுந் தம்மியல் வேறுபட்டு அருள் வடிவாய்த் தம் வசப்படவே, தாம், பஞ்சாவத்தையை யுங்கடந்து, பஞ்சபூத காரியமாகிய தூலவுடம்பே பஞ்சாக்கர காரியமாகிய மந்திர சரீரமாகத் திரிந்து நின்றது.

அப்போது, திருவெண்காட் டடிகளும், உடன்விளையாடும் சிறுவர்களை நோக்கி, சிறுவர்காள்! நுங்கட்குச் சில விநோதங் காட்டுவோம், எம்மை, ஒரு குழி, கெல்லி அதிற்புதையுமென அவர்களுக்குக்கூற, அவர்களும் அவ்வாறே புதைத்தவுடன்,

வியப்புண்டாம்படி வெளிப்பட்டு அடிகள் வேறோர் மணற்குன்றின்மீது நின்றனர். அது கண்டு அவர்கள் மனங்களித்து, மீட்டும் மீட்டும் புதைக்கப் புதைக்க வெளிப்பட்டு நின்று பராக்குக்காட்டி அப்பால் ஒருவிசை புதைக்க, இவர் வெளிப்படாமல் சிவலிங்கமாய் முளைத்து நின்றார். அப்போது சிறுவர்கள் கண்டு வியப்பும், அச்சமும் அடைந்து ஊரிலுள்ளவர்களுக்கு நடந்தவற்றை அறிவிப்ப, அவர்கள் யாவரும் திரண்டு வந்து அவ்வற்புதத்தைத் தத்ததமது கண்கள் செய்த தவப்பயன் பலிக்கும்படி தரிசித்தனர், பூமழையும் பொழிந்தது தேவதுந்துபி முழங்கிற்று, முனிவரும் சிவனடியவரும் அரகரவென்று முழங்கினர். உலகெலாம் பேரானந்த வெள்ளத்தில் மூழ்கின. இம்முத்தியே முடிவான முத்தி நிலையாம், என்று முனிவர்களுக்குச்சூதர் அருளிச்செய்தார்.

பட்டினத்தடிகள் முத்திபெற்ற மான்மியம் முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.



# இராமலிங்க சுவாமிகளின் திருவொற்றியூரான் உபாசனை மான்மியம்.

இராமலிங்கப் பெருமானார் செல்வ மிகுந்தோங்கும் சென்னைக்கு அணித்தாயும் ஆளுடைய நம்பி, ஆளுடைய பிள்ளை

யார், ஆளுடைய அரசு, என்னும் மூவர் தமிழ்க்கொண்ட முது மையுடையதாயும், சுந்தரமூர்த்தி சுவாமிகளை, சங்கிலி நாச்சியார் மணவாளராகக்கொண்ட மாண்புடையதாயும், மாணிக்கத் தியாகர், இளமைதந்த தியாகர், எழுத்தறியும் பெருமானர், வியாகரண வியாக்யானேசுரர் முதலான திருநாமங்களைப் பூண்ட மூர்த்திகளை யுடையதுமாகிய திருவொற்றியூரை யடைந்து நாடோறும் நியதமாய்அத்தல விருக்ஷமாகிய அத்தி மரத்தடியில், அசையாதமர்ந்து, ஐம்புலனடக்கி, தம்புல மறந்து, ஒற்றியூர்ப் பெருமானையும், திரிபுரசுந்தரி யம்மை யாரையும், அநன்யமாய் உபாசித்துவந்தனர்.

ஒருநாள், தம்முடைய மாணவர்கள் பலரும் தம்மைச் சூழ்ந்துவரத் திருவொற்றியூருக்குச் செல்லும் இராமலிங்கப் பெருந்தகையார், இடைவழியில் மழைவந்தமையால் குறுக்கு வழியாக அவர்களுடன் நுழைந்தனர்; நுழைந்த அக்கணமே அனைவரும் திருவொற்றியூரி லிருந்தனர்.

மற்றொருநாள், ஒற்றியூர்ப் பெருமானைத் தரிசித்துவிட்டு இராமலிங்கப் பெருந்தகையார் ஓரிடத்தில், கண் துயில, அதனையறிந்த கள்வனொருவன், இவரருகில்வந்து வலதுகாதி லிருந்த கடுக்கனைக் கழற்றினன். அதனையறிந்த இராமலிங்க சுவாமிகள் இடது காதையும் திருப்பிக்காட்ட அக்கள்வன் அக்காதிலிருந்த கடுக்கனையும் கழற்றிக் கொண்டுபோய் விட்டான்.

இவ்வாறாக நம்முடைய வாழ்வின் பொருட்டாகத் தம் முடைய வாழ்வை விடுத்த தயாநிதியாகிய இராமலிங்கப் பெருமானர், சதாநிட்டைகூடி சகசவாழ்விலிருந்துவரும் நாளில், ஒருநாள் திருவொற்றியூரினுள்ள பட்டினத்தடிகளின் ஆலயத்திற்கு அருகிலிருக்கும் குளத்திற்கருகே சென்றனர்.

அங்குப் பலநாட்களாகப் பட்டினத்தடிகளின் ஆலயத்திதொண்டு புரிந்து வந்த, வயது முதிர்ந்த ஒரு அம்மையார் இராமலிங்க சுவாமிகளை நோக்கி, அடிபணிந்து அன்போடு, ஐய! அடியாள் உய்யுமாறு ஒரு அற்புதநெறியைக் காட்டியருளல் வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, உடனே பெருமானுர் அம்முதியாளின் அரிய பக்குவ நிலையையுணர்ந்து ஒருபிடி மணலை வாரி அவர் கையிற்கொடுத்து மூடிக்கொள்ளுமாறு பணித்தனர். அவ்வம்மையாரும் அவ்வாறே மூடிக்கொள்ளத், தாம் அவ்விடத்தைவிட் டகன்றுவிட்டார். அகன்றவுடன் அவ்வம்மையார் தமதுகையைத் திறந்துபார்க்க, அம்மணலெல்லாம் சிறுசிறு சிவலிங்கங்களாவே தோன்றின; தோன்றவும், அகமிக மகிழ்ந்து அன்று முதல் இராமலிங்க சுவாமிகளிடத்தில் அளவிலா அன்புடையராய் வழிபட்டு வந்தனர்.

இத்தகைய மேம்பாடுகளையுணர்ந்து இராமலிங்க சுவாமிகள் ஒற்றியூரையடைந்து பெருமானுரைப் பணிந்து எழுந்து மனங்கசிந்து ஆனந்தபாட்பம் இருகண்களிலும் ததும்ப,

“ சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தைவினை தொலைத்துன் மொய்குழற் காளாக்காதே
நிந்தையுறு நோயா னிகழவைத்த நீதியதோ
எந்தைநீ யொற்றி யெழுத்தறியும் பெருமானே,

என்றற் றொடக்கத்து அரியபாடல்களைப்பாடி வழிபட்டு வந்தனர்.

இவ்வாறு பலநாள் திருவொற்றியூரை யடைந்து வழிபட்டுச் சென்னையம்பதிக்குவந்துகொண்டிருக்கும்போது ஒரு நாள் மாலை, மிக நேரமாகி விட்டபடியால் தமது மனைக்குவந்து பார்க்க, தமையனரின் மனைவி முதலியோர்கள் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே உறங்கி விட்டனர்; அப்போது

சுவாமிகள் அகாலத்தில் வீண் தொந்தரை ஏதுக்கென்று வெளியில் படுத்துக் கொண்டனர். படுத்துக்கொண்டு சிறிது நேரஞ்சென்ற பின்னர் தமது அன்னையாரைப் போன்று ஒரு மாது வந்து, அப்பா! மைந்த! அன்னம் உண்பாயாக என்று அன்போடு அன்னம் படைத்தனர் இராமலிங்க சுவாமிகளும் களிப்புடன் அருந்தினர்.

அதன் பின், சிலநிமிடத்தில் சுவாமிகளின் அண்ணியார் கதவைத் திறந்துகொண்டு வெளியில்வந்து, ஐய! இதுவரை ஏன் அன்னம் அருந்திலீர் என்றனர். அதைக்கேட்ட சுவாமிகள் இஃதென்னை வியப்பாயிருக்கிறது? நீர்தானே இப்போது அன்னம் படைத்தீர் என்றனர். அதைக்கேட்ட அம்மையாரும், அன்னமிட்டருளிய அம்மையார் திரிபுரசுந்தரியாராகிய தேவியாரே என்று தெளிந்து மனம் நடுங்கி சுவாமிகளுக்கு மெய்த்தொண்டு செய்து வந்தனர்.

இவ்வாறு திருவொற்றியூர்ப் பெருமானை வழிப்பட்டு அருள்பெற்ற வலியாலன்றே இராமலிங்க சுவாமிகள் எல்லாம் வல்லராய்த் திகழ்ந்தனர்.

## இராமலிங்கசுவாமிகளின் உபாசனை மான்மியம்

முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

# திருவொற்றியூரான் அடிமை.

## அருள்பெற்ற மான்மியம்

அகத்தியமாமுனிவரின் கமண்டலநீரை, கணபதி காக்கையாய்க் கவிழ்க்க, அஃதொரு ஆறுய்ப்பெருகவே, அக்கன்னியை, கவேரன் எடுத்து வளர்த்தமையின் காவேரி யென்னுந் திருநாமம்பூண்ட காவிரியாறு பாய்ந்து வளர்ந்த, கமுகு, கதலி, தெங்கு, பலா முதலான பற்பல சோலைகள் நிறைந்ததும், வயல்களில் நெற்குவியல்கள் குன்றுகள்போன்று குவிந்து கிடப்பதும், 'சோழநாடு சோறுடைத்து' என்றபடி சோறு மிக் குடையதும் சோழனால் ஆளப்பெற்றது மாகிய சோழ நாட்டின் நாப்பண், பொற்பூணின் நடுவில் மணியைப்போலும், நற்காட்சியுடுக்களுள் மதியம்போலும் நனிதிகழ்வதும், பராச முனிவரின் அமுதபுட்கரணி, வசிட்டதீர்த்தம், உமையின் மாலையாலுதித்த மணிமுத்தாநதி, சிவகங்கை, விண்ணாறு, (வீணன் வெட்டிய ஆறு) என்பது முதலான தீர்த்தங்களால் அழகுற்றதும், திருநாவுக்கரசர் திருவாய்மலர்ந்தருளிய தஞ்சைத் தளிக்குளத்தீசர், பெருவுடையார் (பிருகதீசர்) பெரிய நாயகி (பிருகதாம்பிகை) கருவேல நாதர் என்பது முதலான தேவர்களால் சிவமணங்கமழ்வதும், வசிட்டர் முதலான மகரிஷிகளால் தவப்பயன் பழுத்ததும், 'சமிவனம்' என்று வழங்கப் பெற்றதுமாகிய தஞ்சைக் கருந்திட்டைக்குடி யென்னும் புண்ணிய தலத்தில், மந்தாரடி செல்லப்பிள்ளையார் கோவில் வீதியில், வேளாளர் மரபிற்குத் திலகமாய்த்திகழும் பஞ்சநாதம்பிள்ளை என்னும் திருநாமம்பூண்ட ஒருவர், சுந்தரம்மாள் என்னும் தமது கற்புடைய மனைவியாரோடு,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்,
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்றவாங்கு, இல்லறம் நடாத்தி வந்தனர். அவ் வம்மையார், முற்பிறப்புக்களிற் செய்த பெரும்புண்ணியப் பேற்றால் கௌசல்யை இராமனைப் பெற்றது போன்று, பஞ்சநதிகளும் ஒருகடலில் ஒன்று சேருமாறு ஐந்தாவதாக ஒரு ஆண் குழந்தையைப் பெற்றனர். பெற்றவுடன், ஏனைய குழந்தைகளை யீன்ற தினின்றும் இக்குழந்தை யுதித்தவுடன்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்"

என்ற திருவாக்கின்படி தன்னை யுணராமலே பேருவகை கொண்டனர். இது,

"எழுபிறப்புந்தீயவை தீண்டா பழிபிறங்கா
பண்புடைமக் கட்பெறின்".

என்றதை, அவ் வம்மையாரின் உள்ளத்தில் திருவருள் தோற்றுவித்தாற் போலும்?

மற்றும், இராமன், சிவபெருமானை வழிபட்டுப் பெரும் புகழ்பெற்றது போன்று, இக்குழந்தையும் சிவ வழிபாட்டில் நாயன்மார்களைப் போன்று வன்றொண்டராய்ப் பெருங்கீர்த்தி வாய்ந்து இனிது வாழ்ந்துவரு மென்பதைத் திருவருள் விளக்கியதால் 'இராமசாமி' என்னுந் திருப்பெயரைச் சூட்டினர்.

இக்குழந்தை வித்தை கற்கவேண்டிய பருவத்தில், சிவ குருநாதர் இனிய தண்டமிழ்க் கல்வியைக் கற்பித்ததுடன், மார்க்கண்டன் போன்று மாபெருஞ் சிவ வழிபாட்டையும் நடிக்கும் வகையால் பிடித்துக்கொள்ளும் பேருதவியையுஞ் செய்தருளினர்.

அக்காலத்தில், அங்குள்ள கருவேலநாதர் சந்நிதியில், மறையோது மொலிகேட்டு இச்சிறியார் விருப்பத்துடன் அங்குச் சென்ருல் மறையந்தணர் பொருமை கொண்டு வெருட்டுவர், அப்போது, இச்சிறியாருக்கு, அந்தோ! வேதப்பொருளை யறியுமாறு திருவருளுண்டாங்காலம் எதுவோ? என்று மனம் வருந்துவர். இவ்வெண்ணமே பின்னர் வேதங்களைத் தமிழில் மொழி பெயர்க்க வித்தாயிருந்தது. இவ்வாறு, இச்சிறியார் பதினறு பிராயம்வரை தனது பிதாதேடிய ஊதியத்தால் வாழ்ந்து, பின்னர் நாம், தஞ்சன் போரிட்டதும், பஞ்சம் தருவதுமாகிய இவ்வூரை விட்டு, சென்னன் ஆண்டதும், செல்வம் பூண்டதுமாகிய சென்னைபுரியை யடையில் நலம்பெறலாமெனக்கருதி தனியராய்ச் சென்னைக்கு வந்து விட்டனர்.

அப்போது, இவர் முற்பிறப்பிற்செய்த புண்ணிய வசத்தால் செல்வப் பிள்ளையாரின் செல்வத்திருவருளும் இவரது உள்ளத்தில் வாசனை வடிவாய் வந்துவிட்டது. ஆனல் அது இவர்க்குத் தெரியாது.

சென்னையம்பதிக்கு வந்து.

“ நீரினும் நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பம்—தேரின்
நிரப்பிடும்பையாளன் புகுமே புகையும்

புகற்கரிய பூழை நுழைந்து.” என்றபடி, சில வியாபாரத் துறையிற் புகுந்து, அறநாசினும், பொருளுல் வசிதென்பதற்கியை சிறிது பொருளீட்டி வந்தனர்.

பின்னர், செம்மானைக் கைக்கொண்டான் திருவருளால், அம்மானுக்கு அன்புண்டாக, திருச்சியிலுள்ள சீரார் காவிரியின் பாலுதித்துச் செல்வக்குறியாய்த் திகழ்ந்துவளர்ந்த மீனம்பாளை மணஞ்செய்வித்தனர். இது இராமனுக்குப் பேரன்புடன் மீனைக் கொணர்ந்தளித்த குகன் கதையை நோக்கில் இராமன் அன்போடு மீனை யேற்றுக் கொண்டமையைக் குறிப்பிக்கின்றது.

இவ்வாறு, மீனம்பாளும், இராமசாமியென்னும் திருவொற்றியூரான் அடிமையாரும், இராமனுஞ் சீதையும்போல், உடல் வேறாயிருப்பினும் உயிர் ஒன்றாகவே யிருந்து கட்கிமை போல் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு இரண்டொரு மக்களு முதித்தனர்.

இவ் விராமசாமித் தொண்டர். பலவகை வியாபாரஞ் செய்து வரினும், யோகம்பயிலல், நூல்கற்றல், அடியார்க்குணவிடன் முதலிய வழிபாடுகளையுஞ் செய்துகொண்டு சிவ வழிபாடு முதலான நல்லறங்களிலேயே விருப்புடையராய் ஒழுகி வந்தனர்.

மற்றும், "ஆற்றுப்பெருக்கால் அடி சுடு மந்நாளும், ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்" என்றவாங்கு தனது வாழ்நாளில் வீழ்நாள் படாது நல்லதையே செய்து வந்தனர்.

பின்னர் "தொண்டரைத்தாமே தூய கதியினிற் சேர்ப்பன்" என்றபடி திருவொற்றியூர்ப் பெருமானார், பட்டினத்தடிகள், இராமலிங்க சுவாமிகள் முதலானோருக்கு அருள் செய்தது போன்று அருள்செய்யத் திருவுள்ளங் கொண்டு, சிவ வழிபாட்டில் ஊக்கமுண்டாக்கி நாடோறும் திருவொற்றியூரையடைந்து இறைஞ்சி வருமாறு அநுக்கிரகித்தனர்.

பின்னர், திருவொற்றியூர்ப் பெருமானாரின் திருவருளால், அவ்வுலகை யாளுதற்குரிய அருள், ஏற ஏற, இவ்வுலகை யாளுதற்குரிய பொருளும் ஏறி ஏறி வந்தது.

எல்லாம்வல்ல இறைவனார், தமது திருக்கடைக் கண்ணோக்கால் வறியோனையும் குபேரனுக்குவமரென்றால் தமது அடியார்க்குப் பொருட்செல்வத்தை யளித்தல் அரிதாமோ ?

மற்றும், பொருளோடுவதோடு, இவ்விராமசாமித் தொண்டருக்குத் திருவருளால், அருள், கல்வி, ஞானம், தயை, பொறை, கொடை முதலான பெருங்குணங்களெல்லாம் ஞான அரசாட்சிக்கு அங்கங்களாய் இனிது அமைந்தன.

மற்றும் இத்தொண்டர், செல்வமிகுந்து, இடம்பொருளேவல் விரிந்து திடம்படு குறுமன்னர்போல் இருந்தும் செருக்கென்பது சிறிதுமிலாது, திருவொற்றியூரானுக்கு அடிமை பூண்டு, சிவத்தொண்டு செய்தல், சிவனடியார்க்கு அன்பு செய்தல், சுற்றம்பேணல், அறிவுடையார் மாட்டு அன்பு பாராட்டல், வறியார்க்கிரங்கல், வள்ளலாய் வழங்கல், கல்விச்சாலை புரிதல், மறைபயில்வித்தல் முதலானவைகளிலேயே தமது பொருளைச் செலவிட்டு வந்தனர். நல்குரவுற்றூர்க்குச் செல்வநலந்தோன்றுமென்றதற்கும்,

"கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளாலயத்துக் கீந்தும்,
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டுவந்தும்,
வைப்பென இரப்போர்க் கீந்தும் வருபவருளரேற் கூற்ற,
மொய்ப்புயந் தண்டந்தப்பி முன்னவனின்பந் தாழ்வார்,"

என்ற திருவாக்கிற்கும் இலக்கியமா யிருந்தனர்.

அஃதன்றியும், உலகில், மாயோனுடைய மனைவியாகிய செல்வத்தை, அன்பர்களுக்குள் யாண்டேனும் ஒரு அன்பரிடத்து வைக்கு மிடத்து, அவ்வன்பர் அறியாமையால், செல்வமாகிய விஷ்ணுவின் மனைவியைத் தனதாகப் பாவித்துத் தடுமாறுவது போலலாது, இச்செல்வமாது விஷ்ணுவின் மனையாளாதலின் நமது என்பதே கூடாதெனவுணர்ந்து விஷ்ணுவின் வடிவரான அடியார்களுக்கும், அரன்பணிக்கும் ஆக்கிவந்தனர்.

இவ்வாறு, திருவொற்றியூரையடைந்து நாடோறும் வழிபட்டு வருங்கால், ஒருநாள் அங்குள்ள பிரமதீர்த்தமாடியெழுந்தபோது ஒரு சிவனடியார் வந்து, "ஐய! தாம், திருவொற்றியூரானிடத்தில் பேரன்புடையா ராதலின், இவ்வாலயத்தைப் புதுப்பிக்கில் நலம்" என்றனர். அதைக்கேட்டு, இது திருவொற்றியூரான் கட்டளையே யென்று சிரமேற்கொண்டு திருவொற்றியூரான் ஆலயத்தைப் புதுப்பிக்கத் தொடங்கி முறையாய், பூசை, திருவிழா, திருவிளக்கு முதலானவைகள் நடந்து வருமாறுஞ் செய்தனர்.

அதன் பின்னர்,

"ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர், ஓதுந்திருவொற்றியூர்" என்ற வாங்கு, இது சிவலோகமென்ற துணிவோடு இடை விடாமல் பன்னிரண்டு வருடம் ஒரு நியமமாய் நாடோறும் திருவொற்றியூரானைப் போற்றி வழிபட்டு வரல் வேண்டுமென்று மனத்துட் கொண்டு அவ்வாறே ஒழுகி வந்தனர். இதுபோன்றே திருமகளும் விடாமல் நாடோறு நினது வீட்டிற்கு நான் வருகின்றேன் என்று வந்து கொண்டே யிருந்தனள்.

இவ்வாறு, திருப்பணி நடந்தேறி வருவதோடு இவரது நியமும் தவறாது நடந்து வந்தது.

இப்படி நடக்கும் நாளில், இவ்விராமசாமித் தொண்டரது பக்தியை கண்ணப்பர் பத்திபோன்று மிக உறுதிப்படுத்தியருளத் திருவுளங்கொண்டு, இவரது மக்களை இழக்கு மாறு செய்ததுடன், இவர் நியதப்படி காலையில் திருவொற்றியூர்க்குப் போகுந்தருணத்தில் ஒருபுத்திரனது உயிர் துறந்து போமாறு செய்தருளினர். அதுகண்ட இத் தொண்டாளர் அப்பூதியடிகள்போன்று புத்திரன் இறந்து கிடப்பதைப் பொருட்படுத்தாது நியமப்படி திருவொற்றியூருக்குச் சென்று எந்தையாரைப் பணிந்து போற்றி நியமத்தை முடித்துக் கொண்டு வந்து மகற்கு வேண்டிய இறுதிக்கடனைச் செய்தனர். அம்ம! அம்ம! இவரது மனவுறுதி, எடுத்துரைக்கற்பாற்றோ?

"இறக்கினும் இன்றே இறக்குக என்று
மிருப்பினு மிருக்குக வேந்தன்
ஒறுக்கினும் ஒறுக்க வுவகையு முடனே
யூட்டினு மூட்டுக வானிற்
சிறக்கினும் சிறக்க கொடியதீநரகிற்
சேர்கினுஞ் சேருக சிவத்தை
மறக்கிலம் ............"

என்று, திருவாதவூரடிகள் திருவாய்மலர்ந்தருளியது இவர்பால் கண்கூடாமன்றோ?

இது தவிர்த்தும், மற்றொருநாள், இவரது செல்வப் பெருக்கானது, திருவொற்றியூரான் திருவருளால் வந்ததென் றுணராதார் சிலர், இவர்பால் பொறாமையுற்று, பெருவிரோத முற்றி இவரை எவ்வாற்றானுங் கொலைபண்ணலே நலமென உறுதிப்படுத்திச் சமயம் நோக்கிக் கொண்டிருந்தனர்.

அதற்கியையவும், திருவொற்றியூரான் திருவருள் விளக்க முறவும், இத்தொண்டரிடத்துள்ள பேரருளை உல கிற்கு அறிவுறுத்தவும், திருவருட் சம்மதப்படி, மாலையில் கடற்கரை சென்று சில நண்பர்களுடன் சகடவாயிலாய் கடற் கரைச் சென்று, அங்கு, கடலின் அருகிலுள்ள மணற்பூமியில் உட்கார்ந்து கொண்டு, கடலை நோக்கி, கடலானது, தன்பால் பல நதிகள் வந்து சேரினும், அவற்றைத் தன் மயமாக்கிக் கொண்டு, பெருகாது குறையாது கலங்காது தெளியாது ஒரு தன்மைத்தாகவே இருப்பதுபோன்று, பரசிவனும், பன்னெறி களும் முடிவில் தன் மாட்டுவந்து முடிவுறினும், தனதுண்மை யை யுணராதுவேறுபாடுகளாகக் கொள்ளினும், மறுக்கினும், மற்றும் பலவாறாக மாறுபாடாக்கினும், ஒரு தன்மைத் தாகவே எல்லாவுயிர்கட்கும் அருள்செய்கின்றனன்.

அங்ஙனமே இக்கடலில், அலை, நுரை, குமிழி முதலாயின உதித்தொடுங்குமாறு, பரசிவனிடத்தில் பிரமன் விஷ்ணு முத லான எல்லாவுயிர்களும் தோன்றி நின்று ஒடுங்குகின்றன என்றும், மற்றும், பலவாறாகவுஞ் சிந்திக்கொண்டிருக்குந் தரு ணத்தில், ஒருபகைவன் பின்புறமாகவே வந்து, வாக்குக் கர சரை வதைக்க வெண்ணிய சமணரைப்போன்று, வாள் கொண்டு இவர்க ழுத்தைக் குறியாக்கி வெட்டினன்; திருவரு ளானது அவ்வெட்டுச் கழுத்திற்படாமலே தவறி விட்டது. மீண்டும் இரண்டொரு முறை வெட்டினும் அவ்வெட்டுகள் திரு வருளால் இராமசாமித் தொண்டர்மீது படாமலே சிலவிடத் தில் மிக எளிதாய்ப்பட்டது. அதற்குள் திருவருள் வலியால் அவனுடையகண்கள் மூடுமாறு செய்ய அவனும் மண்மீதுவிழ அப்பகைவனுடைய கையிலிருந்தவாளும் இம்மெய்த் தொண் டரின் கைக்குவந்து விட்டது. அதற்குள் நண்பரும்வந்து

சூழ்ந்தனர். அந்தோ! பகைவனுடைய தீச்செயல்கள் மெய்த் தொண்டன்பாற் செல்லுமோ? தருமந் தலைகாக்குமென்றதும் பழுதாமோ? அம்ம! அம்ம! திருவருட்பெருமை இருந்தவா றென்னே! கற்றுணை பூட்டிக் கடலிற் பாச்சினதையும், சுண்ணம்புச் சூளையில் வைத்து எரித்தன் முதலானவற்றையும் எளிதினீக்கியருளிய பேரருட் பெருமைக்கு இதுவும் ஒரு அரியதாமோ? 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார், என்பது உண்மையன்றோ? இதுவும் தடிந்தாட் கொள்ளுந் தனிப் பெருங்கருணைபோலும்?

இவ்வணம் வெட்டுண்டபோதும் ஆங்கிலமுறை வைத்தியர் பலர் தடுத்தும் கேளாமல் அன்றே திருவொற்றியூரையடைந்து சேவித்து வந்தார். இத்தகைய மெய்த்தொண்டரை நாயன்மார்களுள் ஒருவராக எண்ணில் இழுக்கென்னை?

இவ்வாறு சிறிதுநாட்சென்ற பின்னர், வெட்டத்துணிந்த வீரப்பகைவனும், ஒட்ட முயன்ற தீரப்பகைவனும், மற்றுமுள்ள எல்லாப் பகைவர்களும், திருவருளால் இவ்விராமசாமித் தொண்டரையே சரணடைந்தனர். அருள் வலியானது மருள் வலியிற் பெரிதன்றோ?

இங்ஙனம் பன்னிரண்டு வருடங்களாக தாம் எடுத்துக் கொண்ட நியதம் முடிந்ததுடன் திருப்பணியும் உற்சாகத்தோடும் அன்போடும் நிறைவேறியது.

திருவொற்றியூரான் திருவருளால் இத்தொண்டருக்கு, செல்வந் தழைத்து, தயை மிகுந்து, அருள்சுரந்து, கொடை உயர்ந்து, இவரது வாழ்நாளும் தவநாளாகக் கழிந்து வந்தன.

இவருக்குள்ள மக்கள்கள் இறந்த பின்னர், இறந்த மக்களின் அறிவின் வலிமைகளனைத்தும் ஒரு உணர்வாய்வந்தமையப் பெற்ற ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்தனர்.

அக்குழந்தை, மாதா பிதாக்களுக்குக் கண்போன்றிருத்தலானும், கண்ணன் போன்று சிவபக்தியில் மிகச்சிறப்புறு

மென்னுங் குறிப்பானும், நந்தகோபனுக்கும் யசோதைக்கும் பிறந்த கண்ணபிரான் போன்றிருந்ததாலும் கண்ணன் என்னும் காரணத் திருநாமஞ் சூட்டினர்.

அக் கண்ணனுக்குக் கல்வி கற்பிக்க வேண்டிய காலத்தில் கல்வி கற்பித்து வைத்தனர். அக்குழந்தையும் திருவொற்றியூரான்றிருவருளால் இளமதிபோன்று நாளுக்குநாள் வளர்வதுடன் அறிவு விளக்கத்தையும் பெற்று விளங்குகின்றது.

இவ்வாறு, இவ்விராமசாமித் தொண்டர், தமக்குத் திருவொற்றியூரான் திருவருளால் செல்வந்தழைக்கத் தழைக்க, அவரது திருப்பணியையுங் கருங்கல்லால் இழைத்து இழைத்து, கருப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், உட்பிரகாரம் முதலான திருப்பணிகளை தேவரும் விரும்புமாறு செய்து முடித்தனர்.

மற்றும், சனகாதிகளும், பட்டினத்தடிகள், பத்திரகிரியார், இராமலிங்க சுவாமிகள் முதலான ஞானிகளும், தும்புரு, கின்னரர், நாரதர் முதலானோர்களும், ஏனையதேவர்களும் மெய்யுணர்வடைந்து பொய்ப்பிறப்பையொழித்திருந்த இன்பநிலையை விடுத்து,

"இறவில் எப்பதமும்பெற வேண்டிலேன் என்றும்
பிறவிவேண்டுவன்நின் திருப்பணி செயப்பெறின்"

என்று கூறிய வாங்கும்,

'வானிடத்தவரும் மண்ணில் வந்தரன் றனையருச்சிப்பர்'

என்றபடியும் இவ்வாலயத்தின் தம்பங்களில் நின்று கொண்டு திருவொற்றியூரானை வழிபடுகின்றன ரெனின்? இத்திருப்பணியின் பெருமை சொல்லுதற் கெளிதோ?

இராமன் சிவத்தொண்டர்களுள் முதற்றொண்டனைது போன்று திருப்பணியும் எல்லாத் திருப்பணிகட்கும் முதலாவதாய்த் திகழாநின்றது.

இவ்வண்ணம், திருவொற்றியூரான் அடிமையின் திருப்பணிசெய்புந் திறமையை நோக்கி, திருவொற்றியூருடைய சிவபெருமானார், தமது ஆணையை முன்னிட்டு மணமுடித்துக்

கொண்ட சுந்தரர் பழுதுற்றமைகண்டு ஊன்றுகோல் கொடுத்தருளினர். அத்தலம் திருவெண்பாக்கம் எனப்படும்; அத்தலத்தையும் இப்பணியாளரைக் கொண்டே திருப்பணி செய்து கொள்ளத் திருவுள்ளத் தெண்ணிச் செய்வித்துக் கொண்டருளினர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த திருவொற்றியூரான் ஆலயத்திற்கு, தாது௵ வைகாசி௴ 18௳ அதாவது ஆங்கிலம், கி-பி, ஆயிரத்துத் துளாயிரத்து முப்பத்தாறும் வருடம் மேமாதம் முப்பத்தோராந் தெய்தியில், எண்ணில் பொருள் செலவிட்டு கண்ணிற்காணாத காட்சியாக, மண்ணிலுள்ளார் வந்துசூழ, விண்ணிலுள்ளாரும் விரும்புமாறு கும்பாபிடேகஞ் செய்து முடித்தனர்.

இவர் தமது பெயரால் ஒரு சிவலிங்கப் பிரதிட்டையுஞ் செய்து வைத்துள்ளார்.

மற்றும், இக் கும்பாபிடேகமகோற்சவத்தில் தமிழ்மக்கள் உய்யும் பொருட்டு, சாமவேதத்தைத் தமிழில் மொழிபெயர்ப்பித்து அச்சிட்டு நன்கொடையாகவும் அளித்தனர்.

திருவொற்றியூரான்டிமை அருள்பெற்ற மான்மியம்

முற்றும்.

---

வாழி.

“ஓதுநல் லொற்றியூர் பேருலகினிலோங்கி வாழ்க
பாதிவெண் மதிதரிக்கும் படம்பக்கநாதர் வாழ்க
மாதுநங் கருணைஞான வடிவுடை யம்மைவாழ்க
பூதிகண்டிகையைப் பூணும் புனிதநல்லடிமை வாழ்க.

திருவொற்றியூர்ப் புராண சாரம்

முற்றிற்று.

---